முகவுரை

2022-2023ஆம் நிதியாண்டு மார்ச்சுத் திங்களில் ‘தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்டம்’ , தமிழ்நாடு அரசினால் நான்காண்டுத் திட்டமாக உருவாக்கப்பட்டது. தமிழ் வளர்ச்சிமற்றும் செய்தித் துறையின்கீழ் உருவான இத் திட்டம், தமிழ்நாடு அரசின் பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மேற்பார்வையில் சூலை1,2022 முதல் செயல்பட்டு வருகிறது.

இத் திட்டம், தமிழுக்கும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையில், தமிழிலும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலும் வழங்கும்ஒப்புமையுடைய வேர்ச்சொற்களைத் தக்க அலுவலர்களைக் கொண்டு முதற்கண் தொகுத்து வருகிறது. வேர்ச்சொற்களின் தொகுப்புப்பணி நிறைவுறும் நிலையில், அதன் அடுத்த கட்டமாக நூலாக்கப் பணி தொடங்கப்பட்டுள்ளது. அவ் வகையில், இத் திட்டத்தின் வாயிலாகப் பல தொகுதி நூல்கள் தொடர்ந்து வெளியிடப்படும். ஒவ்வொரு தொகுதி நூலும் நிரலே தமிழிலும் ஆங்கிலத்திலுமாக இருமொழியிலும் வெளியிடப்படும். தமிழின் பெருமையைத் தமிழ் மட்டும் அறிந்த தமிழர்கள் அறியவும், தமிழும் ஆங்கிலமும் நன்கு அறிந்த தமிழரும் தமிழர் அல்லாதாராகிய ஆங்கிலம் அறிந்தார் அறியவும் இந் நூல்கள் உதவும்.

கீழை இந்தோ-ஐரோப்பியச் சமற்கிருதம், இந்தி, வங்காளம், மராத்தி, குசராத்தி, பிகாரி, பஞ்சாபி, ஒரியா, சிங்களம் போன்ற மொழிகளின் சொற்களுக்கும் மேலை இந்தோ-ஐரோப்பிய ஆங்கிலம், செருமன், பிரெஞ்சு, இத்தாலி, டச்சு, சுபானிஷ் போன்ற மொழிகளின் சொற்களுக்கும் தமிழ் வேர்ச்சொற்கள் மூலமாகியிருப்பதை இவ்

ஆய்வு நிறுவும். ஆதலின், உலகப் பொதுமொழியாகிய ஆங்கிலத்தில் இவ் ஆய்வு வெளிவருவது சாலச் சிறப்புடையது.

மொழித்தோற்ற வரலாறு

ஆப்பிரிக்காவில் இரண்டு இலக்கம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றி உலகெங்கும் பரவிய அறிவுமாந்த இனம் (Homo-sapiens)60ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே இந்தியாவிற்கு வந்து சேர்ந்துவிட்டது.

The history of all humankind begins approximately 2,00,000 years ago when the first anatomically-modern humans are thought to have appeared in Africa. Then, around 60,000 years ago, a band of people ventured out of Africa, into the Middle East, branched out into India and Europe, and ultimately settled all over the planet, replacing other early human populations.

-The Origins of Indians, Fountain Ink, December-2013, p.44

மொழி, ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றியிருக்கவேண்டும் என்று ஸ்டான்போர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் ரிச்சர்டு க்ளீன் எழுதியிருப்பதாக 'Human Evolution: An Illustrated Introduction' நூலில் அதன் ஆசிரியர் ரோஜர் லெவின் எடுத்துரைத்துள்ளார்.[1]

மூலச்சொற்கள் உருவான வரலாறு

மொழியின் தோற்றம் பற்றி 'The rise and fall of languages'நூலின் 'Sudden development' என்னும் பகுதியில்அதன் ஆசிரியர் டிக்சன்(R.M.W. Dixon), 'மொழி உருவாவதற்கு முன்னமே மனிதனுடைய மூளை தெளிவாகச் சிந்திக்கவும், பொருட்களை வகைப்படுத்தவும் திறன்பெற்றிருந்தது. பின்னர், மொழி தோன்றியபோது சில சொற்கள் ஒலிக்குறிப்புச் சொற்களாக அமைந்தன. பறவைகள் எழுப்பும் ஒலியின்மூலம் அவற்றுக்குப் பெயர் அமைந்தமை, மரம் முறியும்பொழுது ஏற்படும் ஒலியின்மூலம் 'split'என்னும் சொல் தோன்றியமை போன்றவை இவ் ஒலிக்குறிப்புச் சொற்களின் வழியின. ஒலியின் அடிப்படையிலேயே

பெரியனவற்றைக் குறிக்க 'oo'என்ற ஒலியும், சிறியனவற்றைக் குறிக்க 'ee'என்ற ஒலியும் அவ்வச் சொற்களில் அமையப்பெற்றன. பொருட்களுக்குப் பெயர்கள் வைக்கப்பட்ட நிலையில், மொழி ஒரு பெருவெடிப்பாகத் தோன்றிச் சொற்களையும் அச் சொற்களை இணைக்கும் இலக்கண விதிகளையும் பெற்றது.

மொழியில் உருவான அடிப்படைச் சொற்கள், ஒரே தலைமுறையில் தோன்றாமல், தொடர்ந்து தலைமுறை தலைமுறையாகத் தோன்றின. மனிதமூளை ஒரு கட்டத்தில் மொழியைப் பயன்படுத்தும் திறனை அடைந்ததும் அக் காலப்பகுதியில் மொழிவளர்ச்சி முழுமை அடைந்தது ' என எழுதினார்.[2]

இந்தோ-ஐரோப்பிய மொழியாய்வு அறிஞர் மாக்சு முல்லர்(Max Muller),'Lectures on The Science of Language' நூலில் 'மொழியின் தோற்றம் மற்றும் அதன் பரவலைக் குறித்து எவ்விதக் கருத்தினைக் கொண்டிருந்தபோதிலும், மொழியின் அடிப்படைக் கட்டமைப்பில் புதிதாக எதுவும் சேர்க்கப்படவில்லை. மொழியின் வடிவங்களில் மட்டுமே மாற்றங்கள் நிகழ்ந்தன. புதிய வேர்களோ சொல்லாக்க முறைகளோ பின்வரும் தலைமுறையினரால்ஒரு சிறு அளவில் கூட உருவாக்கப்படவில்லை'[3] என மொழியில் வேர்ச்சொற்களின் முதன்மையை விளக்கினார்.

அறிஞர்கள் இவ் இருவரின் கருத்துகள் , மொழிகளின் மூலத்தையும் மொழிகளின் சொற்களின் மூலத்தையும் ஆய்கின்ற ஆய்வாளர்களுக்குப்பெருந்துணை புரிவனவாக உள்ளன.

வேர்ச்சொற்களில் மொழி உறவுகள்

மொழியின் பயன் கருத்துப் பகிர்தல். மொழியில் கருத்து, சொற்களாலேயே உருவாகிறது. ஒரு மொழியில் சொற்கள், பல்லாயிரக் கணக்கில் இருக்கும். ஆயின், அப் பல்லாயிரக் கணக்கான சொற்களுக்கும் சில நூறு சொற்களே வேர்ச்சொற்களாகவும் மூலச்சொற்களாகவும் இருக்கும். ஒரு மூட்டை நெல் நாற்றாகி, நூறு மூட்டை நெல்லினை விளைவிக்கிறது. ஒரு மாங்கொட்டை, ஆயிரம் மாங்கனிகளைத் தருகிறது. இயற்கையில் ஒன்று பலவாதல் இயற்கை.

ஒரு மரத்தினடியில் அதன் வித்துகள் வீழ்ந்து பற்பல மரங்கள் உருவாகின்றன. ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரம் தோன்றுவதுபோல், தொன்றுதொட்டுத் தொடர்ந்து வரும் ஒவ்வொன்றும் ‘மரபு’ எனப்படுகிறது. ‘வாழையடி வாழை’ என்ற வள்ளலாரின் தொடரினை மரத்திற்கும் மரபிற்குமான உறவிற்குப் பாவாணர் எடுத்துக்காட்டுவார். ஒரு மரத்திற்குப் பல்வேறு கிளைகள் உண்டு. அவ்வாறே, ஒவ்வொரு குடும்பத்திற்கும் உறவுகள் பல உண்டு. இவ் உறவுகளைக் கிளைகள் என்று கூறுவது தமிழ்மரபு (கிளை – கிளைஞர் - உறவினர்).

மக்களினத்தில் வழியினத்தவர் தோன்றும்போது, மூதாதையர் மறைந்துவிடுவர். அதனால், இப்பொழுது வாழ்கின்றவர்களை ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்களுடன் உறவுபடுத்திக் கொடிவழி உறவினைக் காட்டமுடியாது. ஆயின், மொழியில், ஒரு வேரிலிருந்து பற்பல சொற்கள் தோன்றினாலும், அப் பல சொற்கள் தோன்றுவதற்கும் காரணமான வேர் இறந்துவிடுவதில்லை. இந்த அடிப்படை உண்மையை மொழியாய்வு அறிஞன், அடையாளம் கண்டு, பலநூறு சொற்களுக்கும் மூலமான ஒரு வேரினைக் கண்டு, வேரினையும் அவ் வேர்வழிப் பிறந்த சொற்களையும் உறவாக்கி இணைத்துவிடுகிறான்.

‘மக்களைப் போன்றே, சொற்களும் குடும்பங் குடும்பமாகவும், குலங்குலமாகவும், இனம் இனமாகவும் கொடிவழி (genealogical)முறையில் இயங்குகின்றன ’ (வேர்ச்சொற் கட்டுரைகள் - 1,முன்னுரை, ப.xxxiii)என்ற பாவாணர் கூற்று வேர்ச்சொல்லின் வரலாற்றையும் வேர்ச்சொல்லிலிருந்து பிறந்த சொற்களின் வரலாற்றையும் சிறப்பாக உரைக்கின்றது.

இந்தோ-ஐரோப்பிய மொழியாய்வு அறிஞர் மாக்சு முல்லர் (1823-1900), உலக மொழிகளை மூன்று பெருங்குடும்ப மொழிகளாக(macro-family) முதற்கண் பிரித்தார்.தொடக்கத்தில், மொழிக்குடும்பங்கள் அனைத்தும் சேர்ந்த ஒரு பெருமொழிக்குடும்பம் மட்டுமே இருந்திருக்கவேண்டும் என்பது மூலமொழி அறிஞர்களின்(Nostratic scholars) கருத்தாக உள்ளது. மூலமொழி, பல்வேறு காலக்கட்டத்தில் பல்வேறு மொழிகளாகப் பிரிந்தது

வரலாற்று உண்மையே. ஒவ்வொரு மொழியும் காலப்போக்கில் ஒவ்வொரு தனிச்சிறப்பினை வரலாற்றில் பெற்றதும் உண்மையே. ஆயின், எல்லா மொழிகளுக்கும் இடையில் பொதுவில் சொல்லுறவுகள் உள்ளன என்பது ஒப்பீட்டு மொழியாய்வு அறிஞர்கள் கண்ட உண்மை ஆகும்.

மேலை இந்தோ-ஐரோப்பிய மொழிகள் , இன்று தனித்தனி மொழிகளாக வரலாற்றில் பிரிந்து தனித்தனி அரசுகளாக நிலைபெற்று அவை வரலாறாகிய போதும் , இவ் அனைத்தும் மேலை இந்தோ-ஐரோப்பியம் என்னும் ஒரு பொதுப்பெயரில் இணைவதற்கு இம் மொழிகளுக்கு இடையில் அமைந்த பொதுவிலான சொற்பொருள் ஒற்றுமையே காரணம் ஆகும்.

அவ்வாறே, கீழை இந்தோ-ஐரோப்பியச் சமற்கிருதத்தை மேலை இந்தோ-ஐரோப்பிய மொழிகளுடன் இணைப்பதற்குக் காரணம், இவ் இரண்டிற்கும் இடையிலான சொற்பொருள் ஒற்றுமையே ஆகும். பாவாணர், தமிழுக்கும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையில் சொல், பொருள் உறவிருப்பதை இரு மொழிக் குடும்பங்களுக்கும் இடையில் அமைந்த மூல உறவாகவே கருதினார். வடமொழி வரலாறு நூலில்(ப. 54), ‘பண்பட்ட மொழியில் ஒரு கருத்தைத் தெரிவிப்பது பெரும்பாலும் சொற்றொடரேயாயினும் ஒவ்வொரு மொழியும் சொற்களாக வன்றிச் சொற்றொடர்களாகத் தோன்றாமையால், உண்மையில் மொழி என்பது முழுநிறைவான சொற்றொகுதியே’ என எழுதியிருப்பது சொல்லுறவே மொழியுறவாகவும் ஆகும் என்னும் ஆழஞ்சான்ற கருத்துரையாகும்.

இந்தோ–ஐரோப்பிய மொழிக் குடும்பம்

உலகமொழிகள் சற்றொப்ப 7000என்றும் அவை ஏழு-எட்டுப் பெருமொழிக் குடும்பங்களுள் அடங்குவன என்றும் மொழியறிஞர்கள் உலக மொழிகளை வகைப்படுத்தியுள்ளனர். உலகமொழிக் குடும்பத்தில் இந்தோ-ஐரோப்பியம் 60விழுக்காட்டு மக்கள் பேசும் பெருமொழிக் குடும்பம்எனச் சேம்பர்சு அகராதி எழுதியுள்ளது (ப.1265).

சமற்கிருதமும் மேலை இந்தோ–ஐரோப்பிய மொழிகளும்

1583இல் இங்கிலாந்தைச் சார்ந்த தாமசு ஸ்டீவன்சு (Thomas Stephens)என்னும் ஏசு சபைப் பாதிரியாரும் 1585இல் கோவாவில் இருந்த பிலிப்போ சாசெசி (Filipo Sasseti)என்னும் இத்தாலிய வணிகரும் சமற்கிருதத்திற்கும் கிரீக்கு, இலத்தீன் மொழிகளுக்கும் இடையிலுள்ள சொல்லொப்புமைகளை முதற்கண் கண்டு தெரிவித்தவர்களாவர்.

1768இல் புதுச்சேரியிலிருந்த ஏசுசபையைச் சேர்ந்த கோலர் தூக்சு (Colur Doux)என்ற பாதிரியார், சமற்கிருதமும் ஐரோப்பிய மொழிகளும் ஒரே மூலத்திலிருந்து தோன்றியவை என்ற கருத்தைத் தெரிவித்தார்.

1786இல் சர் வில்லியம் ஜோன்சு (Sir William Jones) கிழக்கிந்தியக் குழும ஆட்சிக்காலத்தில் கல்கத்தாவில் தலைமை அறமன்ற நடுவராக இருந்தவர். இவர், இவ் இருமொழிக் குடும்ப உறவுகளை விரிவாக ஆய்ந்துரைத்தவர்.

கீழை இந்தோ–ஐரோப்பிய மொழிகள்

140கோடி மக்களைக் கொண்டஇந்தியாவில் பேசப்படும் நூற்றுக்கணக்கான மொழிகளை இந்தோ-ஐரோப்பியம், திரவிடம், ஆஸ்ட்ரோ-ஆசியாடிக், சீனோ-திபெத்தியன் ஆகிய நான்கு மொழிக்குடும்பங்களில் மொழியறிஞர்கள் அடக்குவர். இந்தியாவில் பேசப்படும் மொழிகளில் இந்தோ-ஐரோப்பியம் பேசுவோர் பெரிய எண்ணிக்கையினர். இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் சமற்கிருதமே மூத்த முதன்மொழி என்பர். இச் சமற்கிருதத்தின் கிளைமொழிகளாகப் பாலி, பிராகிருதம், இந்தி, குசராத்தி, மராத்தி, வங்காளம், பஞ்சாபி, ஒரியா, சிந்தி, கொங்கணி போன்ற பல மொழிகளைக் குறிப்பிடுவர். சமற்கிருதம், மேலை இந்தோ-ஐரோப்பிய மொழிகளுடன் உறவுடைய மொழி ஆதலால், அதனைக் கீழை இந்தோ-ஐரோப்பியம் என்ற பெயரால் மொழியறிஞர்கள் குறிப்பிடுவர். இதனை,

Aryan family separated and became divided into two different branches, the south-eastern comprising the languages of India and Persia, and the north-western comprising Greek, Latin, Celtic, Slavonic and Teutonic.

-Biographies of Words and the home of the Aryas, Max Muller, p.85

என்னும் மாக்சு முல்லர் கூற்றால் அறியலாம்.

தமிழ்–இந்தோ–ஐரோப்பிய வேர்ச்சொல் உறவு

தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் உறவினை முதற்கண் எழுதியவர் கால்டுவெல் (1814-1891) ஆவார். 1856இல் வெளிவந்த அவரின் ‘திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (A Comparative Grammar of the Dravidian or South-Indian Family of Languages)’ என்னும் நூல், இவ் இரு மொழிக்குடும்பத்திற்கும் இடையிலான சொல் உறவுகளை ஆழமான ஆய்வின் அடிப்படையில் வெளிப்படுத்தியது. கால்டுவெல் வழியில் நல்லூர் ஞானப்பிரகாசர் (1875-1947),இவ் ஆய்வினைத் தொடர்ந்தார்.

தமிழ்நாட்டில் ஞா. தேவநேயப் பாவாணர் (1902-1981)வேர்ச்சொல் ஆய்வினையும் தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் உறவினையும் வாழ்நாள் பணியாக மேற்கொண்டார். ‘ஒப்பியன் மொழிநூலி’ன் முன்னுரையில், தாம் மேற்கொண்டுவரும் ஆய்வு, தமிழின் உலக முதன்மையை நிலைநாட்டத் துணைசெய்யும் என நம்பினார். அதனை, ‘உலக மொழிகள் எல்லாவற்றையும், ஆரியம்(Aryan),சேமியம்(Semitic),துரேனியம்(Turanian)என்னும் முப்பெருங் குலங்களாக மாக்சு முல்லர் (Max Muller) பிரித்துள்ளார்.அவற்றுள், துரேனியத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் திரவிடக் குடும்பத்தின் மொழிகளைத் திறம்பட வகுத்துக் காட்டியவர் கால்டுவெல். இங்ஙனமே பிறரும் பிற குடும்பங்களை வகுத்துக் காட்டியுள்ளனர். மேற்சுட்டிய முக்குலங்களும் ஒரு மூலத்தினின்றும் கவைத்திருக்க வேண்டுமென்று மாக்சு முல்லர் திட்டமாய்க் கூறியுள்ளார். அம் மூலத்திற்குத் திரவிடம் மிக நெருங்கியதென்று கால்டுவெல் கூறியுள்ளார். இக் கூற்றை என்னால் இயன்றவரை முயன்று மெய்ப்பித்திருக்கிறேன்’ என்று 1940இலேயே எழுதிய பகுதி இன்றும் சிறப்புடையதாகத் திகழ்கிறது.

கால்டுவெல் காட்டும் தமிழ் – இந்தோ–ஐரோப்பிய உறவு

கீழை, மேலை இந்தோ-ஐரோப்பிய அகராதிகள் காட்டுகின்றவேர்ச்சொற்கள் என்பன பெரும்பாலும் சொற்களாகவே

உள்ளன. அவர்கள் காட்டுகின்ற வேர்ச்சொற்களுக்கு உரிய முழுமையான மூலச்சொற்கள் தமிழில் உள்ளன. இவ் உண்மையினைக் கால்டுவெல் உணர்ந்து தமது நூலான 'A comparative grammar of the Dravidian or South Indian family of languages' நூலின் இறுதியில் 'Glossary Affinities'என்னும் பகுதியில் தமிழுக்கும் சமற்கிருதம் உள்ளிட்ட இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையிலான வேர்ச்சொல் உறவுகளைப் பட்டியலிட்டுள்ளார். இலத்தீன், கிரேக்கம் முதலான மேலை இந்தோ-ஐரோப்பிய மொழிச்சொற்களுக்குத் தமிழின் வேர்ச்சொற்களை மூலச்சொற்களாக முதற்கண் காட்டியவர் கால்டுவெல்லே ஆவார்.

தமிழுக்கும் இந்தோ-ஐரோப்பிய மொழிச்சொற்களுக்கும் உள்ள உறவினை Indo-European affinities – Sanskrit; Indo-European affinities - West Indo-European Families; Semitic Affinities; Scythian Affinitiesஎன நான்கு பெருந்தலைப்புகளில் தமிழ்ச்சொற்களைத் தலைப்புச்சொல்லாக அமைத்து அச் சொற்களுடன் உறவுடைய இந்தோ-ஐரோப்பிய, செமிட்டிக், சித்தியன் மொழிச் சொற்களை விளக்கியுள்ளார்.

ஸ்டீபன் ஹில்லியர் லெவிற்று(Stephen Hillyer Levitt)

பெனிசில்வேனியப் பல்கலைக்கழகத்தில் சமற்கிருதப் பேராசிரியராகப் பணியாற்றியவர் ஸ்டீபன் ஹில்லியர் லெவிற்று(Stephen Hillyer Levitt, 1943-2020).மூலமொழி ஆய்வறிஞராகிய(Nostratic Scholar) இவர் , தமிழுக்கும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையிலான வேர்ச்சொல் உறவினை வெளிப்படுத்தும் வகையில்' The Journal of Indo-European Studies, Journal of the Asiatic Society', 'Journal of the Oriental Institute'போன்ற ஆய்விதழ்களில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவர் எழுதிய ,'Is there a genetic relationship between Indo-European and Dravidian'என்னும் கட்டுரையும்(1998),'Some more possible relationships between Indo-European and Dravidian'என்னும் கட்டுரையும் (2000)'The Journal of Indo-European Studies'இதழில் வெளியாயின.

தமிழில், வேர்ச்சொல் ஆய்வு, தமிழ் வரலாறு, தமிழர் வரலாறு, வடமொழி வரலாறு பற்றியும் தொடர்ந்து எழுதிய பாவாணர், தமிழ்,

இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கு மூலம் என்னும் தான் கண்ட உண்மையை மேலை அறிஞர்களும் ஏற்கும் காலம் வரும் என்று எழுதினார். 1981இல், 79ஆம் அகவையில் பாவாணர் மறைந்தார். ஆயின், அவர் காலத்திற்குப் பிறகு, 2000ஆம் ஆண்டில் 'Some more possible relationships between Indo-European and Dravidian' என்னும் கட்டுரையில் பாவாணரின் ஆய்வுகளை மிக விரிவாக முனைவர் லெவிற்று மதிப்பீடு செய்து ஏற்பும் வழங்கியிருந்தார். மேலும், தமிழன் பிறந்தகம், தென் தமிழகமே என்னும் பாவாணரின் உயிர்மூச்சான கருதுகோளினை அப்படியே வழிமொழிந்து ஏற்றுக்கொண்டவர் முனைவர் லெவிற்று ஆவார். தமிழின் பழமையை, முதன்மையை ஏறுமுகக் கொள்கையை ஏற்பதன் மூலம் மட்டுமே மேலை அறிஞர்கள் உணரும் தகுதி பெறுவர் என்னும் பாவாணர் கருத்தினை முழுவதுமாக அவர் ஏற்றுக்கொண்டார்.

தெற்கே தோன்றிய தமிழ், தெற்கே திரவிடமாகவும் வடக்கே கொடுந்திரவிடமாகவும் திரிந்து அதுவே வடமேற்காகச் சென்று ஐரோப்பாவில் இந்தோ-ஐரோப்பியமாக மாற்றிற்று என்னும் பாவாணர் கருத்தினை ஒப்பும்வகையில், "A word for 'Horse' in Chinese and Dravidian"கட்டுரையில் லெவிற்று எழுதினார். ஆத்திரேலியப் பழங்குடிமக்கள் மொழியுடன் தமிழ் கொண்டிருந்த உறவினை ஏற்றுக்கொண்ட லெவிற்று, ஆத்திரேலியப் பழங்குடி மக்கள், அத் தீவில் 40,000ஆண்டுகளுக்கு முன்பு 300அடியாகக் கடல் மட்டம் தாழ்ந்திருந்த காலக்கட்டத்தில் தென் தமிழகத்திலிருந்து குடியேறியவர்கள் எனவும் அவர்களின் மொழிகளுடன் தமிழ் உறவுடையதாய் இருப்பது கருதித் தமிழ் 60,000ஆண்டுகளுக்கு முன்பே தென்னகத்தில் உருவாகியிருக்க வேண்டும் எனவும் மேற்குறித்த கட்டுரையில் லெவிற்று எழுதியுள்ளார்.

இதன் அடிப்படையிலேயே, ஸ்டீபன் ஹில்லியர் லெவிற்று, 'Nostratic as seen from south India'எனத் தமிழ் மூலமொழி என்னும் பொருளில் 'Mother Tongue'இதழிற்கு ஓர் கட்டுரையை எழுதினார். இக் கட்டுரையின் துணை ஆசிரியர்களாக இவ் அகராதித் திட்டத்தின் முதன்மைப் பதிப்பாசிரியரும் அறிஞர் பி. இராமநாதன் அவர்களும் உள்ளனர்.

தொல் இந்தியா – தமிழ் இந்தியா

கி.மு.3500முதல் கி.மு. 1500வரை இந்தியாவில் திகழ்ந்த சிந்துவெளி நாகரிகம் உலகின் பழமையான நாகரிகம். இச் சிந்துவெளி நாகரிகம், தமிழர் நாகரிகம் எனவும் இந்நாகரிகத்திற்கு உரிய தமிழ் மக்களே, ஆரியர் வரும்முன் இந்தியா முழுவதும் பரவி வாழ்ந்த தொல்குடி மக்கள் எனவும் தொடர்ந்துவரும் ஆய்வுகளால் மெய்ப்பிக்கப்பட்டு வருகின்றன.

திருத்தந்தை ஈராசு அடிகளார் கருத்து

திருத்தந்தை ஈராசு அடிகளார், தமிழ், இந்தியா முழுவதும் பேசப்பட்டு வந்த மொழி என்பதை,

My decipherment of the Proto-Indian inscriptions in Tamil (so they say) eloquently proves that Tamil was the only language spoken in the whole of India about five thousand years ago; the other languages sprang from it at a later period. (p.131)

எனத் தன் 'Studies in Proto Indo-Mediterranean'நூலில் தெரிவித்துள்ளார்.

வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர்கருத்து

தமிழினம் வரலாற்றில் எந்தவொரு தொல் இனத்திலிருந்தும் உருவாகிய வழி இனம் அன்று. அது 12,000ஆண்டுகளுக்கு முன் தொடங்கிய புதிய கற்காலத்திலேயே முழுநாகரிகத்துடன் தென்னகத்தில் நிலைபெற்ற குடியாகத் தோன்றி வளர்ந்த ஒன்றாகும் என வரலாற்றுப் பேரறிஞர் வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர், Pre-Historic South Indiaஎன்னும் நூலில் எழுதியுள்ளார்.

...the most important question relates to the originof the Dravidians. The Ethnologists and Anthropologistsbelieve the Dravidians to be a group of people coming toSouth India from the North-west, perhaps their originalhome being the Mediterranean region. But there is notmuch force in this argument which is purely speculative incharacter. There is one theory connecting the Dravidianswith the Semitics, another with Turanians, a third with theBrahuis and a fourth with the Mongolians. But none ofthem is

tenable. There is yet another theory that the wholeof South India can be roughly divided ethnologically intothree divisions (1) Pre-Dravidian, (2) The Mundas and (3) The Dravidians.

It seems to us that at the outset there is no case for a Dravidian race as such. The so-called Dravidians are absolutely indigenous and did not come to India from any part of the globe. They were indigenous in the sensethat the peoples of the Neolithic age and the Iron age as well found for themselves homes in the hills and jungles and pursued their hereditary profession. Others were more advanced and took to pastoral life and agricultural life. It seems to us that there was no distinction such as Pre-Dravidian and Proto-Dravidian or the Dravidian. All these were one and the lineal descendants of the peoples who came from the Neolithic age and beyond. Therefore, we can conclude that instead of building a superstructure of a so-called Dravidian race on the flimsy foundation of the theory of Proto-Dravidian or Pre-Dravidian, we may assume that all these people were autochthons and not alien to the soil. We can only speak of a Dravidian culture which left its mark not only on Mohenjodaro and Harappa but on the countries of the Mediterranean region or the Far East.

-ப.245-247

பிரித்தியானியக் கலைக்களஞ்சியக் கருத்து

திருத்தந்தை ஈராசு அடிகளார் கருத்தினைப் பெரிதும் ஒத்த வகையில், பிரித்தியானியக் கலைக்களஞ்சியமும்,

It is however well-established and well-supported hypothesis that Dravidian speakers must have been widespread throughout India, including the northwest region. This is clear because a number of features of the Dravidian languages appear in the Rigveda, the earliest known Indo-Aryan literary work, thus showing that the Dravidian languages must have been present in the area of the Indo-Aryan ones. The Indo-Aryan languages were not, however, native to India; they were introduced by Aryan invaders from the north.

Thus, a form of Proto-Dravidian or Proto-North Dravidian, must have been extensive in north India before the advent of the Aryans.

(The New Encyclopaedia Britannica, Vol.22, p.716)

என இக் கருத்தினை விளக்கியுள்ளது.

'மனோன்மணீயம்' சுந்தரம்பிள்ளை கருத்து

'மனோன்மணீயம்' நூலாசிரியர் சுந்தரம்பிள்ளை , அந் நூலின் பாயிரத்தில் பாடிய தமிழ்த்தெய்வ வணக்கத்தில் தமிழ்த்தாயின் பெருமைகளைப் போற்றிப் புகழ்ந்துள்ளார். நீண்ட அப் பாடலடிகளில், 'சதுமறையா ரியம்வருமுன் சகமுழுது நினதாயின்முதுமொழிநீ யநாதியென மொழிகுவதும் வியப்பாமே ' என்ற ஈரடிகள் குறிப்பிடத்தகுந்தன. 'கீழை இந்தோ-ஐரோப்பியர்கள் இந்தியாவிற்குள் நுழையும் முன், தமிழே! இந்தியா முழுவதும் நினது தாய்நாடாக இருந்தது. அவ்வாறெனில், இந்தியாவின் முதுமொழியாகிய உன்னை 'அநாதி' என்று யாம் மொழிகுவது வியப்பல்லவே' என்பது அப் பாடலடிகளின் பொருளாகும்.

பண்டைத் தமிழ் நூல்களில் பண்டைத் தமிழ்நாடு

'மன்னும் இமயமலை எங்கள் மலை; மாநிலம் மீது இதுபோல் பிறிதிலை' என்று இமயத்தின் சிறப்பினைப் பாரதியார் புகழ்ந்துள்ளார். 'வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்' என்ற தொல்காப்பியப் பாயிரம் (1-3), தமிழ்நாட்டின் எல்லையாக வடக்கே வேங்கடத்தையும் தெற்கே குமரியையும் குறிப்பிட்டது. இளங்கோவடிகளும் 'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்' (சிலம்பு.8.1-2) எனத் திருப்பதி மலையையும் கன்னிக்குமரிக் கடலையும் தமிழ்நாட்டின் எல்லையாகக் கூறினார். தமிழ்நாட்டின் நில எல்லை, ஒவ்வொரு காலத்திலும் மாறியுள்ளது. தமிழ்நாட்டின் வட எல்லை, இன்று திருப்பதியும் இல்லை.

'தென்குமரி வடபெருங்கல்குணகுட கடலா எல்லை' (மதுரைக்.70-71) என்று மதுரைக்காஞ்சி, பாண்டியன் நெடுஞ்செழியனின் முன்னோர்கள் ஆண்ட தமிழ்நாட்டினை எல்லைப்படுத்திக் காட்டுகின்றது. தெற்கே குமரியும் வடக்கே இமையமும், கிழக்கிலும் மேற்கிலும் கடலும் பாண்டிய முன்னோர்கள் ஆண்ட தமிழ்நாட்டின் எல்லைகளாகும். யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர

அரசனைக் குறுங்கோழியூர்கிழார் என்னும் புலவர், தாம் பாடிய புறநானூற்றுப் பாடலில்(17), ‘சேர அரசனின் முன்னோர்கள், தெற்கே குமரியையும் வடக்கே இமையத்தையும் கிழக்கிலும் மேற்கிலும் கடலினையும் எல்லையாகக் கொண்ட பெருநிலப் பரப்பினை ஆண்டார்கள்’ என்று புகழ்ந்துள்ளார்.

சங்க காலத்தில் தமிழ்நாட்டுப் பகுதிகள், சேர சோழ பாண்டியர்களின் ஆட்சிப்பகுதிகளாக இருந்தன. ஆயினும், இம் மூவேந்தர்களின் முன்னோர்கள் கங்கையையும் இமையத்தையும் ஆட்சி செய்த பெருவேந்தர்களாகச் சங்கப் பாடல்களிலும் சிலப்பதிகாரத்திலும் போற்றப்படுகின்றனர். பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்காட்டு மறையோன் என்பான் புகழ்ந்துரைக்கும் காட்சி சிலப்பதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளது. ‘பாண்டியப் பேரரசனே! பண்டைக் காலத்தில் உங்கள் முன்னோர் நாடாகிய குமரிநாட்டையும் அந் நாட்டில் ஓடிய பஃறுளி ஆற்றினையும் கடல் கொண்டுவிட்டது. அப்பொழுது, மனந்தளராத நும் முன்னோர்கள் வடக்கே கங்கையையும் இமையத்தையும் ஒருங்கே வென்று தங்கள் நாடாக்கிக்கொண்டு ஆட்சி புரிந்தார்கள்’ என்பதைப்
‘பஃறுளியாற்றுடன்பன்மலையடுக்கத்துக்
குமரிக்கோடுங்கொடுங்கடல்கொள்ள
வடதிசைக்கங்கையும்இமயமுங்கொண்டு
தென்றிசையாண்டதென்னவன்வாழி’ என மாங்காட்டு மறையோன் கூற்றாக இளங்கோவடிகள் பாடியுள்ளார்.

மேலும், அதே இளங்கோவடிகள், தமிழ்நாட்டு மூவேந்தர்களும் தங்கள் புகழ்மிக்க இலச்சினைகளான மீன்கொடியையும் புலிக்கொடியையும் விற்கொடியையும் இமையத்தின் உச்சியில் பொறித்தனர் என்பதனை ஆய்ச்சியர் குரவையில் ‘கயல் எழுதிய இமய நெற்றியின்அயல் எழுதிய புலியும் வில்லும் ’ என்று எழுதிய பகுதியும் இங்கு நினைக்கத்தக்கது.

திருக்குறளுக்கு உரை வரைந்த உரையாசிரியர்களில் பெரும் சிறப்பிற்குரிய பரிமேலழகர்,

வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று (குறள்.955)

என்னும்குறளுக்குத்தொன்றுதொட்டு வரும் பழம்பெருமை உடைய குடியில் பிறந்தவர்கள் வறுமையின் காரணமாகப் பிறர்க்குக் கொடுத்துதவும் பண்பிலிருந்து நெகிழமாட்டார்கள்என்ற வள்ளுவர் கருத்தினை விளக்கி எழுதிய இடத்தில், தொடர்ச்சியாக வருகின்ற குடிகளுக்கு உவமை கூறுமிடத்து, ' சேர, சோழ, பாண்டியர்என்றாற்போலப் படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டு வருதல் ' என்று எழுதினார் . தமிழினம் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட நீண்ட வரலாறு உடைய குடி என்பதைப் பரிமேலழகரின் இவ் விளக்கத்தில் அறிகிறோம்.

தமிழ் சென்று–வந்த வரலாறு

இலத்தீன், கிரேக்கம் முதலிய மேலை இந்தோ-ஐரோப்பிய மொழிகள் பலவற்றிலும் தமிழ் வேர்ச்சொற்கள் அடிப்படையாக உள்ளன என்பது உண்மையாயின் வரலாற்றில் இது எவ்வாறு நிகழ்ந்திருக்க முடியும் என்பது பெருங்கேள்வி அல்லவா? தொல் இந்திய நிலப்பரப்பிலிருந்து பல்லாயிரம் ஆண்டின்முன் சிறுசிறு கூட்டமாக இந்தியாவைத் தாண்டி வடமேற்காகச் சென்ற பல பிரிவினர், நெடுங்காலம் நடு ஆசியாவில் தங்கியிருந்தனர் என்றும் அவர்களில் ஒரு பிரிவினர் நான்காயிரம் ஆண்டுகளுக்குமுன் தாம் புறப்பட்ட தொல் இந்தியாவிற்குள் புதியவர்களாக நுழைந்தார்கள் என்றும் அவர்களே கீழை இந்தோ-ஐரோப்பியர்களாகிய ஆரியர்கள் என்றும் நடு ஆசியாவிலிருந்து பெருந்தொகையானவர்கள் ஐரோப்பா நோக்கிச் சென்று பல்வேறு கிளைகளாகப் பிரிந்து மேலை இந்தோ-ஐரோப்பியர்களாக வரலாற்றில் நிலைபெற்றனர் என்றும் கொள்வதற்குத் தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு ஆய்வு முயற்சி பெருவெளிச்சம் தருவதாக அமைந்துள்ளது.

கயவாரம் – Khyber

'Khyber Pass'என அழைக்கப்படுகின்ற நிலப்பகுதி வழியாகக் கீழை இந்தோ-ஐரோப்பியர் இந்தியாவிற்குள் நுழைந்தனர் என வரலாற்று அறிஞர்கள் கூறுவர். இந்த 'Khyber'என்னும் சொல், 'கயவாரம்' எனப் பழந்தமிழில் அழைக்கப் பட்டிருக்கவேண்டும்.

‘வரி, வாரம்’ என்பன தமிழில் வளைவுப்பொருள் குறிப்பன. அணிலின் முதுகில் உள்ள கோடு நாம் அறிந்தது. இதனைத் தொல்காப்பியர், ‘மூவரி அணில்’ என்றார்(தொல்.பொருள். 550). புலியின் முதுகில் வளைந்த கோடு இருப்பது கருதிக் ‘கொடுவரிக் குருளை’ என்று புலியினைப் பட்டினப்பாலை (221) கூறும். ‘வரி’ என்னும் இவ் வளைவுப்பொருள் சொல்லுடன் உறவுடையது ‘வரை’ என்னும் சொல். ‘இதுவரை’, ‘அதுவரை’ என்னுமிடங்களில் ‘வரை’ என்னும் சொல் கோட்டினையும் எல்லையினையும் குறிப்பதை நாம் அறிவோம். மலை என்பது மேடு பள்ளங்களால் வளைந்து காட்சி தருவது. அதனால், மலைக்குக் ‘கோடு’ என்பதும் ஒரு பெயர். மலையின் இவ் வளைந்த தோற்றம் காரணமாகவே, மலை , வளைவுப்பொருள் சொல்லால், ‘வரை’ எனவும் அழைக்கப்பட்டது. ‘வரி-வரை’ என்ற இச் சொல், ‘வார்-வாரம்’ எனவும் தமிழில் திரிந்து, வளைவுப்பொருளையும் எல்லைப் பொருளையும் குறிப்பதுண்டு. ‘மலைவாரம்’, ‘மலையடிவாரம்’ என்னும் சொற்களில் உள்ள ‘வாரம்’, மலையின் எல்லையைக் குறிப்பது. ‘வாரம்’ என்னும் இச் சொல், ‘வார்-பார்’ என ‘வகர-பகர’ மாற்றத்தில் திரிந்து ‘மலபார்’ என்று அழைக்கப்படுவதுண்டு. ‘பார்’ என்னும் எல்லையினைக் குறித்த தமிழ்வழித் தோன்றிய இச் சொல், ‘அ’ என்னும் தமிழின் எதிர்மறை முன்னொட்டினைச் சேர்த்துக்கொண்டு, வட இந்திய மொழிகளில் ‘எல்லையற்றது’ என்னும் பொருளில் ‘அபார்’ என்னும் சொல்லாக வழங்குகின்றது. எல்லையற்ற பந்துவீச்சின் திறமை, ‘அபாரப் பந்துவீச்சு’ எனச் சொல்லப்படுவது இதன் வழியேதான்.

வரி – வாரம்

‘வரி-வார்-பார்’என இவ்வாறு திரிந்த தமிழ், தொல் பழங்காலத்தில் இந்தியாவின் வட மேற்குப் பகுதியிலும் திரியாமல் தமிழ்வடிவச் சொல்லாகவே வழக்கில் இருந்திருக்கவேண்டும். ‘கயவாரம்’ சொல்லின் பின்பகுதியாகிய ‘வாரம்’, ‘வரி, வரம்பு, வரப்பு ’ ஆகிய சொற்களுடன் உறவுடையது. ‘கோடு’ என்பதே இச் சொற்களின் வேர்ப்பொருள். கோடு வரைதலின் நோக்கம் எல்லைப்படுத்துதல். அதனால்தான், தமிழில் ‘எல்லைக்கோடு’ சொல் உருவானது.

'வரம்பு-வரப்பு' என்பன ஒரு நிலத்தின் எல்லைப் பகுதியைக் குறிப்பவை. இடைக்காலத் தமிழகத்தின் எல்லையினைப் பாடிய இளங்கோவடிகள், வடவேங்கடம் முதல் குமரிவரை உள்ளது தமிழ்நிலம் எனக் கூறவந்தபோது, 'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும் தமிழ் வரம்பறுத்த தண்புனல் நன்னாடு' எனப் பாடினார். இங்கு, தமிழை எல்லையாக உடைய தமிழ்நிலப் பகுதி என்பதையே 'தமிழ் வரம்பு அறுத்த தண்புனல் நன்னாடு' என்றார். இவ் 'வரம்பு' சொல்லோடு உறவுடையதே மேற்கூறிய 'கயவாரம்' சொல்லும். பள்ளமான மலைகளின் எல்லைப்பகுதி என்பதே 'கயவாரம்' சொல்லின் பொருளாகும்.

வாரணம், வாரி – marine, mori

'வாரம்' ஆகிய தமிழ், 'விழுங்கு-முழுங்கு'; 'விழி-முழி' போலவும், தமிழில் கடல் குறித்த 'வாரணம்' சொல்லிற்கு மூலமாகி, இலத்தீனில் 'marinus' எனவும் ஆங்கிலத்தில் 'marine'எனவும் 'வகர-மகர' மாற்றத்தில் ஆனது; தமிழில் கடல் குறித்த மற்றொரு சொல்லான 'வாரி', இலத்தீனில் 'mare'எனவும் ஆங்கிலத்தில் 'marina'எனவும் அதே 'வகர-மகர' மாற்றத்தில் திரிந்தது. இத் திரிபினைப் பாவாணர்தம் நூல்களில் விளக்கியுள்ளார். 'வாரணம்', 'வாரி' என்பன 'marine', 'marina'எனத் திரிந்ததுபோல், 'வாரம்' என்னும் எல்லைப்பொருள் குறித்த தமிழ், அதே 'வகர-மகர' மாற்றத்தில் இலத்தீனில் 'margo'எனவும் ஆங்கிலத்திலும் டானிஷ் மொழியிலும் 'mark'எனவும் திரிந்து தமிழின் அதே எல்லைப்பொருள் பெற்றது. டானிஷ் மொழியை எல்லையாகக் கொண்டு வழங்குகின்ற நிலப்பகுதியே Danish + mark – Denmarkஎன நாட்டின் பெயராக ஆனது. 'தமிழ் வரம்பு அறுத்த தண்புனல் நன்னாடு' என்னும் தொடரினையும் Danish + mark – Denmarkஎன்னும் சொல்லினையும் இணைத்து எண்ணுக. முந்து இந்தோ-ஐரோப்பியக் கற்பித வேராகக் காட்டப்படுகின்ற *mergஎன்ற சொல், boundary, borderஎன்னும் எல்லைப்பொருள் உடையதாக இருப்பதை வேர்ச்சொல் அகராதிகள் காட்டுகின்றன. 'வாரம்' என்னும் சொல், கீழை இந்தோ-ஐரோப்பியர் வருகை புரிந்த நான்காயிரம் ஆண்டிற்கு முன்பே இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் உயிர்ப்புடன் இருந்து அது 'வகர-மகர' மாற்றத்தில் 'mar'எனத் திரிந்து மேலை

இந்தோ-ஐரோப்பியத்தில் எல்லையைக் குறிக்கும் *mergஎன்னும் வேராக நிலைபெற்றது.

கல் – கயம் – கசம்–cassus

'கயவாரம்' சொல்லின் முன்பகுதியான 'கய' என்னும் சொல் வரலாற்றினை இனிக் காண்போம்.

தமிழில், 'கல்லுதல்' என்னும் வேர்வழி உருவான சொல், 'கல் – கய்-கய' என்னும் ஆழத்தை/பள்ளத்தைக் குறிக்கின்ற சொல். சங்க இலக்கியத்தில் 'கயம்' என்ற சொல், 'கயம் மூழ்கு மகளிர்', 'தண்கயம்', 'கயம்நாடு யானை' எனப் பல இடங்களில் 'குளம்' குறிக்கக் காண்கிறோம். 'கயம்' என்னும் இச் சொல், தமிழில் 'ய-ச' மாற்றத்தில், 'அயலூர்-அசலூர்'; 'பயலை-பசலை' போல் 'கசம்' எனவும் திரிந்து அதே பொருளில் வழங்குகின்றது (கசம் – ஆழமான நீர் நிலை; நெல்லை வட்டார வழக்குச் சொல் தொகை நூல், ப. 35).முதலாம் இராசாதிராசனின் முப்பதாம் ஆட்சியாண்டில் எழுதப்பட்ட உத்தமர் கோயில் கல்வெட்டில் 'குளத்திற்குக் கிழக்கு' என்பது 'கசத்துக்கு கிழக்கு' என்று எழுதப்பட்டுள்ளது. (காண்க: தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள் -8;க.எண்: 199;முதலாம் இராசாதிராசன், ஆ.ஆ.30; கி.பி.1048)

'கயம்', 'கசம்' எனத் தமிழில் திரிந்தவாறே, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு 'ய-ச' மாற்றத்தில், இலத்தீனிலும் 'casa','cassus'என இரண்டு வடிவங்களில் துளைப்பொருள் சொற்களாகக் 'கயம்' சொல் சென்று திரிந்து வழங்குகிறது. தமிழின் 'கயம்', 'casa'ஆகி இலத்தீனில் பெற்ற பொருள் விரிவுகளைப் பின்வரும் இலத்தீன் அகராதிப் பகுதிகளில் காண்க.

căsa -ae, f. (from same root as castrum), *a hut, cottage, cabin*: Cic., Verg.

cassus, -a -um, *empty, hollow*. LIT., nux, Pl.; with abl., *devoid of*: lumine cassus or aetherecassus, *dead,* Verg. transf., *worth-less, useless, vain*: cassumquiddam et inanivocissonodecoratum, Cic.; copia verborum, Lucr. N. pl. as subst. cassa -orum, *vanities*: Pl. In cassum or incassum, adv., *in vain*: Lucr., Verg., Liv.

-Latin Dict.

‘casa, cassus’சொற்களுக்கு இலத்தீன் அகராதி அளித்த பொருள் விளக்கத்தில் ‘hut, useless’ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்கன. துளைப்பொருளில் வீடும் (hut), பயனின்மையும்(useless) ஆகிய வழிப்பொருள்சொற்கள் தோன்றுவது தமிழிலும் நிகழ்ந்துள்ளது. ‘இல்லவள் மாண்பு’ என்னும் திருக்குறளின் ‘இல்’, வீடு குறிப்பது. ‘பயனில் சொல்’ என்னும் திருக்குறளின் ‘இல்’, இன்மை குறிப்பது.

‘கல்-கய்-கய-கச’ எனத் தமிழ்வழி உருவான ‘casa, cassus’என்ற இலத்தீன் சொற்களின் வேர் வடிவமாக இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அறிஞர்கள் காட்டுவது *kes (to cut)என்பதாகும். தமிழில், ‘பரு-பெரு’ எனவும் ‘கதி-கெதி’ எனவும் ‘அரங்கன்-ரங்கன்-ரெங்கன்’ எனவும் ‘அகர-எகர’ மாற்றம் நிகழ்வதுண்டு. இதே ‘அகர-எகர’ மாற்றத்திலேயே, ‘கல் -கய்-கய-கச’எனத் தமிழில் தோன்றிய வேர்ச்சொல் வடிவம், மேலை இந்தோ-ஐரோப்பிய அறிஞர்களால் *kesஎன்னும் கற்பித வேர் வடிவமாக எழுதப்பட்டுள்ளது. ‘துளை’ என்னும் வேர்ப்பொருளில் உருவான இந்த *kesவேரிலிருந்து பிறந்த ஆங்கிலச் சொற்களில் சில வருமாறு: caste, castle, castration, chaste, chastity, chester. இங்குக் குறிப்பிட்ட வெட்டுதல் பொருள், துளைப்பொருள், பிரிவுப்பொருள் என்பன உறவுடையன.

Manchester

‘Manchester’என்னும் இங்கிலாந்தின் ஊர்ப்பெயரில் பின்பகுதியாகிய ‘chester’,*kesவேரிலிருந்து வந்தது. முன்பகுதியாகிய ‘man’சொல், பெண்ணின் மார்பு குறிக்கும் *mammஎன்னும் முந்து இந்தோ-ஐரோப்பியக் கற்பித வேர்வழி உருவானது.

‘மருமம்’, மார்பு குறிக்கும் தமிழ்ச்சொல். இது ‘மம்மம்’ எனவும் தமிழில் திரியும். மார்பு குறித்த இம் ‘மம்மம்’ என்னும் சொல், மார்பைக் குறிக்கும் *mammஎன்னும் கற்பித வேராக மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் சென்று சேர்ந்தது. ‘கல் – கய்-கய-கச’ எனத் தமிழில் தோன்றிய சொல், உள்துளையுள்ள வீட்டினைக் குறிக்கும் இலத்தீனின்‘castrum’சொல்லுக்கும் ஆங்கிலத்தின் ‘castle’சொல்லுக்கும்

மூலமானது 'castrum'ஆகிய இச் சொல், 'ககர-சகர' மாற்றத்தில் 'chester'எனத் திரிந்து வீடுகளாலான நகரத்தைக் குறித்ததும் வரலாறு. தமிழில் பெண்ணின் பருத்த மார்பிற்குப் பெரிய மலையினை உவமையாகக் கூறுவது மரபு. 'மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை அணிமுலை துயல்வரும் ஆரம்போல' எனச் சிறுபாணாற்றுப்படையில் நிலமகளின் மார்பாகக் கரியநிற மலை காட்சியளிப்பதாக நல்லூர் நத்தத்தனார் பாடுவார். இதே உருவகப் போக்கில், மார்பகம் போன்ற மலைகளுக்கு அருகில் அமைந்த இங்கிலாந்து நகரம் ,'mamm+chester–Manchester'எனப்பட்டதையும் இவ் இடத்து எண்ணி மகிழலாம்.

கசம் –kes

இங்குக் காட்டிய 'caste, castle, castration, chaste, chastity, chester, Manchester' போன்ற சொற்கள், *kesவேருடன் பொருத்தமாக இணைந்திருப்பதை ஆங்கில வேர்ச்சொல் அகராதிகளிலும் இணையவழி வேர்ச்சொல் அகராதியிலும்கண்டு தெளியலாம். 'கல் – கய்-கய-கச' என்ற தமிழ்வேர், 'அகர-எகர' மாற்றத்தில் *kesஎனத் திரியும் என்று கூறினோம்.

*kesவேர், 'ககர-சகர' மாற்றத்தில், **<u>கீ</u>**ரை-**<u>சீ</u>**ரை; முழு **கு-**முழு**<u>சு;</u>**kenotoph-cenotoph; காந்து-chandபோன்றுசமற்கிருதத்தில் sastra (knife, dagger) என்று திரிந்து, வெட்டுகின்ற கத்தியினைக் குறித்தது. இந்த 'sastra'சொல்லினை மேற்குறித்த மேலை இந்தோ-ஐரோப்பியச் சொற்களுடன் மேலை இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அறிஞர்கள் உறவுபடுத்தியுள்ளனர். சமற்கிருதத்தில் அறுவை மருத்துவத்தை 'சஸ்த்திர சிகிச்சை' என்பர். தமிழின் 'கல் – கய்-கய -கச' வழித் தோன்றிய சமற்கிருதத்தின் 'sastra' சொல், நான்காயிரம் ஆண்டிற்குமுன் கீழை இந்தோ-ஐரோப்பியமாகத் தமிழ்நிலத்திற்குள் புகுந்தது. அதே வேரிலிருந்து தோன்றிய 'caste, castle, castration, chaste, chastity, chester, Manchester' ஆகிய சொற்கள், நானூறு ஆண்டிற்குமுன் மேலை இந்தோ-ஐரோப்பியமாகத் தமிழ் நிலத்திற்குள் வந்து சேர்ந்தன.

10-15ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, தொல் தமிழ்நிலத்திலிருந்து பிரிந்து சென்ற 'கல் -கய்-கய-கச' என்னும் சொல்,

இந்தோ-ஐரோப்பியம், கீழை இந்தோ-ஐரோப்பியம், மேலை இந்தோ-ஐரோப்பியம் எனப் பிரியாத காலத்தில் ,*kesஎன்னும் ஓர் வேராக இந்தோ-ஐரோப்பியத்தில் நிலைபெற்றது. அந்த *kesஎன்னும் மேலை இந்தோ-ஐரோப்பிய வடிவம், 'ககர-சகர' மாற்றத்தில் கீழை இந்தோ-ஐரோப்பியச் சமற்கிருதத்தில் ' sastra'என்ற வடிவில் சொல்லானது. *kesஎன்ற மேலை இந்தோ-ஐரோப்பிய வடிவம் ஓர் கற்பித வேராக இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அகராதி அறிஞர்களால் உடுக்குறி (*) இட்டு அடையாளப்படுத்தப்படுகிறது. 'List of Aryan roots' எனவும் 'List of Indo-Germanic roots'எனவும் ' Proto Indo-European roots (PIE)'எனவும் வெவ்வேறு பெயர்களின்கீழ் இடம்பெறும் 'kes'ஆகிய இந்தோ-ஐரோப்பியக் கற்பித வேரின் வரலாற்றினைக் 'கல்லுதல்' என்னும் தமிழ்வேருடன் 'கல் -கய்-கய-கச-kes'என இணைத்துப் பார்ப்பது பொருத்தம்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என ஈராயிரம் ஆண்டின்முன், பாரோர் அனைவரையும் உறவாகக் கருதிய தமிழ்முழக்கம், இத் தமிழ்-இந்தோ-ஐரோப்பிய ஆய்வின் மூலம் உண்மை வரலாறாகவும் மாறுவதற்கு வாய்ப்புள்ளது. ' தொல்லுலக மக்களெலாம் ஒன்றே என்னும்தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! 'எனப் புரட்சிப்பாவேந்தர் பாரதிதாசனார் கண்ட பொதுமாந்தப் பேருணர்வினைத் தமிழ்-இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கு இடையிலான சொற்களை எண்ணி எண்ணிச் செய்கின்ற இவ் ஆய்வு தோற்றுவிக்கும் எனவும் நம்பலாம்.

இந்தியாவின் வடமேற்கு எல்லைப் பகுதியை ஒட்டிய பள்ளத்தாக்குப் பகுதி, 'கைபர் கணவாய்(Khyber Pass)'எனப்படும். இக் 'கைபர் கணவாய்' வழியாகக் கீழை இந்தோ-ஐரோப்பியர் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தியாவிற்குள் வந்துபுகுந்தாகவரலாற்று ஆய்வறிஞர்கள் தெரிவித்துள்ளனர். (They entered the Indus Valley through the fabled Khyber Pass. The Khyber Pass cuts through the Hindu Kush Mountains in Pakistan, India's neighbour to the northwest).கைபர் கணவாய் வழியாகக் கீழை இந்தோ-ஐரோப்பியர்கள் இந்தியம் வந்து புகுந்ததைப் 'பிரித்தானிக்க'(Brittanica) அகராதி, ' The Khyber Pass has historically been a gateway for invasions of the Indian subcontinent from the northwest' என்று தெரிவிக்கிறது.

உலகின் புகழ்பெற்ற ‘கைபர்’ என்னும் கணவாய்ப் பெயர், ‘கயவாரம்’ எனப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நல்ல தமிழில் வழங்கப்பட்டிருக்கவேண்டும். இரண்டு மலைகளுக்கு இடையில் உள்ள ஆழமான பகுதி என்பதே ‘கய +வாரம்-கயவாரம்’ என்ற சொல்லின் மூலப்பொருளாகும். கீழை இந்தோ-ஐரோப்பியர்கள் வரலாற்றில் நான்காயிரம் ஆண்டின்முன் ‘கயவாரம்’ ஆகிய இக் ‘கைபர்’ வழியாக இந்தியாவிற்குள் வந்தார்கள் என்ற செய்தியினை 10-15ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தொல்தமிழ் நிலத்தில் குடியிருந்த தொல்தமிழ் மக்களின் வழியினராகிய மக்களின் ஒரு பிரிவினரே ‘கயவாரம்’ வழியாக இந்தியாவை விட்டுப் பிரிந்து நடு ஆசியப் பகுதிவரை சென்று மீண்டும் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன் அதே ‘கயவாரம்(Khyber pass)’ வழியாக இந்தியா வந்து சேர்ந்தனர் என்பதே வரலாற்று உண்மையாகும்.

‘கல்’ என்னும் வேரிலிருந்து கல் -கய்-கயம் எனப் பிறந்த ‘கயம்’ சொல், ‘வாரம்’ என்னும் சொல்லுடன் சேர்ந்து ‘கயவாரம் – கைபர்(Khyber)’(ஒ.நோ.: மலைவாரம் -மலபார்) என்று ஆனது.இலத்தீனின் ‘casa’சொல் வரலாற்றினை இவ்வாறு ‘கயவாரம்’ சொல்லின் ‘கயம்’ சொல்லுடன் இணைத்து எண்ணலாம்.

இந்தியா முழுவதும் பரவியிருந்த தமிழ், இந்தியாவைத் தாண்டி வடமேற்காகச் சென்று இந்தோ-ஐரோப்பிய மொழிகள் தோன்றுவதற்கு மூலமாகியிருக்கவேண்டும் என்பதும் தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு ஆய்வின் அடிப்படைக் கருதுகோளாக உள்ளது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தொல்தமிழ் மக்களிடமிருந்து பிரிந்துசென்று, நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தியாவிற்குள் திரும்பி வந்தவர்களே கீழை இந்தோ-ஐரோப்பியர்கள் என்பதும் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு கிழக்கிந்திய வணிகக் குழுவினர்களாகவும் நாடு பிடிக்கும் இனத்தினராகவும் இந்தியாவிற்குள் புகுந்தவர்களே மேலை இந்தோ-ஐரோப்பியர் என்பதும் தமிழுக்கும் இந்தோ-ஐரோப்பிய இனங்களுக்குமான வரலாற்று உண்மையாகும்.

பாவாணர், இக் கருத்தினைத் 'தலைமைத்தமிழ்' என்னும் ஆய்வுநூலில், தெளிவாகவும் சுருக்கமாகவும் பின்வருமாறு விளக்கியுள்ளார்:

"குமரிநாட்டினின்று கங்கைக்கரை சென்ற பண்டைத் தமிழர், திரவிடராகத் திரிந்து ஐரோப்பா அடைந்து ஆரியராக மாறியிருப்பதாலும், அவ் வாரியருள் ஒரு கூட்டத்தாரே வேத ஆரியரின் முன்னோராகஇந்தியாவிற்கு வந்திருப்பதாலும், தென்சொற்களின் முந்து வடிவங்கள் மேலையாரிய மொழிகளிலும் பிந்து வடிவங்கள் கீழை ஆரியமாகிய வேத மொழியிலும் சமற்கிருதத்திலும் வழங்குவது இயற்கையே"

-ப.96

மேலை இந்தோ-ஐரோப்பிய அறிஞர்களும் கீழை இந்தோ-ஐரோப்பிய அறிஞர்களும் தத்தம் மொழி இனங்களுக்கு இடையில் அமைந்த வேர்ச்சொல் உறவினை மிக நன்றாக ஆய்ந்து உரைத்தனர். எனினும், தம் இருபால் இனங்களுக்கும் மூல இனமாக அமைந்த தமிழோடு உறவுபடுத்தி ஆய்வதை மேற்கொள்ளவில்லை என்றே கூறலாம். மேலை இந்தோ-ஐரோப்பிய இனத்தில் பிறந்த கால்டுவெல், தமிழை இந்தோ-ஐரோப்பிய மொழிகளுடன் ஒப்பிட்டு ஆய்வுசெய்து உரைத்திருந்தார். ஆயினும், அவர் வழியில் ஸ்டீபன் ஹில்லியர் லெவிற்று போன்ற ஒரு சிலர் தவிர பெரும்பாலான இந்தோ-ஐரோப்பிய அறிஞர்கள் இவ் ஒப்பீட்டு ஆய்வில் கவனம் லுத்தாதது நம் தவக்குறைவே.

வட இந்திய இடப்பெயர்களில் தமிழ்

'கங்கை', 'இமையம்' ஆகிய பகுதிகள் இன்று தமிழருக்கு உரிமையில்லாத நாட்டுப்பகுதிகள் ஆகிவிட்டன. சங்க அகப்பாடல்களிலும் புறப்பாடல்களிலும் 'இமையம்', பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரியர் வரும் முன், தமிழரின் தாயகமாக இன்றைய இந்தியா திகழ்ந்துள்ளது. ஆதலின், 'இமையம்' என்ற சொல், அம் மலைக்குத் தமிழர் இட்ட பெயராக இருத்தல்வேண்டும்.

சங்க நூல்களில் பல இடங்களில், 'சிமைய மால்வரை' என்ற தொடர் ஆளப்பெற்றுள்ளது. 'உயர்ந்த சிகரங்களைக் கொண்ட மலை' என்பதே இத்

தொடருக்கு உரிய பொருள். ‘சிமை’ என்னும் சொல்லிற்கு உரையாசிரியர்கள் ‘சிகரம்’ எனப் பொருள் எழுதியுள்ளனர். ‘சிகரம்’ என்னும் பொருள் தந்த ‘சிமை’யாகிய இச் சொல், ‘இமை’ என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். தமிழில் இவ்வாறு நெடுங்காலமாக, ‘இமை-சிமை்சொற்கள் உறவுடையனவாக இருந்துள்ளன. உயர்ந்த சிகரங்கள் பலவற்றைக் கொண்ட மலையே, ‘இமயமலை’யாகும். ‘இமையம்-இமயம்’ எனவும் ‘சிமைய-சிமய’ எனவும் தமிழில் ‘இமையம்’ தொடர்பான சொல்லாட்சிகளைச் சங்க நூல்களில் காணமுடிகிறது.

ஹிமாச்சல் –வேர் வரலாறு

சமற்கிருதத்தில் ‘ஹிம’ என்ற சொல்லிற்குப் ‘பனி’ என்பது பொருள்.இதனை அடிப்படையாகக் கொண்டு, இமயமலைக்கு ‘ஹிமாசல்’, ‘ஹிமாலயா’ என்ற பெயர்கள் உருவானதாகச் சமற்கிருதவாணர்கள் விளக்கம் எழுதியுள்ளனர். உயர்ந்த சிகரங்களைக் கொண்ட மலையில் உருவானது குளிர்ந்த பனி. உயர்ந்த சிகரங்களைக் கொண்ட இமயமலையில் தோன்றிய காரணத்தால், ‘ஹிம’ என்னும் சொல், இடவாகு பெயராகப் பனியினைக் குறித்தது. ‘ஹிம’ என்ற சொல், இமையத்தின் வழிச்சொல்லாகும். பனியைக் குறிக்கின்ற ‘ஹிம’ முதற்சொல்லாயின், அந்த ‘ஹிம’ சொல்லின் வரலாற்றினை நாம் அறிந்தாகவேண்டும்.

‘அல்’ என்னும் எதிர்மறை முன்னொட்டு, ‘அ’ எனத் திரியும். செல்லுதல் பொருள்தரும் ‘கல்’ என்னும் சொல், ‘ககர-சகர’ மாற்றத்தில் ‘சல்’ எனத் திரிந்து, இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் செலவுப்பொருள் தரும் சொல்லாக மாறும். நீர் இயங்கக்கூடியது ஆதலால், அது ‘சல்’ என்னும் வேரிலிருந்து ‘சலம்’ எனப்பட்டது. ஆங்கில வேர்ச்சொல் அகராதி அறிஞர் கீற்று , ‘ accel’என்னும் இயங்குதல் பொருள்தரும் சொல்லினை, ‘ad + kal – accel, kal-speed’என விளக்கமளித்தார். மலை, இயங்காதது ஆதலால், அதனை ‘அ + சல் ’ எனச் சமற்கிருதத்தில் மலைக்கு ஒரு சொல்லினை சமற்கிருதவாணர்ஆக்கிக்கொண்டனர். பனி நிறைந்த உயர்ந்த இமையமலை, ‘ஹிம + அ + சல் – ஹிமாசல்’ எனப்பட்டது.

மேலை இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் இவ்வாறு, தமிழ்வழித் தோன்றிய ‘ஹிம- hima’ சொல், ‘hiems, kheima, khion, zima, žiema, gimmant-, jmern’எனப் பல வடிவங்களில் வழங்குகின்றது. 10-15ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒட்டுமொத்த மேலை இந்தோ-ஐரோப்பியர்களும் தொல் இந்தியாவிலிருந்து பிரியும் முன், சிறுசிறு திரிபுடன் தமிழின் ‘இமை’ சொல்லினைப் பயன்படுத்தினர்.

‘இமையம்’ ஆகிய மலையில் தோன்றிய ‘ஹிம’வாகிய பனி, இடவாகு பெயராய்ச் சமற்கிருதத்தில் பனியினைக் குறித்ததெனக் கூறினோம். மேலை இந்தோ-ஐரோப்பிய மொழிகள் பலவற்றிலும் ‘ஹிம’வுடன் உறவுடைய பல சொற்கள் பனியினையும் பனிக்காலத்தினையும் குறித்துள்ளன. பண்டைய நாளில் காலத்தைக் கணிப்பதற்கு, ஆண்டிற்கு ஒருமுறை வருகின்ற பனிக்காலத்தை அடிப்படையாக் கொண்டுள்ளனர். ‘kheima’என்னும் கிரேக்கச் சொல், பனிக்காலம் குறிப்பது. இச் சொல்லிலிருந்து, ஆடுகளின் ஆண்டுக்கணக்கினைக் குறிப்பதற்கு ‘khimaros, khimaira’என்ற இரண்டு சொற்கள் கிரேக்கத்தில் உருவாகியுள்ளன. ‘khimaros’ ஆண் ஆடு குறிப்பது;‘khimaira’ பெண் ஆடு குறிப்பது.

சிந்து

‘சிந்து’ என்பது ஓர் ஆற்றின் பெயர். நீர்த்துளி சிந்தி உருவான காரணத்தால் ‘சிந்து’ என்னும் ஆற்றின்பெயர் தோன்றிற்று என்பார் பாவாணர். பல துளிகளால் உருவான ஆறு, ‘பஃறுளியாறு’ எனப்பட்டதை இதனுடன் அவர் ஒப்புநோக்குவார்.

‘முகில் துளி சிந்தியே மக்கட்குக் கீழ்நீரும் மேல்நீரும் ஆற்றுநீரும் கிடைத்தலால் ‘சிந்து’ என்னும் சொற்கு நீர்(பிங்.), ஆறு(பிங்.) என்னும் இருபொருளும் ஏற்பட்டன.’ என்பார் பாவாணர்.

‘சிந்துதல் என்னும் வினைச்சொற்குத் தெளித்தல் என்பதனொடு ஒழுகுதல் என்னும் பொருளும் இருத்தலால்,‘சிந்து’ என்னும் சொல் ஓர் ஆற்றின் பெயராவதற்கு முற்றும் பொருத்தமானதே’ என்று ‘சிந்து’ சொல்லின் பெயர்ப் பொருத்தத்தைப் பாவாணர் மேலும் விளக்கினார் (தமிழர் வரலாறு -2, ப.32).மேலும், வடமொழியில் இச் சொற்கு மூலமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பாரசீகத்தில் ‘ச’கரம், ‘ஹ’கரமாகத் திரிவதன்

அடிப்படையில் இச் 'சிந்து(ஸிந்து)', 'ஹிந்து' எனத் திரிபடைந்தது என்பதும் அவர் தரும் விளக்கமாகும். 'இந்தியா' என்ற இன்றைய நாட்டின் பெயர், இவ்வாறு, 'சிந்து' என்னும் ஒரு தமிழ்ப்பெயரிலிருந்து உருவானதாகும்.

கங்கை

நீர் கரிய நிறமானது. திருவள்ளுவர் நீரினை 'மணிநீர்'(குறள்.742) என்பார். 'நீலமணியின் நிறத்தை ஒத்த கரிய நிற நீர்' என்பது இதன் பொருள். சமற்கிருதத்தில் ஆழமான நீர்நிலையை 'மணிகர்ணிகா' என்பர். 'மணியின் நிறத்தை ஒத்த நீர்நிறைந்த பள்ளமான பகுதி' என்பதே இதன் பொருள். 'பறைக்கண் அன்ன நிறைச்சுனை' (அகம்.178:3); 'நீலப்பைஞ்சுனை' (முருகு.253;பரி.5:48); 'பசித்தயானைப்பழங்கண்அன்னவறுஞ்சுனை' (அகம்.321:1-2); 'மணிநீர்க் கிடங்கு ' (மதுரைக்.351); 'நீர்நிறக் காக்கை'(சிலம்பு.10:116)போன்ற சங்கத் தொடர்களில் நீரின் கருமை சுட்டப்படுதல் காண்க. கரிய நீர்நிறைந்த கிணறு 'மணிகர்ணிகா' எனச் சமற்கிருதத்தில் அழைக்கப்படுகிறது. இச் சமற்கிருதக் கிணறு குறிக்கும் சொல், 'மணி' என்னும் தமிழ்ச்சொல்லையும், 'கல்-கல்லுதல்' எனத் தோண்டுதல் பொருளில் பிறந்த 'கன்னம்' சொல்லையும் உள்ளடக்கியது.

'கங்கு' என்னும் தமிழ்ச்சொல்லிற்குக் கருமை என்பதும் ஒரு பொருள். கருந்தினை தமிழில் 'கங்கு' எனப்படும். கரிய நிறச் சிறகுடைய பறவையைக் கம்பர் 'கங்கம்' என்பார்(கம்ப.யுத்த.கும்ப.15). இருள் சூழ்ந்த இரவுவேளை , தமிழில் 'கங்குல்' எனப்படுவதும் இக் கருமைப் பொருளிலேயேயாகும். கரிய நிற நீர்நிறைந்த ஆறு, 'கங்கை' எனப்பட்டதும் இத் தமிழ்மரபில் உருவானதேயாகும்.

யமுனை

'யா' என்னும் கருமைக்கருத்து வேரிலிருந்து கரிய நிறப் பொருள்கள் பிறந்த வரலாற்றைப் ப.அருளி தமது 'யா' நூலில் எழுதியுள்ளார். யாமை(சாமை), யாணி(சாணி), யாமம்(சாமம்) போன்ற கருமைப்பொருள் சொற்களின் வரலாறு, இந் நூலில் விளக்கப்பட்டுள்ளது. அவ் வகையில், 'கங்கை' போலவே, கரிய நிற நீர்நிறைந்த ஆறும் 'யமுனை' எனப்பட்டது எனவும் இவ் யமுனையே சமற்கிருதத்தில் 'யமுனா-சமுனா-ஜமுனா' எனத் திரிந்தது என்றும் அருளி விளக்கியுள்ளார்.

கன்னம் – க்ருஷ்ணா

'கன்னம்' என்ற தமிழ்ச்சொல்லுக்குக் 'கருமை' என்பதும் ஒரு பொருள். தமிழ்நாட்டின் சிற்றூர்களில் தெளிந்த நீரினைக் 'கன்னங்கரேல்' எனத் தமிழ்மக்கள் அழைப்பர். இக் 'கன்னம்' கருமைப்பொருளது. 'கன்னங்கரியது' என்ற தமிழ்வழக்கின் 'கன்னமும்', கருமைப் பொருளது. கரியநிறக் கரும்பு 'கன்னல்' எனப்பட்டதும் இதனால்தான். கருவூர்த் தேவர், கரும்பிற்கு நிகரான கங்கைகொண்ட சோழபுரத்துச் சிவபெருமானைக் 'கன்னலே தேனே' என்று பாடினார். 'கன்னம்' என்னும் இத் தமிழ்ச்சொல், சமற்கிருதத்தில் 'கன்னம்-கர்ண-க்ருஷ்ண' எனத் திரிந்தது. கங்கை போல், யமுனை போல் கரிய நிற நீர்நிறைந்த ஆறும் 'க்ருஷ்ணா(kr@ishn@a)' எனப்பட்டது. கரிய நிற மலை 'க்ருஷ்ணகிரி' எனச் சமற்கிருதத்தில் அழைக்கப்பட்டதும் இங்கு ஒப்புநோக்கி எண்ணத்தக்கது.

கருமை நிறத்தோடு உறவுடையது நீலநிறம். கரிய வானமும் கருங்கடலும் கரிய மயிலும் முறையே நீலவானம், நீலக்கடல், நீலமயில் என்றும் சொல்லப்படுவது இந் நிற ஒற்றுமையில்தான். 'நைல் (Nile)' ஆற்றின் கிளை ஆறு 'Blue Nile'. இந் 'நைல்' ஆறு, நீல அடையைப் பெற்றது நீர் கருநிறம் உடையது என்ற கருத்தின் வழியிலேயே ஆகும்.

கோட்டை –garh

'கோட்டை' என்னும் சொல், தமிழில் 'சுற்றுமதில்' குறிப்பது. 'குல்' என்னும் ஓர் வளைவுக் கருத்து வேரிலிருந்து, குல்-குள்-குளம்-குளம்பு (விலங்குகளின் நிலம் பதியும் வட்டமான கால் உறுப்பு); குல்-குள்-குள-குளநெற்றி(வளைந்த நெற்றி); குல்-குள்-குண்-குணில்(வளைந்த குறுந்தடி); குல்-குள்-குள்+து-குடு-குடுவை (வளைந்த கலம்); குல்-குள்-கொள்(வளைந்த பயற்றங்காய்); குல்-குள்-கொள்-கொள்+து-கொடு-கொடுக்கு (தேள் முதலிய உயிரிகளின் வளைந்த முள் போன்ற கொட்டும் பகுதி); குல்-குள்-கொள்-கொள்+து-கொடு-கோடு (வளைந்த தோற்றமுடைய மலை, வளைந்த மரக்கிளை); குல்-குள்-கொள்-கொள்+து-கொடு-கோடு-கோட்டம்(கோயிலினைச் சுற்றிப் பாதுகாப்பிற்காகக் கட்டப்பட்ட நெடுமதில், மரத்தின்/மனத்தின் வளைந்த தன்மை); குல்-குள்-கொள்-கொள்+து-கொடு-கோடு-கோடு+ஐ-கோட்டைஅரண்மனை முதலானவற்றைச் சுற்றிப்

பாதுகாப்பிற்காகக் கட்டப்பட்ட நெடுமதில்). இவ்வாறு, 'குல்' என்னும் ஓர் வளைவுக் கருத்து வேர், பற்பல வளைவுப் பொருள் சொற்களைத் தமிழில் தோற்றியது. தமிழில் 'கோட்டை' என்னும் சொல், சமற்கிருதத்தில் 'கோஷ்ட' எனத் திரிந்தது. 'கோட்டம்' என்னும் இச் சொல் வரலாற்றினைப் பாவாணர் விரிவாக வரைந்தார்.

கோட்டையாகிய இத் தமிழ்ச்சொல், புதுக்கோட்டை, பட்டுக்கோட்டை, நிலாக்கோட்டை, அதமன்கோட்டை, சூரக்கோட்டை எனக் கோட்டைகள் இருந்த ஊர்ப்பெயர்களில் பின்னொட்டாக இருப்பதை நாம் அறிவோம். 'கோட்டை' என்னும் இத் தமிழ்ச்சொல், 'ட-ர' திரிபில் 'கோர்' என வட இந்திய மொழிகளில் திரிந்து வட இந்தியாவில் பல ஊர்ப்பெயர்களில் 'garh'என்னும் பின்னொட்டாக அமைந்துள்ளது. 'சண்டி' என்னும் சொல், காளியைக் குறிக்கும் தமிழ்ச்சொல். காளியாகிய தமிழ்க் கடவுளுக்குப் பண்டைத் தமிழர்கள் கோட்டை கட்டி வைத்திருந்தனர். அக் கோட்டை இருந்த ஊரினைச் 'சண்டிக் கோட்டை' என்று அழைத்தனர். அச் சண்டிக்கோட்டையே இன்று பஞ்சாப் மாநிலத்தின் தலைநகராகிய 'Chandigarh' ஆகும். 'கோட்டை' சொல்லின் திரிபான 'garh'சொல், 'Chandigarh'ஊர்ப்பெயரிலும் உள்ளது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் Junagarh, Dibrugarh, Aligarh, Najafgarhபோல்பின்னொட்டாக ஊர்ப்பெயர்களில் 'garh'சொல்லினை நிறைய காணலாம்.[4]

தொல் இந்தியா என்பது தமிழர்களின் பழம்பெரும் கோட்டைகள் நிறைந்த நிலப்பகுதி என்பதை இக் கோட்டை - garhஉறவினால் அறியமுடிகிறது.

கீழை, மேலை இந்தோ–ஐரோப்பிய இடப் பெயர்களில் தமிழ் கமம் – காமம் –gama – home

தொல்காப்பியத்தில் 'கமம் நிறைந்தியலும்' என்பது ஒரு நூற்பா. 'கமம்' என்னும் சொல்லிற்குத் தமிழில் 'நிறைவு' என்பது பொருள் என இந் நூற்பா வழி அறிகிறோம். 'கமஞ்சூல் மாமழை' என்னும் சங்கத் தொடருக்கு 'நிறைந்த சூலையுடைய கரிய மேக ம்' எனப் பின்னத்தூர் நாராயண சாமி ஐயர் உரை வரைந்துள்ளார். 'கமம்' ஆகிய நிறைவுப்

பொருள் குறித்த இத் தமிழ், ‘கமம்’ எனவும் ‘காமம்’ எனவும் மக்கள் வழக்கில் ஊரினைக் குறிக்கும் சொல்லாகவும் மாறியது.

தமிழில் ஊர்ப்பெயர்கள் குறிக்கும் ‘சேரி’, ‘குப்பம்’, ‘ஊர்’ ஆகிய சொற்களும் கூட்டப்பொருள் மூலத்தின் வழியாகவே பிறந்துள்ளன. மக்கள் சேர்ந்து வாழும் இடம் ‘சேரி’ எனத் தமிழில் தொன்றுதொட்டு அழைக்கப்படுகிறது. உழவுச்சேரி, வேளாண்சேரி, பார்ப்பனச்சேரி எனப் பல் குமுக மக்களும் வாழ்ந்த இடம் பண்டு ‘சேரி’ எனப்பட்டது. மக்கள் கும்பலாக வாழ்ந்த இடம் கும்பம்-குப்பம் எனப்பட்டது. திண்டிவனத்துக்கு அருகில் பனைமரங்கள் நிறைந்த ஓர் ஊர், ‘தாடிக்கும்பு’ என இன்றும் அழைக்கப்படுகிறது. ‘உறுதல்’ என்னும் தங்குதல் பொருள் தரும் வேரிலிருந்து பிறந்த சொல்லே, ‘உறு-ஊர்’ என்பதாகும்.

‘காமம்’ என ஊர் குறித்த இச் சொல், ‘ *gāma’* எனப்பாலி, பிராகிருத மொழிகளிலும் வேறு பல வட இந்திய மொழிகளிலும் சிற்றூர் குறிக்க வழங்குகிறது. சமற்கிருதம், ‘கம-காம’ என்ற தமிழ் வழக்கினைக் ‘க்ராம’ என ஊர் குறிக்க ஆக்கிக்கொண்டது. இது, ஒரு தமிழ்ச்சொல் சமற்கிருதமாக மாறும்போது, சமற்கிருதவாணர், ‘மெது-ம்ருது’; ‘வட்ட-வ்ருத்த’ போல் முதல் மெய்யெழுத்தினை இரட்டித்துக்கொள்ளும் வழக்கினை ஒட்டியது.

வட இந்திய மொழிகள் சில ‘கிராம’ ஆட்சியைக் கொண்டுள்ளன. இவ்வாறான திரிபிற்குச் சமற்கிருதத்தின் தாக்கம் காரணமாகும். கீழை இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் ஒன்றான சிங்கள மொழி, சிற்றூரினைக் ‘gama’ என்ற சொல்லால் குறிக்கின்றது. இன்றைய இலங்கை, சிங்களர், தமிழராகிய இரு தேசிய இனத்தாருக்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும் ஒரு காலத்தில் இத் தீவு தமிழ்நிலத்துடன் இணைந்திருந்த தொல் தமிழ் நிலமாகும். வரலாற்றுப் பேரறிஞர்கள் இவ் உண்மையை ஒத்துள்ளனர்.

In the pre-historic ages of old, Ceylon did not exist as a separate entity. It was but a part and parcel of south India. The geological and geographical features of both South India and Ceylon are similar on the basis of which, Wilhelm Geiger rightly concludes that, in times gone by, Ceylon was the outstretched region of the Dekkan, the vast plateau of south India and

consists geologically of a solid mass of pre-cambrian crystalline rock, chiefly Biotitgneiss with bands of white crystalline limestone.”

- South India and Ceylon, KK.Pillay, p.2

Geologically speaking Madagascar, Ceylon and South India afford resemblances. The presence of a series of rocks of a similar nature in these areas supports the suggestion that these areas once formed part of one land mass

-Pre-historic south India, V.R.RamachandraDikshitar, p.7

வங்கத்திலிருந்தும் ஒரியாவிலிருந்தும் வேறுபல வட இந்தியப் பகுதிகளிலிருந்தும் சென்று குடியேறிய மக்கள், அப் பகுதிகளில் தொல் பழங்காலத்தில் வாழ்ந்தபோது தமிழ் பேசியவர்கள் ஆயினும், அவர்கள் ஒரு காலத்தில் பௌத்தம் தழுவிய காரணத்தால் தமிழ் துறந்து, பாலி மொழி தழுவிச் சிங்கள இனமாக இலங்கையில் மாறிப்போயினர். தமிழர் தாயகமாக இருந்த இலங்கை, இவ்வாறு இந்தியாவிலிருந்து குடியேறிய சிங்களர்க்கும் உரியதாக ஆனது. சிங்களர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டு ஆளும் இலங்கை அரசு, இக் கருத்தினை ஒத்துக்கொள்ளும் வகையில் 1956இல் புத்தரின் 2500ஆவது ஆண்டு பிறந்தநாளை நினைவுகூரும் நிகழ்வில், சிங்களவர்களின் முன்னோரான ‘விஜயன்’, இலங்கைக்கு வருகை புரிந்த நிகழ்வைக் கொண்டாடும் முகமாக அஞ்சல் தலையை வெளியிட்டது.[5]

இலங்கை தொல்தமிழ் நிலமாதலால் ‘கமம்’ ஆகிய ஊர்ப்பெயர், ‘கமம்-காமம்’ எனத் தமிழர் பகுதிகளிலும் ‘gama’எனச் சிங்களப் பகுதிகளிலும் வழங்குகிறது.[6]

சிட்டுக்காமம் –Chittagong

இந்தியாவில் ‘கமம்-காமம்’ சொல்லைச் சமற்கிருதம் ‘க்ராமம்’ எனத் திரித்துத் தமிழுக்குள்ளும் ‘கிராமம்’ சொல்லைச் சமற்கிருதமாக நிலைநிறுத்திவிட்டது. ‘காமம்’ என்னும் சொல், ‘க்ராமம்’ எனச் சமற்கிருதத்தின்வழித் திரிந்து போயிருந்தாலும் அதன் உண்மையான வடிவத்தை வட திரவிட மொழிகள் எனப்படும் பாலி, பிராகிருத மொழிகளும், சில வட இந்திய மொழிகளும் ‘கமம்-காமம்’ என்னும்

மூலவடிவைத் தக்க வைத்துக் கொண்டுள்ளன. ஈழத்தில் உள்ளது போன்றே, 'கதிர்காமம்' என்னும் ஊர்ப்பெயுருச்சேரி மாநிலத்திலும் உள்ளது.

கிழக்கு வங்கத்தின் 'சிட்டகாங் (Chittagong)' என்னும் துறைமுக நகரத்தின் பழைய பெயர் 'சிட்டுக்காமம்' என்பதாகத் தெரிகிறது.'சிட்டகாங்' என்னும் பெயர் பற்றி, Hobson-Jobsonஅகராதி, சர் வில்லியம்ஜோன்சின் ' I believe, from the chatag, which is the most beautiful little bird I ever saw'என எடுத்துக்காட்டிய குறிப்பினால் சிட்டுக்குருவிபோன்ற சிறிய பறவைகள் நிறைந்த சிற்றூர் என்னும் பொருளில் இவ் ஊரின் பழைய பெயர் 'சிட்டுக்காமம்' என்பதாக இருக்கலாம்.

'சிட்டகாங்' ஆகிய கிழக்கு வங்க ஊர்ப்பெயர் மட்டுமல்லாமல் அவ் ஊர் உள்ளடங்கிய 'வங்கம்-வங்காளம்' ஆகிய பெருநிலப் பரப்பினைக் குறிக்கும் சொல்லும் ஒரு தமிழ் வேரிலிருந்தே உருவாகியுள்ளது. கீழை இந்தோ-ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் தமிழ் வழங்கிய பகுதிகளே இவை. 'வங்கம்-வங்காளம்' என்னும் பெயர்கள் 'வங்கு' என்னும் வளைதல் பொருள் வேரிலிருந்து உருவானதாக ஆர்.எல். தருநர் அகராதி கூறுகிறது. ஆறுகள் வளைந்து வளைந்து ஓடிய காரணத்தால் 'bend of a river'என்ற வேர்ப்பொருளை அவ் அகராதி உரைப்பதன்வழி, 'வங்கம்' சொல்லின் வரலாறு வளைவுப்பொருள் தரும் தமிழ்ச்சொல்லுடன் உறவுடையதாக நம்மால் அறியமுடிகிறது. மேலும், இச் சொல், இந்தோ-ஐரோப்பியம் அல்லாத மொழியிலிருந்து உருவானதாக இருக்கலாம் என்ற சுனீத்குமார் சட்டர்ஜியின் 'Like vaṅkú-, belongs to or has been infl. by a prob. non-Aryan word-group for 'bent, crooked'என்னும் கருத்தினையும் அவ் அகராதி எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய வரலாற்றுப் பின்புலத்தால், 'chittagam'என்னும் கிழக்கு வங்க ஊர்ப்பெயர், 'சிட்டுக்காமம்' எனத் தமிழ்வழிப் பிறந்திருக்க வாய்ப்புள்ளது.

கமம் –ham – home

மக்கள் கூடி வாழ்ந்த காரணத்தால் உருவான 'கமம்-காமம்' என்னும் தமிழ்ப்பெயர், இந்தியாவைத்தாண்டி ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன், 'ham'என்னும் பெயரில் சென்று திரிந்தது.

இங்கிலாந்தில் 'ham'என ஈற்றில் முடியும் ஊர்ப்பெயர்கள் பெருந்தொகையின.[7]

சிற்றூர் குறித்த தமிழின் 'கமம்-காமம்', 'ham'என ஆங்கிலத்தில் திரிந்தது. அதே 'ham'சொல், வேறுபல மேலை இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் hem (Old Frisian),heim(German), heima(Old Norse), haims(Gothic)என்னும் வடிவங்களில் திரிந்து வழங்குகின்றது. செருமன் நாட்டில் 'ham'சொல்லின் திரிபான 'heim'சொல்லில் முடியும் ஊர்ப்பெயர்களுள் சில வருமாறு: Pforzheim, Kirchham, Schiltigheim, Mannheim, Mülheim, Hildesheim, Bad Windsheim.

'ham'என்னும் இச் சொல் பற்றி ஆங்கில வேர்ச்சொல் அகராதி அறிஞர் சான் அயிற்றோ (John Ayto), இச் சொல்லின் வேர்ப்பொருள் தெரியவில்லை என்றும் இதற்குச் சிற்றூர் என்பதே பொருள் என்றும் அதனை நினைவுகூரும் முகமாகBirmingham,Fulhamஎன்னும் பெயர்கள் இன்றும் வழங்குகின்றன என்றும் எழுதியுள்ளார். மேலும், ஊரினைக் குறித்த இந்த 'ham'என்னும் சொல்லிலிருந்தே வீட்டினைக் குறித்த 'home'என்னும் சொல் வந்ததென்றும்அதன் வேர் தெரியவில்லை என்றும் அவர் எழுதியுள்ளார் (It is not clear where this came from, although some have connected it with Latin civis 'citizen').

'ham'என்னும் இச் சொல்,'இட்டு-et' என்னும் சிறுமைப்பொருள் பின்னொட்டினைப் பெற்று , 'hamlet'என ஆங்கிலத்தில் சிற்றூரினைக் குறிக்கிறது.'இட்டுவாய் அருஞ்சுனை', 'இட்டிடை', 'ஆகாறு அளவு இட்டிது' எனச் 'சிறியது' என்னும் பொருளில் தமிழில் 'இட்டு' சொல்லாட்சிகள் உண்டு. இவ் 'இட்டு' சொல், சிறுமைப்பொருள் பின்னொட்டாக (-et)மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் வழங்குகிறது எனப் பாவாணர் கூறினார்.

'கமம்-காமம்' என்னும் சொல், கூட்டப்பொருளில் தமிழில் தோன்றி ஊர்ப்பெயராக மாறிய வரலாற்றினைத் தமிழரின் தொல் பழந்தாயகமாகிய ஈழத்திலும், தொல் இந்தியப் பகுதிகளிலும் இந்தியாவைத் தாண்டிய ஐரோப்பியப் பகுதிகளிலும் சேர்த்துக் காண்பது பெருவியப்பாக உள்ளது.

வட இந்திய மொழிகள் கீழை இந்தோ–ஐரோப்பியமானமை

பண்டைக் காலத்திலிருந்த தமிழ்நாடு, இன்று மிகமிகச் சுருங்கிய நிலப்பகுதிக்கு உரியதாக வரலாற்றில் ஆனதாலும், பண்டைக் காலத்தில் வழக்கிலிருந்த வட இந்தியத் தமிழ்ச்சொற்கள் சமற்கிருத மொழியின் கலப்பினால் திரிந்து சமற்கிருதச் சொற்கள் போலவே ஆன காரணத்தாலும், அந்தச் சமற்கிருதச் சொற்களோடு மேலை இந்தோ-ஐரோப்பியச் சொற்களைத் தொடர்ந்து உறவாக்கிக் காட்டிவருகின்ற காரணத்தாலும் பழைய வரலாற்று உண்மையை விளக்கிக் காட்டுவதற்கு இவ்வாறு கூடுதல் விளக்கங்கள் எழுதவேண்டிய தேவை ஏற்பட்டு விடுகின்றது.

சமற்கிருதத்தின் வழிப்பட்ட இந்தோ-ஐரோப்பிய மொழிகளாகக் கூறப்படும் பாலி, பிராகிருதம், இந்தி போன்ற மொழிகள், ஆரியர் இந்தியா வருவதற்கு முன்பிருந்தே இந்திய மக்களால் பேசப்பட்டுவரும் தொல் இந்திய மொழிகளாகும். பெருந்தொகை மக்களால் பேசப்பட்டுவந்த பாலி, பிராகிருதம் முதலான தொல் இந்திய-மொழிகளும் வட இந்திய மொழிகள் பலவும் சமற்கிருதக் கலப்பினால் தம் அடையாளத்தை இழந்து சமற்கிருதத்தின் வழிமொழிகளாக மாறின. இம் மாற்றம், கடந்த மூவாயிரம் ஆண்டளவில் நிகழ்ந்தது. தென்னிந்தியத் திரவிட மொழிகளிலும் தமிழ் தவிர்ந்த ஏனைய திரவிட மொழிகள், தமிழின் அடையாளத்தை இழந்து தனித்தனி மொழிகளாக வரலாற்றில் பிரிந்துபோனதற்கும் சமற்கிருதக் கலப்பே காரணமாகும்.

இந்திய மொழிகளில் முதற்பெரும் மொழியாகக் கருதப்படும் சமற்கிருதம் 24,821 (இருபத்து நான்காயிரத்து எண்ணூற்று இருபத்தொன்று)மக்களால் மட்டும் பேசப்படுகின்ற மொழி என இந்திய உள்துறை அமைச்சின் மொழிப்பிரிவு தெரிவித்துள்ளது (Only 24,821 Indians identified as Sanskrit speakers in 2011 Census, reveals RTI query).2011’ஆம் நடத்தப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி இந்திய மக்கள்தொகையில் 0.002விழுக்காட்டினர் மட்டுமே சமற்கிருதம் பேசுகின்றனர். இவை, மருத்துவரும் குமுகஆர்வலருமான திரு தேபாஷிஷ் பட்டாச்சாரியா என்பார் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ்ப்(RTI) பெற்ற செய்தியாகும் (India Today, 28.09.2022 Issue).

சமற்கிருதம் என்ற இன்றைய மொழியின் மூல முந்துமொழி தொல்தமிழ் ஆயினும், அது, 10-15ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தியம் தாண்டி வடமேற்காகச் சென் று நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன் மீண்டும் கயவாரம் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்து, 'கோகித்தான்' என்னும் மொழியாக வந்து சேர்ந்தது. அக் 'கோகித்தான்', பின்னர் வேதமொழியாகவும் சமற்கிருதமாகவும் கீழை இந்தோ-ஐரோப்பியர்களால் இந்தியச் சூழல்களுக்கு ஏற்பச் செயற்கை மொழியாக வளர்த்தெடுக்கப்பட்டது. இதன் காரணமாகத்தான் சிறு எண்ணிக்கையினராக வந்த கீழை இந்தோ-ஐரோப்பியர்கள் வயிற்றுப்பாட்டிற்காக, வாழிடத் தேவைக்காக இந்தியா எங்கும் பிரிந்து பரந்து சென்று இந்தியா எங்கும் வாழ்ந்திருந்த தொல்குடி மக்களுடன் கரைந்துபோயினர். தங்கள் பேச்சு மொழியையும் கட்டியெழுப்ப முடியாமல் மறந்துபோயினர். கீழை இந்தோ-ஐரோப்பியர்கள் எந்த இந்திய மாநிலத்தில் வாழ்ந்தாலும் அவர்களால் அந்தந்த மாநிலத்து மக்கள் மொழியுடன் சேர்த்தே தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டிய கையறு நிலைக்கு வரலாற்றில் ஆயினர். சமற்கிருதம் வரலாற்றில் எவ்வளவு பெரிய சிறப்பிற்கு உரியதாக உலகோரால் கூறப்படினும் அது பேச்சு மொழியாக ஆகாமல் போனதற்கு இங்குக் குறித்த வரலாறே காரணமாகும். பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையாரின்கூற்றான 'தமிழ், தெலுங்குபோல, இந்தி வங்காளிபோல, சமஸ்கிருதம் இயற்கை மொழியல்ல, தனி மொழியுமல்ல. இன மூல மொழியுமல்ல . அது செயற்கைமொழி. பல மொழிகளின் கூட்டுச் சரக்கான கலப்புமொழி. இந்த உண்மையை மொழி நூலடிப்படையிலேயேகாட்டமுடியும் ' என்பது உலகம் அறியாத உண்மை.

வேதமொழி – சமற்கிருத வேறுபாடு

கீழை இந்தோ-ஐரோப்பிய மொழியாகிய சமற்கிருதத்திற்கு முந்தையது வேதமொழி. இவ் வேதமொழி, இந்தியாவின் வடமேற்கு மாகாணமாகிய பஞ்சாப் பகுதியில் உருவானதாகும். வேதம் உருவான பின், கீழை ஆரியர் மொழி, வேதமொழி எனப் பெயர்பெற்றது. அவ்வாறெனில், வேதம் உருவாவதற்கு முன்பு கீழை ஆரியர்கள் பேசிய மொழி, வேதமொழி எனவும் சமற்கிருதம் எனவும் அழைக்கப்பட்டதில்லை. அவர்கள், நடு ஆசியப் பகுதியிலிருந்து

இந்தியாவிற்குள் நான்காயிரம் ஆண்டின்முன் வந்தபோது அவர்கள் பேசிக்கொண்டிருந்த மொழிக்குக் 'கோகிஸ்தான்' என்பது பெயர் என்பார் பாவாணர்.

கால்டுவெல்லும் திரவிட இறக்கக் கொள்கையும்(Dravidian Descent Theory)

திரவிடர்கள் மேற்கிலிருந்து பலுச்சித்தானத்தைக் கடந்து சிந்து வழியாகத் தெற்கு நோக்கி வந்து குடியேறியவர்கள் என்னும் இறங்குமுகக் கொள்கையினைக் கால்டுவெல் கொண்டிருந்தார். அவர் காலத்தில் தமிழ், தமிழரின் தொன்மையை உலகறிய வெளிப்படுத்திக் காட்டிய சிந்துவெளி, ஆதிச்சநல்லூர், கொடுமணல், கீழடிபோன்ற அகழாய்வுகளும் தொல்காப்பியம், சங்க இலக்கியம் போன்ற பழந்தமிழ் நூல்களும் வெளிப்படவில்லை. ஆதலின், தமிழர், தெற்கே தோன்றிய மூலக்குடியினர் என்னும் கருத்தினைக் கால்டுவெல் மனங்கொள்வதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. அதனால்,

"திராவிட இனம் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே இந்தியாவில்நிலைபெற்றிருந்தாலும், ஆசியாவின் நடுப்பகுதிகளில் அவை பல நாடுகளின் தோற்றங்களுக்கான விளைநிலமாக இருந்திருக்கவேண்டும்; அங்கிருந்து ஆரியர்களையும் உக்ரோ-துரானியர்களையும் விட்டுப் பிரிந்து, பலுஜிஸ்தானில் ஒரு காலனியை ஏற்படுத்திவிட்டு, சிந்து நதி வழியாக இந்தியாவிற்கு வந்திருக்க வேண்டும்." (திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்,ப.90)

எனத் தமிழ்இனத்தின், திரவிட இனத்தின் இறக்கக் கொள்கையைக் கால்டுவெல் எழுதினார். ஆயினும், தமிழ்மொழியின் ஆழ அகலங்களைக் கண்டறிந்த நுண்மாண் நுழைபுலம் மிக்க பேரறிஞராக அவர் திகழ்ந்த காரணத்தால், தமிழ், தமிழரின் தோற்றம் பற்றிய அவர் கருத்து எப்படி இருந்தபோதிலும், தமிழ், இந்தியம் தாண்டி, ஐரோப்பா எங்கும் மூலமொழியாகப் பரவி நிறைந்திருந்ததைக் கண்டு தமிழின் பெருமையை வியந்து எழுதினார்.

"இந்தியாவின் வெப்பப் பிரதேசத்துத் திராவிட மொழிகள் காட்டும் குறிப்பிடத் தகுந்த உறவை வட ஐரோப்பிய பின்லாந்து மக்களின் மொழியிலும், சைபீரிய ஒஸ்தியாக் மற்றும் உக்ரியர்

மொழியிலும் கண்டுபிடித்திருப்பது வியப்பானதே; வரலாற்றின் மௌனம், சாதாரண ஊகங்களுக்கும்கூடச் சாத்தியமின்மை போன்றவற்றால் மொழிகள் மட்டுமே அளிக்கும் சான்றுகளிலிருந்து டிடானியர்கள்(Teutons),ஹெலெனியர்கள்(Hellens),ஏன் செல்டானியர்(Celts)வருகைக்கும் முன்பே ஐரோப்பாவில் பரவியிருந்தவர்களாகத் தெரியும் இனத்தவரோடு தக்காணத்தில் ஆரியர்களுக்கு முன் குடியிருந்தவர்கள் தொடர்புற்றிருந்தனர்! "இந்த நிலவுலகில் எங்கு வாழ்பவராக இருந்தாலும், எந்த நாட்டு மக்களாக இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் இறைவன் செலுத்தியது ஒரே இரத்தம்தான்" என்னும் வாசகத்திற்குக் கிடைத்திருக்கும் சான்று அல்லவா, இது!" (திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் ப.91)

கால்டுவெல் கிறித்தவச் சமயப் பெருமையைப் பரப்பத் தமிழகம் இயேசுவின் தொண்டர். அப் பணியைத் தலைமேற்கொண்டு செய்த விவிலியம் கற்ற பேரறிஞர். விவிலியத்தின் வாசகங்களைப் பொன்மொழிகளாகக் கொண்டவர். அத்தகைய கால்டுவெல், தமிழின் மூலங்கள் உலகம் பரவியிருப்பதை உணர்ந்து அதற்கு அரியதோர் விவிலிய வாசகத்தைப் பயன்படுத்தியது உண்மையான அவரின் ஆய்வு நேர்மையினைக் காட்டுவதாக அறியமுடிகிறது. கால்டுவெல், தமிழ், திரவிட மொழிகளுக்கு இடையே உள்ள ஆய்வினை 'A comparative grammar of the Dravidian or South Indian family of languages'என்னும் பெருநூலாக 1856இல் எழுதி வெளியிட்டார். தமிழின் உயிர்மூச்சு, ஐரோப்பாவில் பரவியிருந்ததை அவர் நன்கு உணர்ந்திருந்ததை மேலை காட்டிய பகுதியில் கண்டோம். அவ் உண்மையின் அடிப்படையில்தான் அந் நூலின் இறுதியில் 'Glossary Affinities'என்னும் பகுதியில் எந்தெந்தத் தமிழ்ச் சொற்கள், எந்தெந்த ஐரோப்பிய மொழிகளில் எப்படியெல்லாம் சென்று திரிந்தன என்பதை மிக ஆழமாக எழுதி வெளிப்படுத்தினார். இன்று, தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதிப் பணியைச் செய்கின்ற நாம், முந்து இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொற்கள் பலவும் தமிழ் மூலத்திலிருந்து கிளைத்துப் பரவியிருக்கின்றன என்னும் உண்மையினை அவரின் அடியொற்றியாக இருந்து கற்ற அளவிலும் பாவாணர் நூல்களையும் கீழை, மேலை இந்தோ-ஐரோப்பிய அகராதிகளைத் தொடர்ந்து கற்று வந்ததன் அடிப்படையிலும்

நம்பிக்கையுடன் தமிழின் முதன்மையை இவ் ஆய்வுகளின் வழி வெளிப்படுத்த விழைகின்றோம்.

இந்தோ–ஐரோப்பிய நாட்டுப் பெயர்களில் தமிழின் வேர்

ஐரோப்பாவின் பின்லாந்து, சைபீரியா, ஒஸ்தியாக், உக்ரியப் பகுதி மொழிகளின் சொற்கள், தமிழுடன் உறவுகொண்டிருப்பதைக் கண்டு கால்டுவெல் தமிழின் பெருமையை வியந்து பார்த்தார். தமிழ்வேரிலிருந்து பல இந்தோ-ஐரோப்பிய நாடுகளின் பெயர்கள்கூட உருவாகியிருப்பதைத் தமிழ்-இந்தோ-ஐரோப்பிய உறவு பற்றிய இவ் ஆய்வில் விளக்குவது பொருத்தமாகும்.

அங்கு –England

‘அங்கு’ என்னும் தமிழ்ச்சொல்லிற்கு வளைவு என்பது பொருள். இச் சொல், ‘வணங்கு-வங்கு-அங்கு’ எனத் தமிழில் தோன்றிய வரலாற்றினைப் பாவாணர் விளக்கினார். ‘அங்கு’ என்னும் இச் சொல்லுடன் உறவுடையதே, யானையை அடக்க யானைப்பாகன் பயன்படுத்தும் வளைத்த கருவியினைக் குறிக்கும் ‘அங்குசம்’ சொல். ‘சங்கு’ என்னும் பழந்தமிழ்ச்சொல், வளைதல் பொருளில் உருவானதாகும். ‘கோடு’, ‘புரி’, ‘வளை’ என்பன இச் சங்கினைக் குறிக்கும் பிற சொற்களாகும். இங்கு உரைத்த மூன்று சொற்களுக்கும் ‘வளைவு’ என்பதே வேர்ப்பொருள். ‘சங்கு’ என்னும் சொல்லும், ‘அமர்-சமர்’; ‘அவை-சவை’ போல், ‘அகர-சகர’ மாற்றத்தில் ‘அங்கு’ என்னும் சொல்லிலிருந்து பிறந்ததாகும். இவ் ‘அங்கு’ ஆகிய வளைவுப்பொருள் குறித்த தமிழ், *ang-/*ank (to bend)என ஓர் முந்து இந்தோ-ஐரோப்பிய வேராகக் குறிக்கப்படுகிறது. தொல் இந்தியாவாகிய பழந்தமிழகத்திலிருந்து மேற்கு நோக்கிப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் வெளியேறியஒரு கூட்டத்தினர் ,‘Denmark’பக்கத்திலுள்ள ஒரு தீவில் சென்று குடியேறினர். அத் தீவு, தூண்டில் முள் போல், வளைவாக இருந்த காரணத்தால் அதற்கு ‘Angul’எனப் பெயரிட்டனர். பின்னர் அத் தீவில் வாழ்ந்த மக்கள் ‘Angles’எனப்பட்டனர். ‘Angul’தீவில் வாழ்ந்த மக்கள் கி.பி. 5-6ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் சென்று குடியேறினர்இங்கிலாந்து மக்களின் ‘English’என்ற சொல் ‘Angles’சொல்வழிப் பிறந்ததாகும். ‘English’மக்களின் நாடு ‘England’எனப்பட்டது.

English - The people and language of England take their name from the *Angles*, a west Germanic people who settled in Britain in the 5th and 6th centuries A.D. They came originally from the Angul district of Schleswig, an area of the Jutland peninsula to the south of modern Denmark. This had a shape vaguely reminiscent of a fishhook, and so its inhabitants used their word for "fishhook" (a relative of modern English angler and angling to name it)—John Ayto

'England'நாட்டிற்கு சுபானிசு மொழியில் 'Inglaterra'என்பது பெயராகும். 'தரை' என்பது நிலம் குறிக்கும் தமிழ்ப்பெயர். இதுவே 'Inglaterra'வில் இரண்டாவது சொல்லாக உள்ளது.

ஈன் –German

'ஈனுதல்' என்ற தமிழ்ச்சொல், இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் 'gene, germ' என்றெல்லாம் திரிந்து பலநூறு சொற்களாக விரிந்த வரலாற்றை இவ் ஆய்வில் தனித்த நூல் தொகுதியில் விளக்கவுள்ளோம். அங்கு, 'ஈன்-gene-germ' சொற்களின் விரிவான வரலாற்றைக் காணலாம். தமிழின் 'ஈன்' சொல்வழித் தோன்றிய 'germ'சொல்லிலிருந்தே 'German'என்னும் நிலத்தின் பெயரும் 'Germany'என்னும் நாட்டின் பெயரும் தோன்றின.ஒருகுடும்ப மக்கள் என்னும் பொருளில் 'born of the same mother and father; closely related' என அச் சொல்லிற்கு அகராதிகள் பொருள் உரைத்த இடத்தில் இதனைக் காணலாம்.

'இனம்' என்னும் சொல் கூட்டம் குறிப்பது. 'பறவையினம்', 'விலங்கினம்', 'மக்களினம்' என்ற இடங்களில் இதனைக் காணலாம். 'இனம்' ஆகிய இச் சொல், 'ஈனுதல்' என்னும் வேர்வழிப் பிறந்தது என்று அறிஞர் அருளி எழுதினார். அதாவது, எந்த உயிரினத்தின் கூட்டமும் பல்கிப் பெருகுவது ஈனுதல்வழி என்பதே இதன் உட்பொருளாகும். 'ஈனுதல்' வழி உருவான கூட்டப் பொருள் தந்த 'இனம்' சொல், மக்கள் தொகுதியையும் 'மக்களினம்' எனக் குறித்தது. 'குல்' என்னும் கூட்டக்கருத்து வேரிலிருந்த்துல்-குலம்என மக்கள்கூட்டம் குறிக்கும் சொல் பிறந்ததைப் பாவாணர் விளக்கியுள்ளதை இவ் இடத்து 'இனம்' சொல்லுடன் சேர்த்து எண்ணுக.

தோடு –Teutonic

‘கூட்டம்’ என்னும் பொருள்தரும் பிறிதொரு தமிழ்ச்சொல் ‘தோடு’. வேல்கள் தொகுதியாகத் திரண்டிருந்ததைத் ‘தோடு கொள் வேல்’ என்று புறநானூறு கூறும். பறவைகள் திரண்டிருந்ததைத் ‘தோடுகொள் புள்’ என்று புறப்பொருள் வெண்பாமாலை கூறும். ‘தோடு’ ஆகிய இச் சொல், *teuta(tribe)என ஓர் முந்து இந்தோ-ஐரோப்பிய வேராகத் திரிந்து மக்கள் இனத்தைக் குறிக்கும் ‘ Teutonic, Dutch’ஆகிய சொற்களைத் தோற்றுவித்தது.

இந்தோ-ஐரோப்பிய இனங்களை ஒன்பது பெருங்கிளைகளாக இந்தோ-ஐரோப்பிய அறிஞர்கள் குறித்துள்ளனர் என்றும் அவ் ஒன்பதனுள் தமிழுடன் நெருக்கமுடையவை மேலை ஐரோப்பியக் கெலத்தியம், செருமானியம்(தியூத்தானியம்), இத்தாலியம், எல்லெனியம் (கிரேக்கம்) என்ற நான்கும் கீழை இந்தோ-ஐரோப்பியச் சமற்கிருதமும் என்று பாவாணர் தமது தமிழர் வரலாறு நூலில்(ப.163) எழுதினார்.

பாவாணர் குறிப்பிட்டவற்றுள் குறிப்பிடத்தகுந்த தியூத்தானிய இனத்தின் மூல வரலாறு தெளிவாகத் தெரியவில்லை என சி.டி.ஆனியன் தன் வேர்ச்சொல் அகராதியில் குறிப்பிட்டுள்ளார்.

Teutontjū.tən member of a people of unknown race reckoned among the peoples of Germania(see **german**). XVIII. L-Teutoni, teutones (pl.), f. IE. Base meaning ‘people’, ‘country’, ‘land’. So Teutonic tiutɔ.nik pert. to this people, later identified with Germanic. XVII (T. Knights, T.Order, military order of German knights). –F teutonique-L. Teutonicus. comb. form Teu(o)-XIX.

-C.T.Onions

அர் – Argentina

தமிழில் ‘அர்’ என்பது ‘சிவந்தது’ என்னும் பொருள்தரும் ஓர் வேர்ச்சொல். ‘அர்-அரக்கு; அர்-அரத்தம்; அர்-அருக்கன்(கதிரவன்)’ என்றெல்லாம் ‘அர்’ ஆகிய வேர், நிறப்பொருளிலும் ஒளிப்பொருளிலும் சொற்களைத் தோற்றுவித்துள்ளது. இவ் ‘அர்’ என்னும் ‘*arg(to shine)என ஒரு முந்து இந்தோ-ஐரோப்பிய வேராக மாறியுள்ளது.இவ் வேரில் பிறந்த ‘Argentinus’என்னும் இலத்தீன் சொல், ஒளியுடைய வெள்ளியைக் குறிப்பது. ‘வெள்ளி’ என்னும் தமிழ்ச்சொல்லும் ‘வில்’ என்னும் வெப்பக்கருத்து

வேரிலிருந்து உருவானதை பின்னர்ச் சுட்டவுள்ளோம். *argஎன்னும் வேரிலிருந்து பிறந்த 'Argentinus'என்னும் சொல், வெள்ளியை மிகுதியாக உடைய'Argentina'என்னும் நாட்டின் பெயரினைத் தோற்றுவித்தது.

விடலை –Italy

தமிழில் 'விடை-விடைத்தல்' என்பது 'பெரியது' என்னும் பொருளது. விலங்கினத்துள் பெண் இனத்தைவிட ஆண் விலங்கு உருவில் பெரியது ஆதலால், அதனை 'விடை' என்று சொல்வர். சங்க நூல்களில் காளை மாடு, 'ஓங்கு விடை '(அகம்.214:10) எனவும் 'கதழ் விடை'(கலி.103:40) எனவும் ஆட்டுக்கிடா 'மை விடை'(புறம். 364:4) எனவும் ஆண் பூனை 'வெருக்கு விடை'(புறம். 324:1) எனவும் அழைக்கப்பட்ட சான்றுகளில் இதனைக் காணலாம்.

சிவனின் ஊர்தியாகிய காளை, 'விடை' எனவே சொல்லப்படும் 'தோடுடைய செவியன் விடையேறி' எனத் திருஞானசம்பந்தர் சிவனைப் பாடுவார். மக்களினத்திலும் பெண்ணினும் உருவில் பெரிய இளைஞர் 'விடலை' என அழைக்கப்பட்டுள்ளனர். 'விடலை' என்ற சொல், இலத்தீனில் 'vitulus'எனத் திரிந்து கன்றினையும் கால்நடைகள் தங்கிய இடத்தினையும் குறித்துள்ளது. கன்றினையும் கால்நடைகள் தங்கிய இடத்தினையும் குறித்த 'vitulus'சொல், அங்கிருந்த பழங்குடி மக்களைக் குறிக்கும் 'vitali' சொல்லைத் தோற்றுவித்தது. விடை - vitulusசொல் வரலாற்றை முதற்கண் சுட்டியவர் பாவாணர்.

இந்த 'vitali'சொல்லே பின்னர் 'Italy'என்ற நாட்டின் பெயராக மாறியது. இதன் வரலாற்றினை 'Traditionally said to be from Vitali, name of a tribe that settled in Calabria, whose name is perhaps somehow connected with Latin vitulus "calf." Or perhaps the country name is directly from vitulus as "land of cattle,"என்று இணையவழி வேர்ச்சொல் அகராதியும் பிற வேர்ச்சொல் அகராதிகளும் குறித்துள்ளன.

ஒரு காலத்தில் மாடுகள் நிறைந்திருந்த சென்னையின் ஒரு பகுதி, 'மந்தைவெளி' என அழைக்கப்பட்டதை 'விடலை' என்னும் சொல்லிலிருந்து பிறந்த 'Italy'சொல்லுடன் இணைத்து எண்ணலாம்.

'Denmark'நாட்டின் பெயர் வரலாறு இம் முகவுரையில் 'கயவாரம்' பற்றி விளக்கிய பகுதியில் உரைக்கப்பட்டுள்ளது. England,

German, Teuton, Dutch, Argentina, Italyஎன்ற நாடுகளின் பெயர்களைக் கூட இவ்வாறு தமிழ் வேரிலிருந்து வருவித்து உரைக்க இவ் வேர்ச்சொல் ஆய்வு துணை செய்கிறது. ஐரோப்பியப் பகுதிகளில் தமிழ் கொண்டிருந்த உறவினைக் கண்டு வியந்த கால்டுவெல் வழியில், சில ஐரோப்பிய நாடுகளின் பெயர்களுக்கும் தமிழ் வேராகி இருப்பதை நம்மால் கண்டு மகிழமுடிகிறது.

திரவிடர் ஏற்றக் கொள்கை(Dravidian Ascent Theory)

தமிழின் முதன்மையை முதற்கண் உலகிற்கு வெளிப்படுத்திய அறிஞர் கால்டுவெல், தமிழர்களும் ஆரியர்களைப் போல ஆரியர்களின் தாயகமாகிய நடு ஆசியப் பகுதியிலிருந்து பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் புறப்பட்டு இந்தியாவிற்குள் வந்தவர்கள் என்றே எழுதினார். பாவாணர், கால்டுவெல் கருத்தினை முற்றாகத் தம் நூல்களில் மறுத்து எழுதினார். அறிஞர் லெவிற்று, தமிழர்கள் தமிழ்மண்ணில் தெற்கே தோன்றி வடக்கேயும் வடமேற்காகாவும் சென்று பரவியவர்கள் என்ற பாவாணர் கருத்தினை ஏற்று எழுதினார்.

தமிழ், ஆத்திரேலியப் பழங்குடி மக்கள் மொழிகளுடன் உறவுடையதாய் இருப்பதைக்கொண்டு அறிஞர் லெவிற்று இவ் வரலாற்று வெளிச்சத்தைப் பெற்றார். ஆத்திரேலியாவில் வாழும் பழங்குடிகள் அம் மண்ணில் 40,000ஆண்டுகளுக்குமுன் சென்று குடியேறியவர்கள் என்றும் அவர்கள் மொழி தமிழுடன் உறவுடையதாய் இருப்பதைக் கொண்டு, அதற்கு முன்பே தமிழ், தமிழ்நிலத்தில் தோன்றி வளர்ந்திருக்கவேண்டும் என்றும் அவர் முடிவுசெய்தார்.

Scholars of the Australian aborigines see Australian aborigine languages as being connected with the Dravidians. The evidence for this is remarkable. There is also evidence of connection between Australian aborigines and Dravidians in the kinship system and in the use of boomerang. The Australian aborigines were cut off from the rest of civilization by the rising of the oceans since about 6000 B.C. Scholars of the Australian aborigines calculate them to have entered Australia from South India about 40,000 years ago. Thus, Dravidians in India go back this far at least. By this argument, Dravidian moves from South to North India,

and into Iran and further, and Uralic, Altaic, and Indo-European, etc. break off from a main Dravidian stock. It has not yet been set in stone whether Dravidian is a parent, or whether Dravidian as we know it is an elder sister of Indo-European.

Collected papers in Dravidian studies, p.107

மாந்தன் பேசிய மொழிகள் அனைத்தும் ஒரு மூலமொழியிலிருந்து தோன்றியவை (Monogenesis) என்னும் கருத்தினை முதற்கண் ஆய்ந்துரைத்தவர் Alfredo Trombetti(1866-1929) என்னும் இத்தாலி நாட்டு அறிஞராவார். தமிழுக்கும் பிற திரவிட மொழிகளுக்கும் ஆத்திரேலியப் பழங்குடி மக்கள் மொழிகளுக்கும் இடையிலான நூற்றுக்கும் மேற்பட்ட சொல்லுறவுகளை Alfredo Trombetti தொகுத்துள்ளார். இத் தரவுகளைக் கொண்டு Jonathan Morrisஎன்பார் Mother Tongue (2006)இதழில் கட்டுரை ஒன்றினையும் எழுதியுள்ளார்.[8]

இவ் ஆய்வுத்திட்டத்தின் முதன்மைப் பதிப்பாசிரியர்முனைவர்கு. அரசேந்திரன், தமிழுக்கும் ஆத்திரேலியப் பழங்குடி மக்கள் மொழிகளுக்கும் இடையில் உள்ள உறவுகளைப் பல்லாண்டுகளுக்குமுன் தம் ஆய்வில் எழுதிய சொற்பட்டியலும் இங்குக் குறிப்பிடத்தக்கது.[9]

கீழை, மேலை இந்தோ–ஐரோப்பிய அகராதிகளில் ஒப்பீடு

மேலை இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அகராதி அறிஞர்கள் தங்கள் மொழிகளில் புழங்கும் சொற்களின் வரலாற்றினைத் தங்களின் இன மொழியான சமற்கிருதச் சொற்களுடன் பெரிதும் பொருத்திப்பார்த்துத் தங்கள் அகராதிகளில் எழுதியுள்ளனர். அவ்வாறே, மானியர் வில்லியம்சு (Monier Williams),பாலி மொழிக்கான அகராதி (Pali – English Dictionary) வரைந்த ரைசுடேவிட்சு, வில்லியம் ஸ்டீட் (T.W.Rhys Davids, William Stede) போன்ற கீழை இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அகராதி அறிஞர்கள் தங்களின் சமற்கிருதச் சொல் வரலாற்றினை மேலை இந்தோ-ஐரோப்பியச் சொற்களுடன் பொருத்திப்பார்த்துத் தங்கள் அகராதிகளில் எழுதியுள்ளனர். ஆயின், கீழை, மேலை இந்தோ-

ஐரோப்பிய வேர்ச்சொல் அகராதிகள் தங்கள் மொழிகளின் சொற்களுக்குத் தெளிவான வரலாற்றினை எழுதியளித்து நிறைவடையவில்லை.

தாது பாடம் காட்டும் வேர்களின் பொருத்தமின்மை

பாணினியால் எழுதப்பட்ட சமற்கிருத இலக்கண நூல் அஷ்டாத்யாயீ (Aṣṭādhyāyī) ஆகும். இதன் காலம் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டாகக் கருதப்படுகிறது. எட்டுப் பகுப்புகளால் ஆன இந்நூலுடன் உறவுடையது தாதுபாடம் என்னும் நூல். இது சமற்கிருத வேர்ச்சொற்கள் பற்றியது. இதில் 2000 சமற்கிருத வேர்ச்சொற்கள் விளக்கப் பட்டுள்ளன. அவ் வேர்கள் பற்றி ஆய்வுசெய்து விளக்கிய விட்னி, எட்கிரன் ஆகியோர், "தாதுபாடத்தில் கண்டுள்ளவேர்களுள் பெரும்பாலானவை உன்னிப்பில் உருவானவை" என்றும் "தாதுபாட வேர்களில் பாதியை-ஏன் பாதிக்குமேல்-எந்தக் காலத்திய சமற்கிருத நூலிலும் இதுவரை கண்டுபிடிக்கவில்லை; இனியும் கண்டுபிடிக்கப் போவதில்லை" (More than half-actually more than half of them never have been met with, and never will be met with in the Sanskrit literature of any age, The Study of Hindu grammar and the study of Sanskrit,1884) என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

சமற்கிருத வேர்ச்சொற்கள் பற்றி ஆய்ந்த விஸ்வநாத் காய்ரே அவர்களும், "சமற்கிருத வேர்ச்சொற்கள் என்று கூறப்படுபவை சொற்களுக்குப் பொருத்தமாகக் கற்பிக்கப்பட்டவையே. சொல்லின் மெய்யான (அல்லது கற்பனை செய்த) பொருளுக்கு ஏற்ப அந்த வேர்களுக்கும் பொருள் கற்பித்தனர். இப்படித்தான் 'சூர்யா' என்பதற்குச் சு-அசைவு; சூ-ஊக்குவி என இரண்டு வேர்களைக் கற்பித்தனர்." (Roots, particularly in the Sanskrit etymological tradition are phonetic abstractions from words. They are assigned meanings to be consistent with the known or imagined meanings of the word. That is how a familiar word like Surya could be derived from the two roots su, to move and su$, to stimulate)

"வேத சமற்கிருதம் இந்தியாவில் உள்நாட்டு(தமிழிய) மொழிகளைப் பேசுவோர் பெரும்பாலாராக வாழ்ந்த சூழ்நிலையில் உருவாக்கப்பட்ட மொழி. எனினும், உள்நாட்டு மொழிச்சொற்களின் தாக்கம் இருந்திருக்கும் என்பதை ஒரு கருதுகோளாகக் கூட மனதிற்கொள்ள மறுக்கும் நிலை உள்ளது. அத்தகைய ஆய்வுகளில் ஈடுபடுவாரும்

இலர்” (In spite of the acceptance of the premise that Vedic Sanskrit was developed in India in an environment of indigenous languages, etymological relations of Sanskrit words with those in the Indian languages have not been even conceptually considered, let alone being investigated)எனச் சமற்கிருத வேர்ச்சொற்கள் உன்னிப்பில் உருவாக்கப்பட்டவை என்று குறிப்பிட்டுள்ளார் (Visnu in the Veda, Annals of Bhandarkar Institute,2004,p.164).

தமிழில்'surya'சொல்லின் வேர்

'தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்ட'த்தில் ஒப்புமையுடைய வேர்ச்சொற்களாகக் கண்டெடுக்கப்பட்டவற்றுள் 'எல்' என்பதும் ஒன்று. கீழைக் கடலில் தோன்றி மேலெழும் தோற்றம் தருதல் காரணமாக, கதிரவன், உயர்வுப்பொருளில் 'எல்' எனப்பட்டிருக்கவேண்டும். அவ் 'எல்' சொல், மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் ' sol, solar'எனக் கதிரவன் குறிக்க அடிப்படையாயிற்று.இந்த sol, solarவழி உருவானதே மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் கதிரவனைக் குறிக்கும் 'sun'சொல்லும், கீழை இந்தோ-ஐரோப்பியத்தில் கதிரவனைக் குறிக்கும் 'surya'சொல்லும் ஆகும். இங்குக் குறித்த 'sol, solar, sun, surya'உறவினை மேலை இந்தோ-ஐரோப்பிய அகராதிகள் காட்டியுள்ளன.

தமிழில் 'எல்' சொல் தோன்றிய வரலாற்றினையும் அச் சொல், கீழை, மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் பல சொற்களைத் தோற்றுவித்த வரலாற்றினையும் இத் திட்டத்தில் வெளிவரும் இந் நூலில் விரிவாகக் காணலாம்.

இந்தோ–ஐரோப்பிய வேர்களும் தமிழ்வேர்களும் – ஞானப்பிரகாசர், பாவாணர்

கால்டுவெல்லிற்குப் பிறகு வேர்ச்சொல் ஆய்வில் சிறந்து விளங்கிய யாழ்ப்பாணம் நல்லூர் ஞானப்பிராகசர், இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொற்கள் பற்றிக் கூறிய கருத்துகுறிப்பிடத்தக்கது(Linguistic evidence for the common origin of the Dravidians and Indo-Europeans, Tamil Culture II, ப.1, 1953).[10]

“இந்தோ ஐரோப்பிய மொழிகளில் ‘வேர்கள்’ என உன்னிக்கப்படுபவை பொருள் தொடர்பற்ற வெறும் குறியீடுகள்தாம். திராவிட மொழி வேர்களோவெனில் ஐயத்திற் கிடமின்றிப் பொருளையும் காரணத்தையும் காட்டுபவையாக உயிரோட்டமுள்ள முளைக்கரு போலத் தோன்றும்; எந்தக் கருத்தோட்டத்தில் பல்வேறு சொற்கள் உருவாயின என்பதைத் தெற்றென அவை காட்டும் வகையில் அமைந்துள்ளன. இத்தன்மை அவற்றுக்கு இல்லாததால் இந்தோ ஐரோப்பிய ‘வேர்கள்’ இருள்மண்டிய பொருளற்ற வெறும் ஒலிக்குவியல்களாகவே தோன்றும். அவற்றுக்கும் தெளிவு தந்து ஒளிகாட்டி உயிரூட்டம் தரக்கூடியவை திராவிடமொழி வேர்கள்தாம்”எனவும்,

“இந்தோ ஐரோப்பிய மொழிகளின் தந்தையாகிய தொன்மொழியின் தோற்றத்திற்கான சான்றுகள் தமிழில்தான் கிட்டும்” (Tamil Supplies this long looked for clue to finding the true origin of the proto Indo-European language)எனவும்(The origin of language, a new theory, The Madras Chrisitan college magazine, ix, p.4, 1929)கூறிய விளக்கப்பகுதிகளால் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் வேர்கள், தமிழோடு தொடர்புகொண்டு தம் வரலாற்றைச் சரியாக அறியவேண்டியநிலையில் இருக்கின்றன என்னும் உண்மையினை அறியமுடிகிறது.

கால்டுவெல் வழியில் தமிழ்-இந்தோ-ஐரோப்பிய உறவினை நெடுங்காலம் ஆய்வுசெய்த பாவாணர், தமிழ், இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கு மூலமாக இருக்கும் உண்மையைப் பின்வருமாறு தெளிவாக விளக்கியுள்ளார்:

‘ஐரோப்பிய மொழியமைப்பின் அல்லது வரலாற்றின் திறவுகோல் தமிழிலேயே ஆழப்புதைந்து கிடக்கின்றது’(தலைமைத்தமிழ், ப. 46). ‘மொழிநூல் திறவுகோல் தமிழிலேயே உள்ளதென்னும் உண்மையை அவர் உணர்வராயின் வியக்கத்தக்க உண்மைகள் வெளிப்படுவது திண்ணம்’ (தமிழ் வரலாறு, ப.xxvii).

ஞானப்பிரகாசர், பாவாணர் ஆகியோரின் இக் கருத்தினை விளக்கும் வகையில் சில எடுத்துக்காட்டுகள் இங்குக் காட்டப்படுகின்றன.

குடங்கு–குரங்கு-krengh-ring

'குட' தமிழில் வளைவுப் பொருள் குறிக்கும் ஓர் அடிச்சொல். இச் சொல்லிலிருந்து, வீட்டினைக் குறிக்கும் 'குடங்கர், குடிகை, குடிசை, குடில்' முதலான சொற்கள் பிறந்தன. 'குட' என்னும் இவ் வளைவுப்பொருள் வேரிலிருந்தே 'குடங்கு' என்னும் தமிழ், ட-ர மாற்றத்தில் 'krengh'என்னும் ஓர் முந்து இந்தோ-ஐரோப்பிய வேராக மாறியது. இந்த 'krengh'என்னும் வேரிலிருந்தே வளைவான தோற்றமுடைய 'ring'என்னும் மோதிரம் குறிக்கும் சொல் பிறந்தது எனச் சேம்பர்சு அகராதி விளக்கியுள்ளது.

தமிழில், கடல், சக்கரம், சக்கரப்படை, மோதிரம் ஆகிய நான்கு பொருள்களையும் குறிக்கும் பழந்தமிழ்ச்சொல் 'ஆழி' என்பது. மேற்குறித்த நான்கு பொருள்களுக்கும் உரிய வேர்ப்பொருள் 'வளைவு/ வட்டம்'என்பதே. கீழைத் தமிழுலகில் தோன்றிய'மோதிரம்' குறிக்கும் 'ஆழி' சொல்லும், மேலை இந்தோ-ஐரோப்பிய உலகில் தோன்றிய 'ring' சொல்லும் 'வளைவு' என்னும் வேர்ப்பொருளில் தோன்றியவையே. ஆயின், இந்த 'ring'சொல், பல்லாயிரம் ஆண்டின்முன் 'குல்' என்பதோர் வளைவுக் கருத்து வேரிலிருந்து குல்-குள்-குள்+து-குடு-குடுவை; குல்-குள்-குள்+து-குடு-குடம்; குல்-குள்-குள்+து-குடு-குடங்கு; குள்-குள்+து-குடு-குடங்கு-குரங்கு -krengh-ringஎனத் தமிழ்வேரிலிருந்து தோன்றியது என்பதை இத்தகைய தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு ஆய்வுமுயற்சியினால் மட்டுமே அறியமுடியும். மேலும், 'குடங்கு' என்னும் இத் தமிழ்ச்சொல், 'ட-ர' மாற்றத்தில் ' ker/sker'என இரு முந்து இந்தோ-ஐரோப்பியக் கற்பித வேராக மாறிக்கிடக்கின்றது. ' ker/sker'என்பன உண்மையான வேரில்லை. 'குர்(kur)'என்பதே சரியான வேர்.

சேம்பர்சு அகராதி, 'circle, circus, circa'ஆகிய சொற்களினை அவை பிறப்பதற்கு மூலமாகக் காட்டிய ' krengh'வேருடன் உறவுபடுத்தியே உரைத்துள்ளது. மேலும், 'cir'என்னும் இவ் வடிவுடன் 'search'சொல்லினை ஆங்கில வேர்ச்சொல் அகராதிகள் உறவுபடுத்தியுள்ளன. மீண்டும் மீண்டும் திரும்பித் திரும்பியும் ஒன்றினைச் சுற்றிச் சுற்றி ஆய்வுசெய்வதே'search-research'ஆகும். இவ்வாறு, 'குல்' என்னும்கூட்டக் கருத்து வேர், மூலமொழி வேராக இருந்து, இந்தோ-

ஐரோப்பியமொழிகளில் உருவாக்கிய சொற்களின் வரலாற்றினைச் செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனத்திற்கு அளித்த ஆய்வறிக்கையில் முதன்மைப் பதிப்பாசிரியரால் முன்னமே எழுதப்பட்டுள்ளது.

குடங்கு–குரங்கு-krengh-ring – linkஉறவு

தொடரிகள்(chain) உருவாக்கப் பயன்படும் வளையங்களைக் குறிக்கும் 'link'என்னும் வளைவுப்பொருள் சொல்லிற்குச் சேம்பர்சு அகராதியும் இணையவழி வேர்ச்சொல் அகராதியும் *kleng (to bend, turn)என்னும் கற்பித வேரினைக் குறித்துள்ளன.

ஆக்ஸ்போர்டு அகராதி, இந்த 'link' சொல்லுடன் உறவுடைய மேலை இந்தோ-ஐரோப்பியச் சொற்களாக,*hlenk-r* (Old Norse); *hlekk-r* (Icelandic); *lænker*(Old Swedish); *länk* (modern Swedish); *lænke* (Danish); **hlaŋkio-z* (Old Germanic type); *hlęncan* (Old English); *lancha* (Old High German); *gelenke* (Middle High German);*gelenk* (German) ஆகிய சொற்களை எடுத்துக்காட்டியுள்ளது.ஆக்ஸ்போர்டு அகராதிகாட்டியுள்ள இச் சொற்கள் அனைத்திற்கும் *kleng (to bend, turn)எனச் சேம்பர்சு அகராதி காட்டிய வேர் உறவுடையதாக அமைந்துள்ளது. ஆதலின், 'link', சொல்லும் ஒருவகையில் 'ring'சொல்லிற்குக் காட்டிய குல்-குள்-குள்+து-குடு-குடங்கு-குரங்கு-kreng hஎன்னும் வேருடன் உறவுடையதாகவே தெரிகிறது. *krenghஎன்னும் வடிவம், 'ர-ல' மாற்றத்தில் 'kleng'என்றாகியுள்ளது. சேம்பர்சு அகராதி காட்டிய 'krengh'வேரும் இணையவழி வேர்ச்சொல் அகராதி காட்டிய 'klengh'வேரும் ஒன்றாகவே இருத்தல்வேண்டும்.

வளைவுப் பொருள்link'உம் விளக்குத்திரி link'உம்

ஆங்கிலத்தில் 'link'என்னும் பிறிதொரு சொல், முறுக்கப்பட்ட/திரிக்கப்பட்ட விளக்குத்திரியினைக் குறிக்கும். இவ் விளக்குத் திரியினைக்குறித்த 'link'சொல்லினை இணையவழி வேர்ச்சொல் அகராதி *leuk(light, brightness)என்னும் ஒளிப்பொருள் குறித்த வேருடன் உறவுபடுத்தியுள்ளது. ஆயின், ஆக்ஸ்போர்டு பேரகராதி, வளையம் குறிக்கும் 'link'சொல் பிறப்பதற்குக் காரணமான வேரினையே விளக்குத்திரி குறிக்கும் 'link'சொல்லிற்கும்

உறவுடையதாக இருக்கலாம் என்னும் பொருளில் 'Perhaps the likeliest hypothesis is that the word is identical with link; the material for torches may have been made in long strings, and divided into 'links' or segmentsஎன எழுதியுள்ளது.

தமிழில் 'திரி' என்னும்சொல் 'கயிறு' குறிக்கும். இச் சொல் வளைவுப்பொருளில் தமிழில் உருவானது. நீண்ட வடிவத்தில் கயிற்றினைத் திரிப்பது காரணமாக அது 'திரி' எனப்பட்டது. இந் நீண்ட கயிற்றுத் திரியினைப் பிறகு விளக்கு எரிப்பதற்கு ஏற்றவாறு சிறுசிறு துண்டாக வெட்டிப் பயன்படுத்துகின்றோம். விளக்குத்திரிக்கு இங்குக் கூறப்பட்ட இதே விளக்கத்தினையே, ஆங்கிலத்தில் விளக்குத்திரியினைக் குறிக்கும் 'link' சொல்லிற்கு ஆக்ஸ்போர்டு அகராதியும் கூறியிருப்பது கண்டு மகிழத்தக்கது.

குடங்கு–குரங்கு-krengh-crown-corona

'குட' வழித் தோன்றிய 'krengh'வேரிலிருந்தே வளைத்து வளைத்துத் தொங்கவிடப்படும் மாலையினையும், வளைந்த மேற்பகுதிகள் பலவற்றைக் கொண்டுள்ள மணிமுடியினையும் குறிக்கும் 'crown'சொல்லும்தோன்றியதாகக் கீற்று, சேம்பர்சு அகராதிகள் எழுதியுள்ளன.உலகை மருட்டிய நோய், 'corona'. அந் நோய் குறிக்கும் 'corona'சொல், மணிமுடி குறித்த 'crown'சொல்லிலிருந்தே பிறந்ததாக அறிஞர்கள் எழுதியுள்ளனர். இந் நோயினை உருவாக்கிய நுண்கிருமிகளின் மேற்புறம் மணிமுடியின் வடிவம்போல் வளைந்து வளைந்து இருந்த காரணத்தால் வளைவுப் பொருளில் உருவாகியிருந்த 'crown' சொல்லிலிருந்து 'corona' சொல்லினை உருவாக்கினர்.[11]

The name "coronavirus" is derived from Latin corona, meaning "crown" or "wreath", itself a borrowing from Greek κορώνηkorṓnē, "garland, wreath". The name was coined by June Almeida and David Tyrrell who first observed and studied human coronaviruses. The word was first used in print in 1968 by an informal group of virologists in the journal Nature to designate the new family of viruses.

-Wikipedia

குட – குடிசை –house – white house

வட்ட வடிவமான சுவரினைக் கொண்டு கட்டப்பட்டது காரணமாக, வட்டக் கருத்தில் வீடு குறிக்கும் சொற்கள் வளைவுப் பொருள்தரும் 'குட' வேர்வழிப் பிறந்தன எனக் கூறினோம். இக் 'குட' சொல்லே, 'ஒடிந்த இடை-ஒசிந்த இடை' போல் 'ட-ச' மாற்றத்தில், 'house'என மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் திரிந்து வீட்டினைக் குறித்தது. 'வெல்-வெது-வேது' வழிப் பிறந்த 'white'சொல்லும், குட-குடிசை வழிப் பிறந்த 'house'சொல்லும் சேர்ந்து உருவானதுதான் அமெரிக்கப் பேரரசின் வெள்ளை மாளிகையைக் குறிக்கும் 'white house'என்னும் சொல்லாகும்.

hut - (F; OHG.) M.E. *hotte;* F.*hutte*, a cottage; cot grave; Ou;G. *hutta (*G. *hutta*), a hut + swed, *hydda,* a hut ; cf. skt.*kuti,* a hut; from *kut,* to bend (hence to cover)

house - The ultimate origins of house are uncertain. Germanic *khusam*; German *haus*; Dutch *huus*, Swedish *hus*; Old Norse *hus*; *khusam*came from an Indo & European *keudh*cover; hide. Source also of English hide, hoard and hut.

-Skeat

'hut', 'house' 'hide', 'hoard'ஆகிய சொற்களும் குட-குடி-குடிசை ஆகிய சொற்களும் வளைவுப்பொருளில் இணைந்துள்ளன. 'white house'சொல்லின் 'house',தமிழின் குட-குடி-குடிசை சொல், 'ட-ச' மாற்றத்தில் 'photo-phos' போல்உருவானதே.

'குல்' என்னும் ஓர் வளைவுக்கருத்து வேர்வழி உருவான மேலை இந்தோ-ஐரோப்பியச் சொற்களே ' crown, corona, hut, house'ஆகியன. இச் சொற்கள் பலவும் வெவ்வேறு சூழ்நிலையில் வெவ்வேறு பொருள்களைக் குறிப்பதனை நாம் அறிவோம். 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே ' என்னும் தொல்காப்பிய நூற்பாவின் அடிப்படையில் இச் சொற்கள் ஒவ்வொன்றும் மொழியில் ஆழமான பொருள் குறிப்பதற்கு உரியதாக அன்றாட வழக்கில் புழங்குகின்றது.

இச் சொற்கள் தோன்றிய வரலாற்றினைச் சொற்பொருள் விளக்கம் எழுதும் அகராதி அறிஞர்களும், இச் சொற்களைக் கையாளும் பல்துறை அறிஞர்களும் அறிவதில்லை. ஆயின், வேர்ச்சொல் அறிஞன், இச் சொற்களின் வரலாற்றினைப் போராடி அறிந்துவிடுவான். இதனைத் தான், தொல்காப்பியர், ‘மொழிப்பொருள் காரணம் விழிப்பத் தோன்றா’ என்ற நூற்பாவில் தெரிவித்துள்ளார். மொழியின் சொற்களுக்கான மூலகாரணம் பார்த்த அளவில் தோன்றாது என்பதே இந் நூற்பாவின் சரியான பொருளாகும் எனப் பாவாணர் கூறியிருப்பது முற்றிலும் உண்மையாகும்.

வெப்பக் கருத்து வேர் 'வில்–வெல்'

தமிழில் ‘வெல்’ என்பது ஓர் வெப்பக்கருத்து வேர். இது, வெல்பு-வெப்பு; வெல்பு-வெம்பு; வெல்கு-வெக்கு-வெக்கை; வெல்+து-வெது-வேது; வெல்-வெய்-வெயில்/வெய்யில்; வெல்-வெய்-வெய்+து-வெய்து; வெல்-வெள்-வெளி-வெளிச்சம்; வெல்-வெள்-வெள்ளி; வெல்-வெள்-வெள்+து-வெடு-வெட்டு-வெட்டை (உடற்சூட்டு நோய்); வெல்-வெள்-வெள்+து-வெடு-வெட்டு-வெட்ட(ஒளி, எ.கா.வெட்ட வெளிச்சம்) எனப் பற்பல வெப்பக் கருத்துச் சொற்களையும் ஒளிப்பொருள் சொற்களையும் தமிழில் தோற்றுவித்துள்ளது.

வெல்–வெல்கு–வெக்கு-bake

‘வெல்’ என்னும் இவ் வெப்பக்கருத்து வேர், அதற்கும் முந்திய ‘வில்’ என்னும் முதனிலைச் சொல்லிலிருந்து உருவானதாகும். ‘வில்’, என்னும் இம் முந்துவேர், வில்-விய்-வியர் என உடற்சூட்டின் காரணமாகத் தோன்றும் ‘வியர்வை’ என்னும் சொல்லினை ஈன்றது. இவ் ‘வியர்வை’, ‘வெயர்வை’, ‘வேர்வை’ எனப் பேச்சுத் தமிழில் திரியும். இன்னும், இவ் ‘வியர்’ என்னும் சொல், ‘வியர்த்தது’, ‘வேர்த்தது’ என்றும் பேச்சுத் தமிழில் திரியும். ‘வில்’ ஆகிய இவ் வேர், வில்-விள்-விளக்கு என்ற வெளிச்சச் சொல்லையும் ஈன்றது. ‘வில்’ ஆகிய இத் தொல்வேர், வில்-விய்-பிய்- பிய்+சி-பிசி எனத் திரிந்து கன்னட மொழியில் *bisi*, *bisu*, *bisupu* போன்ற வெப்பம் குறிக்கும் சொற்களைத் தோற்றுவித்தது.

‘வில்’ ஆகிய வேரிலிருந்து பிறந்த ‘வெல்’ என்னும் ‘வெளிச்சம்’ குறிக்கும் இத் தமிழ்ச்சொல், ‘வகர-பகர’ மாற்றத்தில் *bhelஎன ஓர்

முந்து இந்தோ-ஐரோப்பியக் கற்பித வேராக ‘ to shine, flash, burn also shining white’என்னும் பொருள்களில் நிலைபெற்றது. நல்லூர் ஞானப்பிரகாசர், தமிழின் ‘வெளிச்சம்’ சொல், ‘bleach’என மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் திரிந்ததை எடுத்துரைத்தார்.

‘வில்’ என்னும் வெப்பக்கருத்து வேரிலிருந்து பிறந்த ‘வெக்கு’ என்னும் தமிழ்ச்சொல், மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் மேற்குறித்த அதே ‘வகர-பகர’ மாற்றத்தில் ‘வெக்கு -bake’எனத் திரிந்ததெனப் பாவாணர் எழுதினார். ‘bake’ என்னும் இச் சொல்லிற்குரிய வேர்களாக முந்து செருமானியத்தில் *bakan என்னும் வடிவத்தையும்முந்து இந்தோ-ஐரோப்பியத்தில் *bheg, * bheஎன்னும் வடிவங்களையும் மேலை இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அறிஞர்கள் காட்டியுள்ளனர். இந்த ‘bake’சொல், ‘ baker, bakery’போன்ற தனிச்சொற்களிலும் ‘bakestone, half-baked’போன்ற கூட்டுச்சொற்களிலும் வழங்குகின்றது. ‘kel’ என்னும் ஓர் துளைப்பொருள் வேரிலிருந்து அரைப்பங்கினைக் குறிக்கும் ‘half’சொல் பிறந்த வரலாறு இம் முகவுரைப் பின்னிணைப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. ‘கல்’ வேரிலிருந்து பிறந்த ‘half’சொல்’ ‘வில்’ வேரிலிருந்து பிறந்த ‘bake’சொல்லுடன் சேர்ந்து ‘half-baked’ஆன வரலாறும் சுவையானதே. தமிழில், ‘அரை வேக்காடு’ என்று சொல்வதை ஆங்கிலத்தின் ‘half-baked’என்பதுடன் சேர்த்து எண்ணுக.

பாவாணர், ‘வெக்கு-பெக்கு -bake’சொல் உறவினைக் காட்டிய அளவில் அமைந்திருந்தார். நெடுங்காலம் கழித்து, ஆங்கில வேர்ச்சொல் அகராதிகளுடன் ஊடாடியபோது, ஆங்கிலவேர்ச்சொல் அகராதிகள், ‘bake’ ஆகிய சொல்லிலிருந்து ‘ cook, cuisine, kitchen’ஆகிய சொற்களையும் உறவுபடுத்தியிருந்ததை அறிந்து மகிழமுடிந்தது. மேலும், ‘வெக்கு-பெக்கு -bake-coquere-cook’என்னும் சொற்களுடன் ‘biscuit’சொல்லின் ‘cuit’சொல்லும் ‘terra-cotta(L.cocta)’சொல்லின்‘cotta’சொல்லும்போன்ற வெப்பப்பொருள் சொற்கள் பலவும் உறவுபடுத்தியே அறிஞர்களால் காட்டப்பட்டுள்ளன. இச் சொற்கள் யாவும் *pekw (to cook, ripen)

என்னும் முந்து இந்தோ-ஐரோப்பியக் கற்பித வேரிலிருந்து பிறந்தனவாக வேர்ச்சொல் அகராதிகள் காட்டியுள்ளன.

மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் புழங்கும் ‘ bake-coquere-cook’,சொற்களுடன்கீழை இந்தோ-ஐரோப்பியத்தின் ‘ pakvah (cooked, ripe)’சொல்லினை மேலை இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அறிஞர்கள் உறவுபடுத்தியுள்ளனர். அவ்வாறே, சமற்கிருத வேர்ச்சொல் அறிஞர் மானியரும் ‘pakvah’என்னும் சமற்கிருதச் சொல்லினை மேலை இந்தோ-ஐரோப்பிய இலத்தீனின் ‘coquo’சொல்லுடன் உறவுபடுத்தி எழுதினார். மேலை இந்தோ-ஐரோப்பிய அறிஞர்களும் கீழை இந்தோ-ஐரோப்பிய அறிஞர்களும் இவ் அனைத்திற்கும் மூலமான தமிழின் ‘வெக்கு’ சொல்லை அறியவில்லை. அது மட்டுமல்லாமல், ‘வெக்கு’ சொல்லிற்கு மூலமான ‘வில்’ என்னும் மூலமொழி வேரினை (Nostratic root) அறவே அறியவும் இயலவில்லை.

வெல்–வெது–வேது-bath

‘வெல்’ என்னும் வெப்பக்கருத்து வேர், ‘வெது’, ‘வெதுவெதுப்பு’, ‘வேது’ என்ற வெப்பக்கருத்துச் சொற்களைத் தோற்றுவித்தது. இவ் ‘வெது-வேது’வே ‘வெளிச்சம்-bleach’போலவும் ‘வெக்கு-பெக்கு-bake’போலவும் மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் குளிப்பதனைக் குறிக்கும் ‘bath’என்னும் சொல்லாக ‘வகர-பகர’ மாற்றத்தில் திரிந்தது. ‘குளித்தல்’ என்னும் பொருளில் நாம் பயன்படுத்துகின்ற ‘bath’சொல்லின் மூலப்பொருள், ‘உடம்பினை வெப்பப்படுத்துதல்’ என்னும் பொருளில் ‘The etymological sense is of heating, not immersing’ என ஆங்கில வேர்ச்சொல் அறிஞர்கள் எழுதியுள்ளனர். ஆங்கில வேர்ச்சொல் அறிஞர் கீற்றும், ‘the original sense of bath would, accordingly appear to be a place of warmth’என்றே எழுதினார். குளிர்நாடுகளில் குளித்தலினும் உடலை வெப்பப்படுத்திக் கொள்ளுதலே முதன்மைத் தேவையாகும். நம் தமிழ்நாட்டில் உடம்பினை வெப்பமாக்கிக் கொள்ளுதலை ‘வேது பிடித்தல்’ என்று

கூறுவோம். தமிழின் ‘வேது’வும் மேலை இந்தோ-ஐரோப்பியத்தின் ‘bath’உம் சொல்லாலும் பொருளாலும் உறவுடையன.

வெல்–வெது–வேது–svetah-white

‘வெல்’ என்னும் வெப்பக்கருத்து வேர், வெல்-வெள்-வெளிச்சம்; வெல்-வெள்-வெள்ளை என ஒளிப்பொருள் சொற்களையும் ஈன்றதனை மேலே குறிப்பிட்டோம். இவ் ‘வெல்’வழிப் பிறந்த முந்து இந்தோ-ஐரோப்பிய வேராகக் காட்டப்பட்ட *bhelவேருக்கு ‘ to shine, flash, burn also shining white’ என ஒளிப்பொருளும் வெப்பப்பொருளும் வெண்மையாகிய நிறப்பொருளும் சேர்த்து உரைத்திருப்பது மீண்டும் நினைவுகொள்ளத்தக்கது. வெப்பப்பொருளில் பிறந்த ‘வெது-வேது’வாகிய இத் தமிழ்ச்சொல், Sanskrit *svetah* "white;" Old Church Slavonic *sviteti* "to shine," *svetu* "light;" Lithuanian *šviesti* "to shine," *švaityti* "to brighten" என இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் திரிந்தது. இச் சொற்களுக்குரிய வேராகத் தமிழின் ‘வெல்-வெது-வேது’ பொருத்தமானதாக இருக்கும்போது, அதனை விட்டுவிட்டு, *kweid-o-, *kweit- (white; to shine)என்னும் கற்பித வேர்வடிவங்களை வாட்கின்சு அகராதியும் இணையவழி வேர்ச்சொல் அகராதியும் காட்டியுள்ளன. வெண்மையைக் குறிக்கும் ‘white’என்னும் மேலை இந்தோ-ஐரோப்பியச் சொல்லும் ‘வெது-வேது -sveta-white’ஆகிய சொற்களும் ‘bath’சொல் பிறப்பதற்குக் காரணமான ‘வெது-வேது’வழிப் பிறந்தனவேயாகும்.

வெல்–வெள்–வெட்ட-photo-phos

‘வெல்’ என்னும் வெப்பக்கருத்து வேர், ‘வெல்- வெள்-வெட்ட-வெட்டை’ என உடற்சூட்டு நோயினைக் குறிப்பதனை மேலே சுட்டியிருந்தோம். வெப்பக்கருத்துச் சொல்லாகிய இவ் ‘வெட்ட’, ‘வெட்ட வெளிச்சம்’ என்ற இடத்தில் ஒளிப்பொருளைக் குறிக்கின்றது. இவ் ‘வெட்ட’ சொல்லே, ‘வகர-பகர’ மாற்றத்தில் ‘பொட்ட-photo’என மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் ஒளியைக் குறிக்கும் சொல்லாக மாறியது. ‘photo’என்பதனை ‘ஒளிப்படம்’ எனவும் ‘photosynthesis’என்பதனை ‘ஒளிச்சேர்க்கை’ எனவும் மொழிபெயர்க்கும் இடங்களில் ‘photo’சொல் ஒளிப்பொருள் பெற்றிருப்பதை அறிக. ‘photo’என்னும் சொல், ‘ட-ச’ மாற்றத்தில் ‘ phos’எனத் திரிவதை வில்ஃபிரடு ஃபங்க் (WilfredFunk),

‘phos is a Greek word that means ‘light’. It appears in English as phos, phot and will be found in innumerable scientific words’ என்று தமது ‘Word origins’நூலில் எழுதியுள்ளார்.

தன்னுள் ஒளிர்கின்ற பொருள்களைச் சுட்டும் ‘phosphorus’சொல்லிலும் விடியலாகிய வெளிச்சத்தைச் சுமந்து வருகின்ற விடிவெள்ளியைக் குறிக்கின்ற ‘phosphor’சொல்லிலும் முன் சொல்லாக இருக்கின்ற ‘phos’,தமிழின் ‘வெட்ட-பொட்ட- photo-phos’ என்பதாக வந்ததேயாகும்.

தமிழில், பொழுது விடியும் வேளையை ‘விடியல்’ என்பர். ‘விடியல்’ என்னும் இச் சொல், ஒளிப்பொருள் வேரான, ‘வில்’ என்னும் வேர்வழி, வில்-விள்-விள்+து-விடு-விடி-விடியல் எனப் பிறந்ததாகும். ஈழத்தில் விடியல் பொழுதில் வருவதை ‘வெள்ளென வருதல்’ என்பர். ‘வெள்ளி’ என்னும் ‘கோள்’, வெண்மை நிறம் காரணமாக ‘வில்-விள்-வெள்-வெள்ளி’ என உருவானது. ‘வில்’ ஆகிய வெப்பக்கருத்து வேர்வழி உருவான, ‘விடி’, ‘வெள்ளி’ ஆகிய இரண்டு சொற்களையும் சேர்த்துக் காலையில் தோன்றும் வெள்ளியினை ‘விடிவெள்ளி’ என்று தமிழர்கள் அழைத்தனர். இவ் ‘வில்’வழிப் பிறந்த ‘வெட்ட-பொட்ட-photo-phos’ என்ற சொல்மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் ‘phosphor’ என்றானது. ‘phosphor’ சொல்லின் பின்சொல்லாகிய ‘phor’, தமிழின் ‘பொறை’ சொல்லிலிருந்து பிறந்த ‘ bear, birth, berth’சொற்களுடன் உறவுடையது. ‘phosphor’ சொல்லிற்கு ‘வெளிச்சத்தைச் சுமந்து வருவது’ என்பது பொருள்.

‘வெல்’ என்னும் வெப்பக்கருத்துத் தமிழ்வேர்,கீழை இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் உருவாக்கிய , ‘pakvah, sveta’ ஆகிய சொற்களுக்கும் மேலை இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் உருவாக்கிய ‘bake, bath, white, photo, phos, phosphorus, phosphor’ஆகிய சொற்களுக்கும் வரலாறு எழுதிய கீழை, மேலை இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அறிஞர்கள், தமிழின் நிழலில் சிறிதும் ஒதுங்காமல், தங்கள் தங்கள் இனமொழி உறவினை மட்டுமே கணக்கில் கொண்டு விளக்கம் எழுதியிருந்ததை மேலே காட்டினோம். இங்கு எடுத்துரைத்த இந்தோ-ஐரோப்பியச் சொற்களுக்கு மட்டுமல்லாமல் இச் சொற்களுடன் உறவுடைய சிலநூறு இந்தோ-ஐரோப்பியச் சொற்களுக்கும் ‘வில்’ என்னும் தமிழ்தான் வேரும் முதலும் ஆகும்.

கண்டம் –centre

மேலை இந்தோ-ஐரோப்பிய ஆங்கிலச் சொல் 'centre'. ஆக்ஸ்போர்டு ஆங்கிலப் பேரகராதி, 'center'சொல்லுடன் உறவுடைய மேலை இந்தோ-ஐரோப்பியச் சொற்களாக, *centrum* (classical Latin) *;* *kentron*(ancient Greek); *hantag*(Old High German);*centre*(Old Occitan)*;* *centre*(Catalan)*;* *centro*(Spanish)*;* *centro*(Portuguese)*;* *centro*(Italian)*;* *centrum* (Middle Dutch, Dutch)*;* *zenter*(Middle High German); *Centrum/Zentrum* (German) ஆகியவற்றையும் அவற்றின் பொருள்களாக ' stationary leg of a pair of compasses, point of this leg, midpoint of a circle or sphere, midpoint of a non-circular area or object, point or axis about which something revolves, sharp point, goad, peg, midpoint of a circle, to prick, stab, hunting spear'ஆகிய பொருள்களையும் குறித்துள்ளது.சேம்பர்சு அகராதி, கூடுதலாக 'skillful, smart'ஆகிய பொருள்களையும் குறித்துள்ளது.

வட்டம் வரைவதற்குப் பயன்படும் கருவி 'compass'. இக் கருவியின் ஒரு முனை, கூரிய முள் போன்றதாக இருக்கும். அம் முனைப்பகுதியை நடுவாக வைத்து வட்டம் வரைவர். 'compass'கருவியின் இக் கூரிய முனைப்பகுதியே 'kentron'என முதற்கண் இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் குறிக்கப்பட்டது. 'compass'மட்டுமன்றிக் கூரிய முனையுள்ள பிற கருவிகளையும் குறிக்க இந்த 'kentron'சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இணையவழி வேர்ச்சொல் அகராதி, 'kentron'சொல்லின் முந்து இந்தோ-ஐரோப்பிய வேராக *kent என்பதைத் தெரிவித்ததுடன் முள் போன்ற கூரிய முனை உடையது என்னும் பொருளில் ' to prick' என்னும் வேர்ப்பொருளினை உரைத்துள்ளது.

உடுக்குறி இடப்பட்டுக் கற்பித வேராகக் காட்டப்பட்ட 'kentron'சொல்லிற்குரிய *kentஆகிய வேர், எவ்வாறு அப் பொருளைப் பெற்றுக்கொண்டது என்னும் உண்மை, மேலை இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அகராதிகள் எவற்றிலும் காட்டப்படவில்லை.

'நடு-நடுவம்' எனப் பொருள்தரும் இச் சொல், 'kendra' என்னும் சமற்கிருதச் சொல்லுடன் உறவுடையதாகப் பிரித்தானியக் கலைக்களஞ்சியம் எழுதியுள்ளது.சமற்கிருத மானியரும்

‘kendra’சொல்லினைக் கிரேக்கத்தின் ‘kentron’சொல்லுடன் உறவுபடுத்தியுள்ளார்.

Of Greek origin are such mathematical and astronomical terms as Sanskrit *kendra* “centre” (Greek *kentron*)

-Languages of the world, The New Encyclopaedia, p.620

kendra, am, n (borrowed from Gk. *kentron*), the centre of a circle; the equation of the centre, the argument of a circle, the distance of a planet from the first point of its orbit in the fourth, seventh of tenth degree, Suryas

- Monier

பிரித்தானியக் கலைக்களஞ்சியமும் மானியர் சமற்கிருத அகராதியும் ஆங்கில ‘centre’சொல்லிற்கு ‘kentron’சொல்லினை வேராகக் காட்டியதுடன் அதனோடு ‘kendra’என்னும் சமற்கிருதச் சொல்லையும் உறவுபடுத்தி உரைத்துள்ளன. இவ் இருநூல்களிலும்கூட ‘kentron’சொல்லிற்கான வேர் விளக்கப்படவில்லை.

தமிழ்க் 'கண்டம்'

தமிழில், ‘கண்டம்’ என்னும் சொல், சங்க காலத்திலிருந்து பரவலாக ஆளப்பெற்றுள்ளது. இச் சொல்லிற்குக் ‘கூர்மை’ என்பதே மூலப்பொருள். கூரிய முனையுள்ள கருவிகள், ‘கணிச்சி’, ‘கணை’எனப்பட்டன. கூரிய முள்ளுள்ள நிலைத்திணையாகிய தாழை, ‘கண்டல்’ எனவும், சிறிய முள்ளுள்ள கத்திரி வகையைச் சேர்ந்த சிறு செடி, ‘கண்டங்கத்திரி’ எனவும் இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ளன. பலாக்கனியின் மேற்பகுதி முள் உடையதாக இருக்கும். இதனை ‘முட்புற முதுகனி’ என்று புறநானூறு குறிப்பிடும். திரவிட மொழிகளில் இம் முட்பலாவினைக் ‘கண்ட பலா’ என்றே குறிப்பிடுவர்.

‘உருத்திர அக்கம்’ என்பது தூய தமிழ்ச்சொல். உருத்திரனாகிய சிவனுக்குரிய கூரிய முனையுள்ள மணி போன்றது ஆதலால் இது ‘உருத்திர + அக்கம் – உருத்திராக்கம்’ எனப்பட்டது. இவ் ‘உருத்திராக்கம்’ சொல் சமற்கிருதத்தில் ‘ருத்ர + அக்ஷ – ருத்ராக்ஷ’ எனச் சென்று சேர்ந்தது. ‘அக்கு’ என்பது கூர்மையைக் குறிக்கும்

தமிழ்ச்சொல். அதனால், இவ் ‘உருத்திராக்கம்’, ‘அக்குமணி’ என்றும் தமிழில் அழைக்கப்படும். கூரிய முனையுள்ள இவ் ‘அக்குமணி’, ‘கண்டி’ என்ற சொல்லாலும் அழைக்கப்பட்டுள்ளது. ‘அக்குமணியும் கண்டியும்’ கூர்மைப்பொருளால் உருவான சொற்களாகும்.

தமிழின் வேர்ச்சொற்களில் ‘கல்’ என்பதும் ஒன்று. இவ் வேருக்குரிய ஆறு பொருள்கள் பற்றிய வரலாற்றினை ‘உலகம் பரவிய தமிழின் வேர்-கல்’ என்னும் நூலில் முதன்மைப் பதிப்பாசிரியர் விரிவாக விளக்கியுள்ளார். ‘கல்’ என்னும் வேர், கல் – கல் + து - கற்றை எனத் திரியும். ‘கற்றை’ என்ற சொல்லிற்குக் கூட்டம், தொகுதி என்பது வேர்ப்பொருள். ‘கற்றை’ சொல்லின் வேராகிய ‘கல்’, கல்–கற்–கர்–கரு–கருக்கு(தென்னை, பனை போன்ற நிலைத்திணைகளின் இலைகளின் கூரிய முனைப்பகுதி); கல் –கற்–கர்–கரு–கருவி (கூரிய முனையுள்ள ஆயுதம்); கல் –கள்– கள்ளி(கூரிய முள்ளுள்ள நிலைத்திணை); கல் –கள்–கள்+து–கடு (கூர்மை; கடுநுனைப் பகழி – கூரிய முனையுள்ள அம்பு) எனக் கூர்மைப் பொருள் சொற்கள் பலவற்றைத் தோற்றுவிக்கும். கூட்டக்கருத்தில் கூர்மைக்கருத்து தோன்றும் என்ற உண்மையை அந் நூல் பகுதியில் விரிவாகக் காணலாம்.

ஆத்திரேலியப் பழங்குடி மக்கள் மொழியில் நிலம் தோண்டப் பயன்படுத்தப்படும் கூரிய மரத்தடி,‘கணை -ganay’(digging stick) எனப்பட்டுள்ளது. ‘கணை’ சொல்லின் நீண்ட பழமைக்கு இவ் ஆத்திரேலிய வழக்கு, பெரும் சான்றாகும்.தமிழில் ‘கணை’ என்ற சொல், இரும்பினாலான அம்பினைக் குறிப்பது நமக்கு நினைவிற்கு வரும். மக்கள் வரலாற்றில் பிற்பட்ட காலம் இரும்புக்காலம். இரும்புக்காலத்திற்கு முந்தைய மாந்தர், இயற்கையில் கிடைத்த கல், மரம் போன்றவற்றிலிருந்தே தம் கருவியைச் செய்திருப்பர். அதனால்தான், ஆத்திரேலியப் பழங்குடி மொழியில், ‘ganay’என்னும் சொல், கூரிய அம்பினைக் குறிக்காமல், தோண்டுவதற்குப் பயன்படும் மரத்தடியினை(digging stick) மட்டும் குறிப்பதாக உள்ளது.

‘கல்’ என்னும் கூட்டப்பொருள் வேரிலிருந்து கல்-கள்-கள்+து-கண்டு-கண்டம் என்ற தமிழ்ச்சொல் தோன்றியது. இக் ‘கண்டம்’

சொல், சமற்கிருதத்தில் ‘ kan@t@a’என்ற வடிவில் கூரிய முள், கூரிய முனை ஆகியவற்றைக் குறிக்கிறது.

‘கண்டம்’ ஆகிய இக் கூர்மைப்பொருள் சொல், ‘பலா-பெலா’ எனவும் ‘கதி-கெதி’ எனவும்நிகழ்ந்த ‘அகர-எகர’ மாற்றத்தில்கண்டம் – kentron எனக் கூரிய முனையுள்ள கருவிகளைக் குறிக்கும் சொல்லாகக் கிரேக்கத்தில் மாறியது. இந்த ‘kentron’சொல்லே, பின்னர்க் ‘ககர-சகர’ மாற்றத்தில் ‘centrum’என இலத்தீனிலும் ‘ centre’என ஆங்கிலத்திலும் மாறியது. வரைகருவியின் கூரிய முனையைக் குறித்த ‘kentron’சொல், அம் முள்முனை ஊன்றிய இடத்தினைப் பிறகு குறித்தது. இதனை ஆக்ஸ்போர்டு ஆங்கிலப் பேரகராதி, stationary leg of a pair of compasses, point of this leg, midpoint of a circleஎனத் தரும் விளக்கத்தால் அறியலாம்.

கூர்மைப் பொருளில் உருவான தமிழின் ‘கண்டம்’ சொல், இவ்வாறு ‘அகர –எகர’ மாற்றத்தில் ‘கண்டம் -kentron–centre’எனத் திரிந்த வரலாற்றினை இந்தோ-ஐரோப்பிய அகராதிகள் எவற்றிலும்காணமுடியவில்லை.

‘centre’சொல்லிற்கு உரிய பொருள்களில் ‘ skillful, smart’ஆகியவற்றையும் ஆங்கில வேர்ச்சொல் அகராதிகள் இணைத்து உரைத்துள்ளன.கூர்மைப்பொருளுக்கும் அறிவுத்திறத்திற்கும் உள்ள உறவினை மேலும் சில சொற்களுடன் பொருத்திக்காண முடியும்.[12]

தமிழ்வழிப் பிறந்தatom - universe

உலகில் மிகச்சிறிய பொருள் ‘அணு’. இதனை ஆங்கிலத்தில் ‘atom’என்பர். ‘அல்’ என்னும் தமிழ் வேர்வழிப் பிறந்த ‘ a’ என்னும் எதிர்மறை முன்னொட்டும், ‘தும்-துமி’ என்னும் தமிழுடன் உறவுடைய பிரிதல் பொருள்தரும் ‘tomos’சொல்லும் இணைந்து உருவானதே கிரேக்கத்தின் ‘atomus’சொல்லாகும். இச் சொல்லிற்கு ‘uncut, unhewn, indivisible’என்பனவற்றை வேர்ப்பொருள்களாக இணைய அகராதி கூறுகிறது. பண்டைக் கிரேக்கத்தில் அணுவினைப் பிரிக்கமுடியாது என்னும் கருத்து இருந்தது. அக் கருத்தின் அடிப்படையில் உருவானதே ‘atom’என்னும் சொல்.

நாம் வாழும் உலகமும் நம்மைச் சுற்றிய கோடான கோடி உடுக்களும் நிரம்பிய ஒரு பேருலகம் ‘அண்டம்’ ஆகும். இதனை, தமிழில் ‘புடவி’ எனவும் சமற்கிருதத்தில் ‘பிரபஞ்சம்’ எனவும் கூறுவர். ஆங்கிலத்தில்‘universe’என்பதும் இதுவே. ‘universe’என்னும் இச் சொல்லிற்கு உரிய வேர்ப்பொருள் ‘எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஒன்று(originally turned into one)’ என்று சேம்பர்சு அகராதி கூறியுள்ளது. ‘புடவி’, ‘பிரபஞ்சம்’, ‘universe’ஆகிய பேருலகின் அகலம் ஆயிரம் கோடி ஒளியாண்டு என அறிவியலாளர் கூறுவர். ‘ஒன்று’ என்னும் சொல், ஒன்று-ஒன்னு- uno-unusஎன்று இலத்தீனில் திரிந்ததெனப் பாவாணர் கூறியதை ஸ்டீபன் ஹில்லியர் லெவிற்று ஒப்புக்கொண்டார்.

‘நடம்-நட்டம்’ என்னும் தமிழ்ச்சொல், ‘ந்ருத்த’ எனச் சமற்கிருதத்தில் திரிந்ததெனக் கால்டுவெல் எழுதினார். இதனை மனங்கொண்ட பாவாணர், ‘வட்டம்’ என்னும் தமிழ்ச்சொல், ‘வ்ருத்த’ எனச் சமற்கிருதத்தில் திரிந்தது என விரிவாக எழுதினார். ‘வ்ருத்த’ என்னும் சமற்கிருதச் சொல்லுடன் உறவுடைய மேலை இந்தோ-ஐரோப்பியச் சொற்களாக‘vertex, vertigo, verse, worth’போன்றவற்றைமேலை இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அகராதிகள் காட்டுகின்றன. ‘universe’சொல்லினை unus+versusஎனப் பிரித்து அவற்றின் பொருள்களாக unus-one; verses-to turn (turned into one)’ என ‘universe’சொல்லின் பொருள் பொருத்தத்தை அவ் அகராதிகள் எழுதியுள்ளன.

உலகில் மிகச்சிறிய பொருளினைக் குறிக்கும் ‘atom’சொல்லும் உலகினை எல்லாம் உள்ளடக்கிய புடவியினைக் குறிக்கும் ‘universe’சொல்லும், அ+தும் (atom) என்ற தமிழிலிருந்தும் ஒன்று + வட்டம்(universe) என்ற தமிழிலிருந்தும் உருவானவை என்பதுமொழி வரலாற்றில் நிகழ்ந்திருக்கும் உண்மையாகும்.

கயம்–கசம்–cosmos

கடவுள் என்றும் இயற்கை என்றும் பரம்பொருள் என்றும் என்ன பெயரில் அழைத்தாலும் இந்த உலகும் உயிர்களும் ஒரு பேராற்றலின் நெறிப்படுத்தலில், கண்காணிப்பில் செயற்பட்டுக் கொண்டுள்ளன. ‘cosmos’என்னும் ஆங்கிலச் சொல் ‘kosmos’என்னும் கிரேக்கச்

சொல்லிலிருந்து உருவானது. இக் கிரேக்கச் சொல்லிற்கு order, good order, orderly arrangement என்பன பொருள்களாக அறிஞர்கள் உரைத்துள்ளனர். பல்லாயிரம் கோடி கோள்களுக்கும் அப்பால் இருக்கின்ற ஒளியற்ற இருள் பகுதியே ‘cosmos’ ஆகும்(We also see the Cosmic microwave background , which in a sense is 'beyond the stars-https://www.quora.com/What-is-beyond-the-stars).

‘cosmos’ஆகிய அவ் இருள் பகுதியிலிருந்து வெளிவரும் கதிர்களே‘cosmic rays’என்பன.‘cosmos’ஆகிய அவ் இருட்பகுதியைக்குறித்த சொல்லைப் பின்னர், இருட்பகுதிக்குக் கீழுள்ள உலகத்தையும் குறிக்கும் சொல்லாக Pythagoras கையாண்டுள்ளார் என அகராதிகள் எழுதியுள்ளன. உலகம், பல்லாயிரம் கோடி பொருள்களால் ஒழுங்குற அமைக்கப்பட்டிருக்கின்ற இயற்கையின் நுட்பம் கண்டு, ‘cosmos’என்ற உலகம் குறித்த சொல்லிற்கு ‘அழகு’ என்ற பொருளும் பின்னர் உருவானது.

கயம்–கசம்–cosmos-cosmetic

பல்லாயிரம் கோடி கோள்களுக்கு அப்பால் உள்ள இருட்பகுதியைக் குறித்த ‘cosmos’ஆகிய இச் சொல்லின் வேர்ப்பொருளை ஆங்கில வேர்ச்சொல் அகராதிகள் உரைக்கவில்லை. சேம்பர்சு அகராதி ‘uncertain (வேர் தெரியவில்லை)’ என உரைத்துள்ளது. தமிழில், ‘கயம்-கசம்’ என்பதற்கு ‘இருள்’ என்பது பொருள். இச் சொற்கள், ‘கல்’ என்னும் கருமைக் கருத்து வேரிலிருந்து ‘கல்-கய்-கயம்-கசம்’ எனப் பிறந்தன. ‘கயம்’ ஆகிய இருள் குறித்த தமிழ்ச்சொல், இருட்பகுதியினைக் குறித்த ‘cosmos’சொல்லிற்கு வேராக இருக்கலாம். இறைவனை ஒளியாகக் கூறும் தமிழ் மரபு, இருளாகவும் கூறியுள்ளது. ‘சோதியனே துன்னிருளே’ என மாணிக்கவாசகப் பெருமான் புகழ்வது இக் கருத்தினை எடுத்துரைக்கும். ‘கருந்துளை’ என அறிவியல் கூறும் அவ் இருட்பகுதியே ‘cosmos’ஆகும். உலகையும் உலகத் தோற்றத்தையும் உலகப் பொருள்களையும் இவ்வாறெல்லாம் நாம் அறிவதற்கும் அறிந்ததை உரைப்பதற்கும் மொழியே முதன்மையாகவும் துணையாகவும் உள்ளது.

மாக்சு முல்லரின் மூலமொழித் தேடல்

ஐரோப்பிய மொழிகள், கீழை இந்தோ-ஐரோப்பியம், மேலை இந்தோ-ஐரோப்பியம் எனப் பிரிந்திருந்தாலும் அவற்றுள் எந்த ஒரு மொழியும் எந்த ஒரு பிறிதொரு மொழியிலிருந்தும் தோன்றியதாகக் கொள்ளமுடியாது என இந்தோ-ஐரோப்பிய மொழிகளைச் சிறப்பாக ஆய்ந்த மாக்சு முல்லர் கூறிய கருத்து, இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கு உரிய மூலமொழியைக் கண்டறியவேண்டும் என்னும் நம்பிக்கையினைத் தருவதாக உள்ளது. மேலும், மாக்சு முல்லர், இந்தோ-ஐரோப்பிய மொழிகள் அனைத்தும் தொல் பழங்காலத்தில் ஏதோவொரு மூதாதையர் மொழியிலிருந்து உருவாகி வளர்ந்திருக்கவேண்டும் என்னும் கருத்தினையும் தம் ஆய்வில் வெளிப்படுத்தியுள்ளது பெரிதும் வியக்கத்தக்கது.

'தாங்குதல்' என்னும் பொருள்தரும் ஆங்கிலச் சொல், 'bear'. இவ் ஆங்கிலச் சொல்லுடன் உறவுடையன *fer* (Latin), *pher* (Greek),*ber* (Celtic), *ber* (Slavonic), *bar* (Zend) *bhar* (Sanskrit) ஆகிய இந்தோ-ஐரோப்பிய மொழிச் சொற்கள். ஆங்கிலம், இலத்தீன், செல்டிக், சுலோவானிக், செந்த்அவஸ்தன், சமற்கிருதம் ஆகிய மொழிகளில் வழங்கும் இச் சொல் வடிவங்கள் பலவற்றுக்கும் உரிய மூல வடிவம், இம் மொழிகள் அனைத்தும் தோன்றுவதற்கு முன்னிருந்த ஒரு மூலமொழியில் இருந்திருக்கவேண்டும் என மாக்சு முல்லர் கூறியுள்ளார்.

This root *bar*, however, is not an English root. It existed long before English existed, and we find it again in Latin, Greek, Celtic, Slavonic, Zend and Sanskrit, that is, in all the languages which from what is called the Aryan family of speech. As this root *bar* exists in Latin as *fer*, in Greek as *pher*, in Celtic as *ber*, in Slavonic as *ber*, in Zend as *bar*, and in Sanskrit as *bhar*, it is clear that it must have existed before these languages separated, and that, as you may imagine, must have been a very, very long time ago.

-Three Lectures on the Science of Language, pp.20-3

'பொறு': கால்டுவெல் விளக்கம்

மாக்சு முல்லர், இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்குப் பொதுவான ஒரு மூலமொழி இருந்திருக்கவேண்டும் என்னும் கருதுகோளினை

மெய்ப்பிக்கும் வகையில் கால்டுவெல் தமிழின் ‘பொறு’ சொல்லுடன், மாக்சு முல்லர் விளக்கிய சொற்களினை இணைத்து விளக்கியிருப்பது பெருமைக்குரியதாகும்.

திரவிட மொழியியல் அறிஞர் கால்டுவெல், தமிழின் ‘பொறு’ சொல், இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் Sans. *bhṛi (bhar),* to bear; Gothic *bair-an,bâr, bêram,* to bear; Old High German *bêran, pêran;* English *bear, bore,* Old English *bearn,* a child; Greek *pher-ô*; Latin *fer-o*ஆகிய சொற்களுடன் உறவுகொண்டிருப்பதை எழுதியுள்ளார்.

*po***r***-u,* to sustain, to bear, to suffer patiently, *po***r***-u-ppu,* responsibility, *po***r***-u-mei,* patience. Comp. Sans. *bhṛi (bhar),* to bear; Gothic *bair-an,bâr, bêram,* to bear; Old High German *bêran, pêran;* English *bear, bore,* Old English *bearn,* a child; Greek *pher-ô*; Latin *fer-o.* Tamil distinguishes between this word and *pi***r***-a,* to be born, though both are probably from the same base. Latin in like manner distinguishes between *par-io* and *fer-o,* whilst the Teutonic tongues make no difference between *bear,* to sustain, and *bear*, to bring forth. They constitute one word, from which is formed the past participle to be born or borne, and also the noun birth.

-A Comparative grammar of the Dravidian or
South Indian family of languages, p.656

'பொறு': பாவாணர் விளக்கம்

கால்டுவெல் ‘பொறு’ என்னும் தமிழ்ச்சொல்லினை அதனுடன் உறவுடைய ‘bear’முதலான மேலை இந்தோ-ஐரோப்பியச் சொற்களுடன் உறவுபடுத்தினார். பாவாணர், அதனை மேலும் தன் ஆய்வில் விரிவாக்கினார். அத்துடன், ‘பொறு’ என்னும் தமிழ்ச்சொல், தமிழில் தோன்றிவளர்ந்த மூலவேரினையும் இன்னும் உள்சென்று விளக்கிக்காட்டினார்.[13]

முந்து இந்தோ–ஐரோப்பிய வேர்களுக்கு வெளிச்சம் தரும் மூலத்தமிழ்

ஆங்கில வேர்ச்சொல் அகராதி அறிஞர் கீற்று, ஆரியமொழிகளின் வேர்கள் (List of Aryan roots, 1888)எனக்

கூறிவெளியிட்ட அதே பட்டியல் தற்போது வெளியிடப்பட்ட (2005) கீற்று அகராதியில் 'List of Indo-Germanic roots'எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதுவரை வெளிவந்துள்ள பெரும்பாலான ஆங்கில வேர்ச்சொல் அகராதிகளை உள்ளடக்கி வெளியிடப்பட்ட இணையவழி வேர்ச்சொல் அகராதி (Online Etymology Dictionary), 'List of Aryan roots', 'List of Indo-Germanic roots'என வேர்ச்சொற்களுக்குப் பெயரிடாமல் முந்து இந்தோ-ஐரோப்பிய வேர்கள் (Proto Indo-European roots, PIE roots)எனப் பெயரிட்டுள்ளது. இது, இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் அனைத்துச் சொற்களுக்கும் உரிய வேர்களினை, இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கு அப்பால் உள்ள மூலமொழியிலிருந்து கண்டறிய வேண்டும் என்னும் மாக்சு முல்லர் கனவுகண்ட ஓர் தொலைநோக்கு உண்மையை வெளிப்படுத்துவதாகவே தெரிகிறது. மேலும், இவ் இணையவழி வேர்ச்சொல் அகராதி காட்டுகின்ற முந்து இந்தோ-ஐரோப்பிய வேர்கள், உடுக்குறியிட்டு (*),கற்பித வடிவங்களுக்கு உரியவை என்பதையும் தெரிவிப்பதால் உண்மையான மூலவேரினை ஆய்வாளர்கள் கண்டறிய வேண்டும் எனத் தூண்டுவதாகவே உணரமுடிகிறது.

கீற்று உரைத்த 461வேர்கள், ஆரிய மொழிக்கு உரியன என்றாலும், இந்தோ-செருமானிய மொழிக்கு உரியன என்றாலும் முந்து இந்தோ-ஐரோப்பியத்திற்கு உரியன என்றாலும் அவற்றில் பெரும்பாலானவை உண்மையில் வேர்ச்சொற்கள் இல்லை. அவற்றுள் பெரும்பாலானவை சொற்கள் என்னும் தகுதிக்கு உரியனவாகவே உள்ளன என்பதையும் இங்குக் குறிப்பிடவேண்டியுள்ளது.இதனை ஓர் எடுத்துக்காட்டின்வழிக் காணலாம்.

தடி – தரி –deru - tree

சமற்கிருதத்தின் 'daru' சொல்லும் , ஆங்கிலத்தின் 'tree'சொல்லும் இந்தோ-ஐரோப்பிய அறிஞர்களால் உறவுபடுத்தப்பட்டுள்ளன. கீற்று உரைத்த 461வேர்களில் 152ஆவது வேர் *dar. இதே வேரினை இணையவழி வேர்ச்சொல் அகராதி *deruஎனச் சுட்டுகிறது. இவ் வேரின் பொருள்களாகக் கீற்றும் ஏனைய இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அகராதிகளும் to tear, rend, rive, be

firm, solid, steadfast," with specialized senses "wood," "tree" and derivatives referring to objects made of woodஎன்பனவற்றை உரைத்தன.சமற்கிருதத்தில் மரத்தைக் குறிக்கும் ‘daru’சொல்லும் ஆங்கிலத்தில் மரத்தைக் குறிக்கும் ‘tree’சொல்லும் இவ் வேரில் பிறந்தவை.

*dar/deruஎன இரண்டு கற்பித வடிவங்களை இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அகராதிகள் காட்டுவதிலிருந்து அவ் அகராதிகளால் உறுதியாக ஒரு வேரினைக் காட்டமுடியவில்லை என்பதை நாம் அறியலாம். மூலமொழியாகிய தமிழின்வழி இங்குக் காட்டிய வேர்ச்சொற்கள் பிறந்த வரலாற்றை உட்சென்று காண்போம்.

*dar/deruஎன்ற இரண்டு கற்பித வேர்களுக்கும் உண்மையான மூலவேர் தமிழின் ‘தடி-தடிதல்’ என்பதாகும். ‘தடி’ என்பது தமிழில் வினையாகவும் பெயராகவும் ஆளப்பெறுகிறது. மரத்தின் வெட்டப்பட்ட ஒரு சிறுகிளை, ஒரு துண்டுப்பகுதி, தமிழில் ‘தடி’ எனப்படும். ‘தடி ஊன்றி நடக்கும் கிழவன்’ என்னுமிடத்துத் ‘தடி’, மரத்துண்டு குறித்த பெயர்ச்சொல்லாகும். மரத்துண்டினைக் குறித்த இத் தடி, ‘தடிதல்’ என்னும் வெட்டுதல் வினைவழி உருவான சொல்லாகும்.

தடிதல் – வெட்டுதல்

‘தடி’ என்னும் சொல்லின் வரலாறு, 2009ஆம்ஆண்டில், செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனத்திற்கு முதன்மைப் பதிப்பாசிரியரால் அளிக்கப்பட்ட ‘தமிழ்-வட இந்திய மொழிகட்கு இடையேயான வேர்ச்சொல், இலக்கண ஒப்புமைகள் குறித்த ஆய்வு (பகுதி-1)’ என்னும் ஆய்வறிக்கையில் விரிவாக எழுதப்பட்டுள்ளது. அதன், சுருக்கம் வருமாறு:

மீனினை வெட்டும் தொழில், ‘மீன் தடிந்து’ (176) என்று பட்டினப்பாலையில் குறிக்கப்படுகிறது. காவல் மரத்தை வெட்டும் ஓசை, ‘கடிமரம் தடியும் ஓசை ’(36) எனப் புறநானூற்றில் கூறப்படுகிறது. கடல் நீரை முகந்து/வெட்டி எடுத்துச் செல்லும் முகிலினைத் ‘ தடிந்தெழிலி’(17)என்று குறள் கூறும். கடம்ப மரத்தின் அடியினை வெட்டிய மன்னனைக், ‘கடம்பு முதல் தடிந்த காவலன்’(வாழ்த்துக்.25) எனச் சிலப்பதிகாரம் சுட்டுகிறது.

கும்பகருணன் வானர சேனைகளின் கால்களை அறுத்த செயலைக் கம்பர் ‘வலத்த காலினையும் வெங்கணையினால் தடிந்தனன் ’ (யுத்த.கும்ப.341:4) எனப் பாடியுள்ளார்.

தடியப்பட்ட/வெட்டப்பட்ட இறைச்சித் துண்டு, ‘ கொழுநிணத் தடி’(பெரும்.35) எனவும் ‘ பிணவுநாய் முடுக்கிய தடி ’(மலைபடு.177) எனவும் சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது. தடியப்பட்ட உப்பு விளையும் பாத்தியைக், ‘காயற் சிறுதடி’ (அகம்.366:5) என அகநானூறு மொழியும். மரம் முதலியவற்றின் வெட்டப்பட்ட துண்டமும் ‘வெடிபடா ஒடிதூண் தடி ’ (பரி.4:20) எனத் ‘தடி’ சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. பகுக்கப்பட்ட வயலினையும், ‘ விளைவுகளும்... தடியும்... வயலே ’(திவா.5:209) எனவும் உருண்டு திரண்ட உலக்கையினையும் ‘முசலமும் தடியும் உலக்கை யாகும் ’ (திவா.7:170) எனவும் ‘தடி’ என்ற சொல்லால் திவாகர நிகண்டு குறிக்கிறது. மரத்தை வெட்டி உருவாக்கப்பட்ட வில், ‘ மிகுகணை முடுகிய தடி ’ (இரகுயாக. 79) எனத் ‘தடி’ சொல்லால் சுட்டப்பட்டுள்ளது.

தடி – தறி – தரி (ட – ற – ர மாற்றம்)

தமிழில் பல சொற்களில் உள்ள ‘டகரம் றகர/ரகரமாக’ மாறுவதைக் காணலாம்.(எ.கா.:பட்டடை–பட்டறை (த.பே.); அடுப்பங்கடை - அடுப்பங்கரை).

மேற்கூறப்பட்ட ‘ட-ற-ர’ திரிபில் தமிழின் ‘தடி’ என்னும் சொல், ‘தடி – தறி’ என்றாகிப்பிறகு வெட்டப்பட்ட மரத்தாலான தூணினைக் குறித்தது.

தமிழ்ச்சொற்கள், மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் அடையும் திரிபுகளில் ஒன்றாகவும் இந்த ‘டகர – ரகர’ ஒலித்திரிபு அமைந்துள்ளது. ‘படகு’ என்னும் பழந்தமிழ்ச் சொல், *barc* (Old Irish); *barge* (Old French)*; barca* (common Romanic)*; barca*(Italian)*; barca*(Spanish); *barque*(French)*; bark* (English)என ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் திரிந்தது. மேலும், குடகு –Coorg; தூத்துக்குடி-Tuticorin; தரங்கம்பாடி–Tranquebar; கொள்ளிடம்–Coleroon என்பனவும் தமிழ்ச்சொற்கள் ‘டகர –ரகர’த் திரிபில் மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் திரிந்தமைக்கான அண்மைச் சான்றுகளாகும்.

இலக்கிய வழக்கிலும் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார், அட்டப்பிரபந்தத்தில் ‘ஒருதடம்’ என்ற சொல்லினை, ‘ஒருதரம்’ என ‘ட-ர’ திரிபில் பயன்படுத்தியுள்ளார்(திருவேங்கடத்தந்தாதி, பா.9).

வெட்டப்பட்ட தடியாகிய மரத்துண்டு, கட்டிடங்களுக்கான தூணாகவும் செய்யப்பட்டது. இம் மரத்தூண், இதே ‘ட-ற’ திரிபில், ‘தறி’ எனத் தமிழில் தூணினைக் குறித்துள்ளது . திருமால், தூணிலும் துரும்பிலும் உள்ளான் என்னும் உண்மையை இராமாயணத்தில் ‘இரணியன் வதைப் படலத்தில்’ கம்பர் விளக்குவார். அவ் இடத்தில், ‘நெடுந்தறி நேடினாயோ’(கம்ப.யுத்.இரணி.129) எனத் தூணில் திருமால் ஒளிந்திருப்பதை இரணியன் கூற்றில் கம்பர் கூறுகிறார். இங்கு வந்த ‘நெடுந்தறி’, நீண்ட மரத்தூண் குறிப்பது. வடமொழிச் சமற்கிருதத்தில் வல்லின ‘ற’கரம் இன்மையால், ‘தமிழின் ‘தறி’, ‘தரி’ என்றானது.

இந்தோ-ஐரோப்பியத்தில் காட்டப்படும் *dar/deruவேரிலிருந்து ‘tree’சொல் உருவானதென மேலை இந்தோ-ஐரோப்பிய அகராதிகள் குறித்ததை மேலே எழுதினோம். ஆங்கில வேர்ச்சொல் அகராதி அறிஞர் கீற்று, ‘tree’சொல்லின் மூலப்பொருளினை ‘மரம்’ என உரைக்காமல், ‘lit. the wood’என எழுதியது பொருத்தமாகும்.

தமிழில் ‘வெட்டுதல்’ பொருளில் தோன்றிய ‘தடி’ சொல், சமற்கிருதம் உள்ளிட்ட இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் ‘தரி’ எனத் திரிந்து, மரத்தடியினை முதலில் குறித்துப் பின்னர் மரத்தினைக் குறித்தது என்பதே சரியான வரலாறாகும். பெரும்பாலான மேலை இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் தமிழின் ‘தடி’ சொல், ‘ட-ர’ மாற்றத்தில் சிறுசிறு திரிவடிவங்களில் மரத்துண்டினைக் குறித்ததைப் பின்வரும் எடுத்துக்காட்டுகளின் மூலம் அறியலாம்.

dru "tree, wood," *daru* "wood, log, timber;" (Sanskrit); *drys* "oak," drymos "copse, thicket," *doru* "beam, shaft of a spear;" (Greek); *drievo* "tree, wood," (Old Church Slavonic); *drvo* "tree," *drva* "wood," (Serbian); *drevo* "tree, wood," (Russian); *drva,* "wood;" (Czech); *drwa* "wood;" (Polish) *drūtas* "firm," *derva* "pine, wood;" (Lithuanian); *drud,* "strong," (Welsh); *dron* "strong," (Old Irish); *derw* "true," (Welsh); *derb* "sure," (Old Irish); *daur,* "oak;" (Old Irish); *derwen* "oak;" (Welsh); *drusk* "oak;" (Albanian); *treo, treow* "tree," *triewe* "faithful, trustworthy, honest." (Old English)

தமிழின் 'தடி' வேரில் பிறந்த சில இந்தோ ஐரோப்பியச் சொற்கள்:tray, tree, trim,trough,trust, truth, betroth, durable, endure என்பன.

'தடி' ஆகிய இத் தமிழ்வேர், 'தரி' என மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் திரிந்தவாறே, கீழை இந்தோ-ஐரோப்பியச் சமற்கிருதத்தில் 'தரி' என மரத்துண்டினையும், 'தரு' என மரத்தினையும் மேலும் 'ர-ல' மாற்றத்தில் 'தலித்' எனத் துண்டாடப்பட்டு ஒடுக்கப்பட்ட மக்களைக் குறிக்கும் சொல்லினையும் அளித்துள்ளது.

ஆய்வுச் செல்நெறி

இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொற்களைப் பல்வேறு வேர்ச்சொல் அகராதிகள் விளக்கமாக எழுதியிருக்கின்றன. அவ் அகராதிகளுள், சிறப்புக்குரியதாகக் கீற்று (Walter William Skeat)வரைந்த An Etymological dictionary of the English Language (1888)அகராதி திகழ்கிறது. இவ் அகராதியின் இறுதியில், வேர்ச்சொற்களின் பட்டியலை 'List of English roots' என எழுதாமல் 'List of Aryan roots'எனப் பட்டியலிட்டு 461வேர்ச்சொற்களுக்கு விளக்கமளித்துள்ளார். ஆதலின், தமிழுக்கும் இந்தோ- ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையிலான வேர்ச்சொல் உறவினை ஆய்வுசெய்வதற்குக் கீற்று அளித்த வேர்ச்சொல் பட்டியல் முதற்பெரும் துணையாக இவ் ஆய்வில் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆங்கில வேர்ச்சொல் அகராதி அறிஞர் கீற்று, தாம் விளக்கும் வேர்ச்சொற்களின் வரலாற்றினைக் கீழை இந்தோ-ஐரோப்பியச் சமற்கிருத வேர்ச்சொற்களுடன் நூல் முழுவதும் உறவுபடுத்தியே எழுதியுள்ளார்.

கீழை இந்தோ-ஐரோப்பியப் பெருமொழியாகக் கருதப்படும் சமற்கிருத வேர்ச்சொற்களின் வரலாற்றினை, அறிஞர் மானியர் வில்லியம்ஸ்(Sir Monier Monier-Williams)எழுதிய, A Sanskrit-English Dictionary (1899)அகராதியின் துணைக்கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆங்கில வேர்ச்சொல் அகராதி அறிஞர் கீற்றினைப் போலவே, சமற்கிருத வேர்ச்சொல் அகராதி அறிஞர் மானியர்

வில்லியம்சுதம் சமற்கிருத வேர்ச்சொற்களை மேலை இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொற்களுடன் பெரிதும் உறவுபடுத்தித் தம் நூலில் விளக்கம் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

'தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்டம்', கீழை, மேலை இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அகராதிகள் பலவற்றையும் கண்டு ஆய்ந்து, தமிழுக்கும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையிலான வேர்ச்சொல் உறவினை விளக்குவதைப் பெரும் செயல்திட்டமாகக் கொண்டு இயங்கிவருகிறது. ஆயின், மேலை இந்தோ-ஐரோப்பியத்திற்குக் கீற்றின் அகராதியையும் கீழை இந்தோ-ஐரோப்பியத்திற்கு மானியரின் சமற்கிருத அகராதியையும் பேரளவுகோலாகக் கொண்டு இத் திட்டம் ஆய்ந்து வருகிறது.

'தமிழ், திரவிடத் தாயும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கு மூலமும் ஆகும்' என்னும் கருதுகோளினை மேல் விளக்கிய வரலாற்றுத் தடத்தில், கீற்று பட்டியலிட்ட 461வேர்ச்சொற்களில், இப்போதுவரை சற்றொப்ப 200வேர்ச்சொற்களைத் தமிழ் வேர்ச்சொற்களாக இத் திட்டம் உறவுகண்டு, அச் சொற்கள் தொடர்பான தரவுகளைத் திரட்டியுள்ளது.

தமிழ்–இந்தோ–ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு ஆய்வுப்பெரும் பரப்பு

'தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்டம்', தான் திரட்டிய வேர்ச்சொற்களையும் அவ் வேர்ச்சொற்களுக்கான தமிழ்-இந்தோ-ஐரோப்பிய உறவுகளையும் ஆய்ந்து விளக்கும்போது, இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஆய்வுலகம், தமிழ்-இந்தோ-ஐரோப்பிய மொழிகள் வேர்ச்சொல் ஒப்பாய்வில் பெரிதும் பங்கெடுத்துக்கொள்ள வாய்ப்புள்ளது.

உலகமொழிகள் இன்று ஏழெட்டுக் குடும்ப மொழிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஆயின், அவை தொல் பழங்காலத்தில் ஒரு பெருங்குடும்ப மொழியாக இருந்து, பின்னர்ப் பல குடும்பங்களாகப் பிரிந்தனவே என்பது ஆலன் பொம்ஹார்டு போன்ற மூலமொழி ஆய்வறிஞர்களின் கொள்கையாகும்.

அறிவியல் தொழில்நுட்பத்திலும் பொருளியல் வளத்திலும் மிக்கோங்கி இருக்கும் இந்தோ-ஐரோப்பிய அரசுகள், தங்கள் மொழியின் வரலாற்றினைத் தங்கள் தங்கள் மொழி அறிஞர்களைக் கொண்டு பெரும்பெரும் ஆய்வுகளைச் செய்வித்து வருகின்றன. ஆயின், தங்கள் மொழியின் உண்மையான வரலாற்றினை அது தோன்றிய தொல் பழங்காலத்திலிருந்து இன்றும் வாழ்ந்து வருகின்ற மூலமொழியாகிய தமிழுடன் இந்தோ-ஐரோப்பிய அறிஞர்களை இணைத்து ஆய்வுசெய்தால் உண்மையான தமிழ், இந்தோ-ஐரோப்பிய மொழியுறவு கலங்கரை விளக்கமாக உலகத்திற்குத் தெரியவரும். பாவாணர் இதனைத்தான், 'ஐரோப்பிய மொழியமைப்பின் அல்லது வரலாற்றின் திறவுகோல் தமிழிலேயே ஆழப்புதைந்து கிடக்கின்றது ' என்றும் 'மொழிநூல் திறவுகோல் தமிழிலேயே உள்ளதென் னும் உண்மையை அவர் உணர்வராயின் வியக்கத்தக்க உண்மைகள் வெளிப்படுவது திண்ணம் ' என்றும் சுருக்கமாகக் கூறினார்.

இவ்வளவு பெரிய ஆய்வுப் பெருங்கடற்பரப்பில் ஒரு சிறு படகு முயற்சியாக இவ் ஆய்வுத்திட்டம் தமிழ்நாடு அரசின் பெருங்கொடையின் வழியிலும் வழிகாட்டுதலிலும் செயற்பட்டு வருகின்றது.

தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டாய்வுக் களம் என்பது, நிலத்தினும் பெரிதாய், வானினும் உயர்வாய், கடலினும் ஆழமாய் அமைந்த மிகப்பெரிய பரப்புடையது. இவ் ஆய்வுப்பரப்பில் மூத்தோர் செய்தளித்த பங்கு சிறு பகுதியே. எஞ்சிய விரிவான பரப்பினை இந்த ஆய்வுத்திட்டம் இயன்றவரை நிறைவாக்க முயலும். இவ் ஆய்வின் உண்மைத்தன்மையினை 'candle, singular, plural'போன்ற சொற்கள் பிறந்த வரலாற்றிலும் காணலாம்.[14]

நிறைவுரை

உலகில் பல்லாயிரம் கோடி உயிர்கள் பரந்துள்ளன என்பார் கம்பர்('மன்உயிர்தாம்பல் ஆயிரம்கோடி பரந்துளதால் ', கம்ப.3289). இவ் உயிர்கள் யாவும் அறிவுடையன. 'உயிர்கள் எத்தன்மைத்து?' என்னும் வினாவிற்கு, சைவ சித்தாந்தம் 'உயிர்கள் அறிதல்

தன்மைத்து' என விடையளிக்கும். அறிதலை ஆறு வகையாகத் தொல்காப்பியர் பிரிப்பார்.

மெய், வாய், மூக்கு, கண், செவி என்னும் ஐம்புலன்களால் அறியப்படும் தொடுதல் அறிவு, சுவையறிவு, முகர்தல் அறிவு, பார்த்தல் அறிவு, கேட்டல் அறிவு ஆகிய ஐந்தறிவும், மனத்தால் அறியும் நுண்ணறிவு ஒன்றுமாக ஆறு அறிவினையும் அவர் குறிப்பிடுகிறார். உலக உயிர்களில் புல்லும் மரங்களும் ஓரறிவாகிய தொடுதல் அறிவை உடையன; நத்தையும் சிப்பியும் தொடுதல் அறிவுடன் சுவையறிவுமாக ஈரறிவு உடையன; கறையானும் எறும்பும் தொடுதல் அறிவு, சுவையறிவுடன் முகர்தல் அறிவுமாக மூவறிவு உடையன; நண்டும் தும்பியும் தொடுதல் அறிவு, சுவையறிவு, முகர்தல் அறிவுடன் பார்த்தல் அறிவுமாக நான்கறிவு உடையன; விலங்குகளும் பறவைகளும் தொடுதல் அறிவு, சுவையறிவு, முகர்தல் அறிவு, பார்த்தல் அறிவுடன் கேட்டல் அறிவுமாக ஐயறிவு உடையன; மாந்த இனம் தொடுதல் அறிவு, சுவையறிவு, முகர்தல் அறிவு, பார்த்தல் அறிவு, கேட்டல் அறிவுடன் சிந்திக்கின்ற நுண்ணறிவுமாக ஆறறிவினை உடையது.

தமிழில் 'புலம்' என்ற சொல், அறிதல் பொருளது. இப் 'புலம்' சொல், 'நிலம்-நிலன்' போல் 'மகர-னகர'ப் போலியில் 'புலன்' என்றும் சொல்லப்படும். நிலம், நீர், தீ, வளி, விசும்பு என்னும் ஐம்பூதங்களையும் ஐம்பூதங்களுக்கு மூலமான பேரியற்கையையும் உயிரினங்கள் தாம் கொண்ட ஐம்பொறிகளாலும் மனத்தாலும் அறிகின்றன. மெய், வாய், மூக்கு, கண், செவி ஆகிய இவற்றுக்கு உலகம் புலப்படுவதாலேயே இக் கருவிகள் ஐம்புலன்கள் எனப்பட்டன. ஆறாவதாகிய மனம் ஓர் உட்புலன். ஆக, ஆறறிவினை இவ் ஆறு புலன்களால் உலக உயிர்கள் பெறுகின்றன. கருவிகள் என்ற பொருளில் பயன்பட்ட இப் 'புலம்' என்ற சொல், தமிழில் 'அறிவு' என்ற பொருளையும் இதன் வழியாகவே பெற்றது. 'புலவர், புலமை' என்ற சொற்களின் 'புலம்', அறிவு குறிப்பது.

இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் அறிவினைக் குறிக்கின்ற 'knowledge, vidya, wisdom'ஆகிய சொற்கள் தமிழில் பார்வை உறுப்பினைக் குறிக்கும்'கண்' , 'விழி' ஆகிய இரு சொற்களிலிருந்துஉருவாயின என்பதே வரலாறு.[15]

மொழி – இயற்கையின் கொடை

‘எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க’ என்பது சான்றோர்களின் வேண்டுதல். எல்லா உயிர்களையும் உய்விப்பதற்காகவே இயற்கை, உலகையும் உலகப் பொருள்களையும் படைத்ததாகச் சமயவாணர் கூறுவர். உலக உயிர்கள் ஒவ்வொன்றும் தாம்தாம் பெற்ற புலன்களின் துணையால் தத்தமக்குரிய அறிவினைப் பெற்று உலகில் வாழ்ந்து மடிகின்றது. மக்களினமும் நெடுங்காலம் பறவைகள், விலங்குகள் போல், ஐயறிவு உடைய இனமாகவே உலகில் வாழ்ந்து மடிந்தது. உயிர்களின் படிநிலை வளர்ச்சியில் மனம் சேர்ந்து, மாந்தன் ஆறறிவு பெற்ற பிறகும் உலகில் பேரறிவு பெற்ற இனமாக மாறவில்லை. கார்லோஸ் லின்னேஸ் (Carolus Linnaeus, 1707-1778) என்னும் சுவீடன் நாட்டு உயிரியல் அறிஞர் ‘homosapiens’ என்ற சொல்லை 1758ஆம் ஆண்டு உருவாக்கினார். ‘homosapiens’சொல்லிற்கு ‘அறிவு மாந்தன்’ என்பது பொருள். இந்த ‘homosapiens’மாந்த இன வழியினரே இன்றைய உலக மக்கள். ‘homosapiens’ஆகிய ‘அறிவு மாந்தஇனம்’ இரண்டு இலக்கம் ஆண்டுகள் வரலாறு உடையதாக அறியப்பட்டாலும் 50-60ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் உருவாக்கிக் கொண்ட மொழியின் மூலமாகவே அது ‘அறிவு மாந்த இனம்’ என்ற தகுதியைப் பெற்றது.

மொழி பேசுவதற்கு முன்பும் மாந்தன், உடல் மொழிகளாலும், ஆட்டம், பாட்டம், ஓவியம், சிற்பம் முதலிய கலைகளாலும் தானறிந்த அறிவினைத் தன்னை ஒத்த மாந்தனுக்கும் பிற இனங்களுக்கும் உணர்த்திக் காட்டினான். ஆனால், மொழி தோன்றிய பிறகு மாந்தன் அறிவு பெற்றதும், பெற்ற அறிவை வெளிப்படுத்தியதும் பெருவெடிப்பாக மிக்கோங்கி வளர்ந்தன. இயற்கையில் உருவான எல்லா உயிரினங்களிலிருந்தும் மாந்த இனம், மொழியை உருவாக்கிக்கொண்ட பிறகே அறிவு சார்ந்த பேரினமாக வரலாற்றுப் பெருமை கொண்டது. மொழியின் உருவாக்கம் பற்றி அறிஞர்களிடையே பல்வேறு கருத்துகள் உண்டு. ஆயினும், ‘homosapien’ஆகிய அறிவுமாந்தன், மொழியைப் படைத்துப் பயன்படுத்தும் தகுதியைப் பெற்றான் எனினும் அப் பேரறிவினை இயற்கை, மொழியின் மூலம் அவனுக்குக் கொடுத்தது என்றும் எண்ணிப் பார்க்கலாம். ‘Not a drop will be in the ocean, not a twig in the deepest forest, not a crumb in the house of the god of wealth, if the Lord is not merciful’ என்ற மெய்யறிவுப் பேரறிஞர் விவேகானந்தர் கருத்து, மொழி உருவான வரலாற்றுக்கும் பொருத்தமானதாகலாம்.

சொற்கள் என்பன பொருள்தருவன. இச் சொற்கள், ஆயிரக்கணக்கின. ஆயினும், இச் சொற்களுக்கான வேர்கள் சில நூற்றுக்கணக்கானவை மட்டுமே. இந்தச் சில நூற்றுக்கணக்கான வேர்ச்சொற்கள், அறிவு மாந்தன் பேசத் தொடங்கிய ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில்அவனின் மூளையில் விரைந்து உருவாயின. இயற்கையுடன் தொடர்புகொண்டு வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்ட அத் தொல் மாந்தர், ஒவ்வொரு கட்டத்திலும் தாம் கண்ட உண்மையினைத் தகுந்த ஒலி மூலம் வெளிப்படுத்தி அவற்றையே பின்னர் மூலச்சொற்களாகவும் ஆக்கிக் கொண்டனர். உலகில் உண்மை என்பது நாம் உருவாக்கிய ஒன்று அன்று. உண்மை எப்பொழுதும் உலகில் உள்ளது. புவியீர்ப்பு விசையை சர் ஐசக் நியூட்டன்(Sir Isaac Newton) உருவாக்கவில்லை. புவிக்கு ஈர்ப்புவிசை உண்டு என்ற உண்மையை அவர் கண்டறிந்தார். இதனை ஆங்கிலத்தில்'discover'என்னும் சொல் ஆழமாக உணர்த்துகிறது. மறைந்திருக்கும் உண்மையினை வெளிக்கொண்டு வந்து உரைப்பதே 'discover'ஆகும்.இச் சொல்லின் விளக்கமாக 'we discover what already exists, though to us unknown' என இணையவழி வேர்ச்சொல் அகராதி குறிப்பது இங்குக் கருதத்தக்கது.

'discover'சொல்லின் முன்னொட்டாகிய 'dis', மேலை இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் ஓர் எதிர்மறை முன்னொட்டு. இந்த 'dis'சொல்லின் வரலாறு, முதன்மைப் பதிப்பாசிரியரால் விரிவாக எழுதப்பட்டுள்ளது. இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அறிஞர்கள், 'dvi-dva'என்ற இரண்டினைக் குறித்த சொல்லிலிருந்து 'dvi-dvis-dis'என்று 'dis'சொல் பிறந்ததாக எழுதினர். ஆயின், இரண்டினைக் குறித்த சொல்லிற்கும் 'dis'ஆகிய இன்மைப் பொருளிற்கும் உள்ள உறவினை இந்தோ-ஐரோப்பிய அறிஞர்கள் எவரும் எழுதவில்லை.

தமிழில் 'பிரிதல்' கருத்திலிருந்து இன்மைக் கருத்து உருவாகியிருப்பதைக் கண்டறிந்த முதன்மைப் பதிப்பாசிரியர் இரண்டினைக் குறித்த 'dvi'சொல்லிலிருந்து 'dis'உருவானது பொருத்தமே என அறிந்தார். 'ஈர்தல்' என்ற பிரிதல் கருத்துத் தமிழில் 'இரு-இரண்டு' என்ற எண் குறிக்கும் சொல்லினை உருவாக்கியதென அறிஞர் கிட்டல் (Kittel) கூறினார். இவ் 'ஈர்தல்' வழிப் பிறந்த 'இரு' என்ற சொல்லிலிருந்து 'இரிதல்' என்ற அழிதல் பொருள் குறிக்கும்

சொல் உருவானது. 'ஆசு' ஆகிய அறியாமையை இரிப்பவன், ஆசு+இரியன்-ஆசிரியன்.

புறநானூற்றில் 'பாறுதல்' என்ற சொல், 'பிளவுபடுதல்' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. ஆயின், இச் சொல், சிலப்பதிகாரத்திலும் திருவாசகத்திலும் 'அழிதல்' என்னும் பொருளில் ஆளப்பெறுகின்றது. இவ்வாறு இன்னும் சில சான்றுகளில் பிரிதல் பொருளும் அழிதல் பொருளும் உறவுடையனவாக இருக்கும் உண்மையைத் தமிழ்வழி அறிந்தபின், இந்தோ-ஐரோப்பியத்தின் இரண்டினைக் குறித்த 'dvi'என்ற சொல்லிலிருந்து இன்மைப்பொருளாகிய 'dis'சொல் பிறந்ததன் பொருத்தத்தை முதன்மைப் பதிப்பாசிரியர் தம் ஆய்வில் விளக்கினார். 'ஈர்தல்' என்னும் பிரிதல் வினையிலிருந்து 'இரு-இரண்டு' பிறந்தது என்பதை அறிந்த பாவாணர், 'துமி' என்னும் பிரிதல் பொருள்தரும் தமிழ் வினையிலிருந்து 'துமி-துவி-துவ' என்னும் இரண்டினைக் குறிக்கும் சொல் பிறந்திருக்கவேண்டும் என்று கண்டறிந்தார். இங்கு நாம் குறிப்பிட விரும்புவது, தொல் மாந்தன், பிரிதல் பொருளிலும் உடைதல் பொருளிலும் இன்மைக் கருத்து நிகழ்கிறது என்பதைக் கண்டறிந்தான். அந்த உண்மையின் அடிப்படையில்தான், இரண்டினைக் குறிக்கும் 'dvi'சொல்லும், இன்மையைக் குறிக்கும் 'dis'சொல்லும் தொல் மாந்தன் மூளையில் ஒன்றாக இணைந்து 'துமி-துவி-dvi-dvis-dis'எனச் சொற்களைத் தோற்றுவித்தன.

இவ்வாறு, மிக நுட்பமான காரண-காரியத் தொடர்புடன் உருவான இரண்டினைக் குறித்த 'dvi' சொல்லும் , இன்மைப்பொருள் குறித்த 'dis'சொல்லும் மேலும் பல கிளை வடிவங்களில் அதே பொருள்களில் விரிந்தன. 'dvi', 'dis'ஆகிய இரண்டும் *dwo (two)என்னும் ஓர் முந்து இந்தோ-ஐரோப்பிய வேரிலிருந்து பிறந்தனவாக மேலை இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அறிஞர்கள் சுட்டினர். இந்த *dwoவேரிலிருந்து 'double, duo, duet, two, twice, twin, twig'போன்ற இரண்டினைக் குறித்த சொற்களும் 'di-, bi-' (துமி-துவி-துபி-பி-bi) போன்ற இரண்டினைக் குறித்த முன்னொட்டுகளும் 'dis-, des-, de-'போன்ற இன்மைப் பொருள்தரும் எதிர்மறை முன்னொட்டுகளும் பிறந்தன.

ஆங்கிலத்தில் பேரளவாகப் பயன்படுத்தப்படும் 'dishonest, discard, disallow, discharge, despatch, debar, degrade, demerit, demotion, defeat'போன்ற மிகப்பல சொற்களில் இவ் எதிர்மறை முன்னொட்டின் செல்வாக்கினைக் காணலாம்.

பிரிதல் பொருளில் இரண்டு என்னும் பொருளும் இன்மைப் பொருளும் உருவானதைக் குறித்த 'துமி' என்னும் தமிழ்வேர், ஆயிரக்கணக்கான ஆண்டின்முன் தொல் மாந்தனின் மதியில் உருவாகித் தமிழிலும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலும் உருவாக்கிய பல சொற்களும் அவை அறிஞர்களிடையேயும் கற்போரிடையேயும் மக்களிடையேயும் மக்கள் இனத்தின் நீண்ட வரலாற்றில் பொருள் ஆழமிக்க பயன்பாட்டில் செயல்பட்டுவருகின்ற நுட்பத்தை இவ் வேர்ச்சொல் ஆய்வினால் மட்டுமே கண்டு வியக்கமுடியும்.

மொழி நலமே கருத்து நலம்; கருத்து இலையேல் வினையில்லை; விளைவுமில்லை என்று மொழிக்கும் உலக நலத்திற்குமான உறவினையும் 'மாந்தன் உடலை மண்ணுக்குள்ளும் உணர்வை மொழிக்குள்ளும் புதைத்துவைத்துவிட்டுப் போயிருக்கிறான்' என்று மொழி யின் இறவாத் தன்மையினையும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரெழுதினார்.

'எழுத்தறியத் தீரும் இழிதகைமை' என்பது ஓர் பழந்தமிழ்ப் பாடல் அடி. மாந்தர், தம் இழிதகைமையை, மொழியில் உள்ள சொற்களின் ஆழமான பொருளை உணர்ந்து அறிவதனால் மட்டுமே நீக்கிக்கொள்ளமுடியும் என்பதே இப் பாடலடியின் கருத்து. மாணிக்கவாசகர், திருவாசகத்தின் சிவபுராணத்தில், சிவபெருமானின் பெருமைகளை மக்களினம் வினைகளிலிருந்து விடுபட்டுப் பேரின்பப் பெருவாழ்வு அடையவேண்டும் என்ற நன்னோக்கத்தில் கற்போர் மனம் நெகிழப் போற்றி உரைத்துள்ளார். அதன் இறுதிப் பகுதியில், 'சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை முந்தை வினைமுழுதும் ஓய எடுத்துரைத்தேன்' எனினும் 'சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார், சிவபுரத்தினுள்ளே செல்வர்' என்று இயம்பினார். இங்கு, எட்டமுடியாத இறைவனை மொழியின் பொருளுணர்ந்து கற்கும்போது எட்டிப்பிடிக்க முடியும் என்ற உண்மை உரைக்கப்பட்டுள்ளது.

உலகில்பிறந்தமக்களில்தாம்அறிவுமாந்தராகியhomosapiensஎன்னும்இனவகையினர்என்பதைஉணர்ந்துதம்மைஉயர்த்திக்கொண்டவர்கள்சிறுவிழுக்காட்டினரே.
இவர்கள்மொழியின்சொற்பொருள்ஆழம்அறிந்ததனால்தான்தம்மை அவ் உயர்தகுதிக்கு உரியவர்களாக ஆக்கிக்கொண்டார்கள் .
இவர்கள்'சில்வாழ்நாள்பல்பிணிச்சிற்றறிவினோர்'என்னும்உலகியல் உண்மையை உணர்ந்து தாம் செய்த செயற்கரும் செயல்களால் உலகில் என்றும் அழியாப் புகழினைப் பெற்றுவிடுகின்றனர்.
'Knowledge leads to immortality'என்ற விவேகானந்தர் பொன்மொழி, இத்தகைய சான்றோர்களுக்கு மட்டுமே உரியது. இத்தகையோர்க்கு அல்லாமல் மற்றையோர்க்கு, மொழி, சிறுசிறு நலன்களைத் தருவதோடு அதன் பயன் முடிந்துவிடுகிறது.

இயற்கை, மக்கள் குமுகத்திற்கு வழங்கிய பல கோடிக் கொடைகளுள் இம் மொழிக்கொடையே முதன்மையாகும். இம் மொழி, அறிவுடையதாகப் பிறந்து அறிவுடையதாக இயங்கி, அறிவுடையதாக உலகத்தை மலர்த்துகின்ற சிறப்பினை எந்த மொழியறிஞனாலும் முழுமையாக எடுத்துவிளக்கி நிறைவடைய முடியாது. மொழிக்கு இத்தகைய சிறப்பு உண்டெனினும் இம் மொழியின் துணையால் எல்லாம் தெரிந்த, எல்லாம் அறிந்த உண்மைகளை எவராலும் இன்னும் எழுதிக் காட்ட முடியவில்லை. இயற்கையின் பேரியக்கம் போல் மொழியின் பேரியக்கமும் எல்லையின்றி, முடிவின்றி முழுமையான உண்மையை நோக்கி மக்கள் குமுகத்தில் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கும். நாளைய மாந்தரும் நமக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்வரும் மாந்தரும் தாம் பேசும் மொழியை இன்னும் இன்னும் செழுமைப்படுத்தி மக்கள் நலனுக்குரிய கருத்துகளை எடுத்து மொழிந்துகொண்டே இருப்பர். மொழியின் பயன்பாடு மக்கள் குலத்திற்குத் தொடர்ந்து தேவைப்படுவதாகவே எதிர்காலத்தில் இன்னும் உணரப்படும்.

மக்கள் வாழ்க்கையைச் செழுமைப்படுத்தும் மொழியினை, அதன் வேர்ச்சொற்களைத் தோற்றுவிக்கத் தோன்றாத் துணையாய்ச் செயற்படும் இயற்கையின் பேராற்றலினை இவ் வேளையில் நாம் தொழுகிறோம்.

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் (குறள்.2)

என்னும் தெய்வப்புலவரின் திருக்குறள் இவ் வேளையில் பொருள் பொதிந்ததாக நம் மால் உணரப்படுகிறது. மொழியின் தோற்றத்தையும் தமிழ்மொழியின் வரலாற்றையும் தமிழுக்கும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையிலான வேர்ச்சொல் உறவினையும் நாம் எத்தனை ஆயிரம் பக்கங்கள் எழுதினாலும் அவை அனைத்தும் மொழியின் உண்மையினை, வேர்ச்சொற்களின் உண்மையினை, தமிழுக்கும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையிலான உறவினை முழுமையாக எழுதிவிட்டதாக எண்ணி நிறைவடைய முடியாது. தமிழ் முழுதறிந்த தக்க வேர்ச்சொல் அறிஞர்களும் கீழை, மேலை இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் பேரறிவு சான்ற வேர்ச்சொல் அறிஞர்களும் ஒன்றுகூடி ஒரு பல்கலைக்கழமாக இருந்து செய்யவேண்டியது 'தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்டம்' என்னும் இதுவாகும். அவ்வாறான ஒரு பெருமுயற்சி நிகழும்போது,

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு (குறள்.396)

என்னும் திருக்குறள் கூறுவதுபோல் இவ் ஆய்வு பரந்து விரிந்து சென்று கொண்டிருக்கும்.

மக்களினம் அன்றாடம் தன் நீண்ட வரலாற்றில் ஆயிரக்கணக்கான பொருள்களை உருவாக்கியும் பயன்படுத்தியும் வந்துள்ளது. ஒரு களிமண்ணினைக் கொண்டு ஒரு சிறு மட்கலத்தினை எப்பொழுதோ ஒருவன் உருவாக்கினான். அந்த முதற்கலம், பெரும்பாடுபட்டு உருவாக்கப்பட்டது. ஆயின், அதன் பின் உருவான கலங்கள் எளிமையாக உருவாக்கப்பட்டன. அதுமட்டுமல்லாமல், எண்ணிக்கையில் பலவாகவும் விரைந்து அவை உருவாக்கப்பட்டன. மட்கலம் மட்டுமல்லாமல், மாந்தன் பயன்படுத்திய அனைத்துப் பொருட்களும் இவ்வாறே தோன்றிப் பல்கிப் பெருகின.

மொழியில் வேர்ச்சொற்கள் எவ்வாறு தோன்றுகின்றன என்பதையும், அவ் வேர்ச்சொற்கள் எவ்வாறு சொற்களைப்

பலப்பலவாக உருவாக்கி மொழிக்கு வழங்குகின்றன என்பதையும் பற்றி உரைத்த பாவாணரின் 'ஒரு கருத்தினின்று மற்றொரு கருத்துத் தோன்றும்போது, ஒரு சொல்லினின்று மற்றொரு சொல் பிறக்க இடமுண்டாகின்றது. கருத்து வேறுபடும்போது சொல்லும் வேறுபடல் வேண்டும். அன்றேல், பொருண் மயக்கம் உண்டாவதோடு மொழியும் வளர்ச்சியுறாது. இதுவே சொல்லாக்க அடிப்படை நெறிமுறை' (வேர்ச்சொற் கட்டுரைகள்-1, பாவாணர், ப.xii) என்னும் கருத்து இங்கு இணைத்து எண்ணத்தக்கது.

இதே நுட்பத்தில்தான், ஒவ்வொரு வேர்ப்பொருளும்ஒவ்வொரு வேர்ச்சொல்லினை உண்மைப் பொருளை மூலமாகக்கொண்டு உருவாக்கிய பின்னர் அதிலிருந்து பல நூறு சொற்களைத் தோற்றுவித்தது. இச் சொற்கள், 'நுண்ணோசை(சூக்குமை)', 'நினைவோசை(பைசந்தி)', 'மிடற்றோசை(மத்திமை)' என்னும் மூன்று அகநிலைகளைக் கடந்து, 'செவியோசை(வைகரி)' என்னும் புறவடிவில் மனம், காற்று, மின்னல் போன்றவற்றின் விரைவினும் கூடிய கடிவிரைவுடன் உலகுடன் மொழியாக மக்களிடையே செயற்படுகின்றன.

ஒரு மலையும் ஆறும் பல்லாயிரம் உயிர்களுக்குப் பயன்படுமாறு அமைந்ததுபோல் ஒவ்வொரு வேர்ச்சொல்லும் பல்லாயிரம் சொற்களாக விரிந்து, அவ் வேர்ச்சொற்களின் பொருளினை நெகிழ்க்காமல் தான் படைத்த சொற்கள்தோறும் சேர்த்துவைத்துக்கொண்டு மக்கள் பயன்படுத்தும் மொழிகளில் ஆட்சி செலுத்திவருகிறது. வேர்ச்சொல் அறிஞர்கள்என்போர் ஒவ்வொரு மொழியிலும் பயன்படுத்தப்பட்டு வரும் பல்லாயிரக்கணக்கான சொற்களைச் சில நூற்றுக் கணக்கான வேர்ச்சொற்களுடன் இணைத்து உருவாக்கிக் கண்டுபிடித்துவிடுகின்றனர்.

ஆங்கில வேர்ச்சொல் அறிஞர் மாமேதை கீற்று, 461
வேர்ச்சொற்களை இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கு உரியனவாகக் கண்டு காட்டினார். அவரின் இக் கண்டுபிடிப்பு, அவரின் முயற்சியாலும் அவருக்குத் துணைசெய்த அறிஞர்கள் பலரின் முயற்சியாலும் உருவாகியிருக்கலாம். கீழை, மேலை இந்தோ-

ஐரோப்பிய வேர்ச்சொல் அகராதிகள் பலவற்றையும் இவ்வாறு மாமேதைகள் பெரும்பாடுபட்டுத் தம் கூர்த்த மதிநுட்பத்தால் தத்தம் மொழிகளில் பயன்படுத்தப்படும் பல்லாயிரம் சொற்களுக்கும் உரிய அடிப்படை வேர்களை வகுத்தும் தொகுத்தும் எழுதியுள்ளனர்.

இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கு மூலமொழியாகத் தமிழ் இருக்கலாம் என்னும் கருதுகோள் நம்மிடம் இருந்தாலும் நம் தமிழ்மொழியின் ஆயிரக்கணக்கான சொற்களுக்கும் உரிய பொருத்தமான வேர்ச்சொற்களைக் கால்டுவெல், பாவாணர்போல் மிகப் பலர் உழைத்துத் தமிழின் வேர்ச்சொல் வரலாற்றினை எழுதவில்லை. இந்தோ-ஐரோப்பிய அறிஞர்கள் பேருழைப்பில் பல்லாண்டுகள் பல தொகுதியாக உழைத்து உருவாக்கிய வேர்ச்சொல் அகராதிகள் நேரடியாகத் தமிழுடன் உறவுடையனவாக இல்லையெனினும் அவ் அகராதிகளே 'தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்ட'ப் பணிகளுக்குக் கலங்கரை விளக்கம் போல் துணை செய்கின்றன. கீற்று அகராதி, சேம்பர்சு அகராதி, சி.டி.ஆனியன் அகராதி, சான் அயிற்றோ அகராதி, American Heritageஅகராதி, ஆக்ஸ்போர்டு அகராதி, வாட்கின்சு அகராதி, Fiona McPhersonஅகராதி, இணையவழி வேர்ச்சொல் அகராதி ஆகிய மேலை இந்தோ-ஐரோப்பிய அகராதிகள் அனைத்தும் வேர்ச்சொல் ஆய்வில் பெரிதும் ஒருமித்த கருத்தினையே எழுதியுள்ளன. மேலை இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொற்களை அறிவதற்கு இத்தகைய பெருந்தொகையான அகராதிகள் நமக்குப் பயன்படுகின்றன

கீழை இந்தோ-ஐரோப்பியப் பெருமொழியாகிய சமற்கிருதத்தின் வேர்ச்சொல் வரலாற்றை அறிய முதற்பெரும் துணையாக இருப்பது மானியர் வில்லியம்சு அவர்களின் அகராதியே ஆகும். சமற்கிருத வேர்ச்சொல் அகராதி அறிஞர் மானியர் வில்லியம்சு, கீழை இந்தோ-ஐரோப்பிய மொழியாகிய சமற்கிருதத்தின் வேர்ச்சொற்கள் பலவற்றையும் மேலை இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொற்களுடன் பெரும்பாலான இடங்களில் உறவுபடுத்தி இணைத்துரைத்துள்ளார். இவ்வாறாக அமைந்த கீழை, மேலை இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அகராதிகள் தெரிவிக்கும் வேர்ச்சொற்களில் பல, தமிழின்

வேர்ச்சொற்களிலிருந்து கிளைத்து வளர்ந்திருக்கும் உண்மையினைத் தமிழ் வேர்ச்சொல் ஆய்வாளர் என்ற வகையில் அறியமுடிகிறது. இதன் காரணமாகவே 'தமிழ், திரவிட மொழிகளுக்குத் தாயும் ஐரோப்பிய மொழிகளுக்கு மூலமும்' என்னும் கருத்தில் உண்மை பொதிந்திருப்பது விளங்குகிறது. இத்தகைய கருத்துகளின் அடிப்படையில் 'தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்டம்' தான் ஆய்ந்தறிந்த கருத்துகளைப் பல தொகுதிகளில் நூலாக்கித் தமிழ், இந்தோ-ஐரோப்பிய உலகத்திற்குப் பெருமையுடன் வழங்கும்.

தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் உறவுகளையும் சொல்லுறவுகளையும் எழுதுவதற்கு மிக நீண்ட உழைப்பும் மிக நீண்ட காலமும் தேவைப்படும். இத்தகைய முன்னுரைப் பகுதிகளால் இவ் ஆய்வின் சிறப்பினை எழுதி அடக்கிவிட முடியாது. 'தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்ட'த்தில் இப்பொழுதும் தொடர்ந்தும் வெளியிடவிருக்கின்ற நூல்கள் பலவற்றில் எழுதி வெளிப்படுத்தினாலும் அவை யாவும் தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு ஆய்வுப்பரப்பின் ஒரு பகுதியைத் தொட்டதாகவே அமையும். அந்த அளவிற்கு இவ் ஆய்வுத் துறை பெரியது என்பதை மட்டுமே இவ் ஆய்வில் தொடர்ந்து ஈடுபட்டுவரும் எம்மால் உணரமுடிகிறது.

தமிழ்நாடு அரசு, 'தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்டத்திற்கு'ச் செய்துவருகிற உதவி, தமிழ் உலகத்தை மட்டுமல்லாமல் இந்தோ-ஐரோப்பிய உலகத்தையும், ஏன் முழு உலகத்தையும் மகிழ்விக்கின்ற பெருமைக்கு உரியதாகும்.

தமிழ்நாடு அரசு உவந்தளித்த 'தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதித் திட்டம்' , கால்டுவெல், ஞானப்பிரகாசர், பாவாணர் செய்தளித்த ஆய்வுநூல்களுடனும் கீழை, மேலை இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அகராதிகள் மற்றும் கருவிநூல்களின் துணையுடனும் முனைப்புடன் செயலாற்றி அதன் முதல் வெளிப்பாடாக ஒரு நூலினைத் தமிழிலும் அதன்

மொழிபெயர்ப்பாக ஒரு நூலினை ஆங்கிலத்திலும் ஆக இரு நூல்களை இப்பொழுது வெளியிடுகிறது.

தமிழ் தொடர்ந்து தன் பெருமையை நிலைநாட்டிக்கொள்ள வரலாற்றில் போராடி வந்திருக்கின்றது. அத்தகைய போராட்ட முயற்சிகளில் ஒன்றே இத் திட்டம். தமிழ், தமிழ்நாட்டு அளவில் மட்டுமல்லாமல், இந்திய அளவிலும் உலக அளவிலும் தன் பெருமையை நிலைநாட்டிக்கொள்ளும் நல்வாய்ப்பாக இத் திட்டப்பணிகளின் பயன் அமையும். இத்தகு வரலாற்றுப் பெருமை மிக்க பணியினை ஆற்றப் பண்டைத் தமிழ்ப் பெருவேந்தர் போல் பெரும்பொருளை ஒதுக்கீடு செய்து ஊக்கப்படுத்திவரும் **மாண்புமிகு தமிழ்நாட்டு முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களைத்** தமிழ்நாடு மட்டுமல்லாமல்உலகமும் போற்றி மகிழும். துறைசார் அமைச்சர்கள், செயலர்கள் ஆகியோருக்கும் இவ் வேளையில் நன்றி தெரிவிப்பதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

முதன்மைப் பதிப்பாசிரியர் குறிப்பு

இவ் ஆய்வுத் திட்டத்தின் முதன்மைப் பதிப்பாசிரியர் முனைவர் கு. அரசேந்திரன், சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தம் 17’ஆம்அகவை முதல், வேர்ச்சொல் ஆய்வில் ஈடுபட்டு வருபவர். தமிழில் முதுகலை, முனைவர் பட்டங்களை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பெற்றவர். முதுகலையில் பல்கலைக்கழக முதல் மாணவராகத் தேறித் தங்கப்பதக்கம் பெற்றவர். மூதறிஞர் செம்மல் வ.சுப.மாணிக்கனார், திருமுறைச்செல்வர் க.வெள்ளை வாரணனார் ஆகிய பெருமக்களின் மாணவர். வ.சுப.மாணிக்கனாரால் ‘தலைமாணாக்கர்’ என்று அழைக்கப்பட்டவர்.

கடந்த 40ஆண்டுகளுக்கும் மேலாகக் கால்டுவெல், பாவாணர், ஞானப்பிரகாசர் நூல்களையும் கீழை, மேலை இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் அகராதிகளையும் நுணுகிக் கற்றுத் தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் உறவுகளை ஆய்ந்து வருபவர். தமிழ்நாடு அரசின்2021ஆம் ஆண்டுக்கான தேவநேயப் பாவாணர் விருதினைப்

பெற்றவர். 'பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்-இந்தோ ஐரோப்பிய உறவு ' என்னும் தமிழ்நூலினையும் அதன் மொழிபெயர்ப்பான Genetic Relationship between Tamil and Indo–European என்னும் ஆங்கில நூலினையும் அமெரிக்காவின் சிகாகோ நகரில் 2019ஆம் ஆண்டு நடந்த 'பத்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில்' வெளியிட்டவர். அதே மாநாட்டில், 'Tamil contribution to the Nostratic studies'என்னும் தலைப்பில் கட்டுரையும் வாசித்தார்.

உலகம் பரவிய தமிழின் வேர்-கல், தமிழும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளும்-மொழி உறவு ஆய்வு, தமிழ்க்கப்பல் , தமிழறிவோம் போன்ற நூல்களை எழுதி வெளியிட்டவர். செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் நிதிநல்கையில் தமிழுக்கும் வட இந்திய மொழிகளுக்குமான வேர்ச்சொல் உறவுகளை இரண்டு ஆய்வறிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தியவர். தமிழ், இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஆய்வில் இவர் இடைவிடாமல் செய்துவரும் ஆய்வினைக் கருத்திற்கொண்டு, 2022-2023ஆம் நிதியாண்டில் நான்காண்டுத் திட்டப்பணியை உருவாக்கி, முதன்மைப் பதிப்பாசிரியராகத் தமிழ்நாடு அரசு இவரை அமர்த்தியுள்ளது. இவ் ஆய்வுத்திட்டத்தினைத் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திடம் தமிழ்நாடு அரசு ஒப்படைத்துச் செயற்படுத்தி வருகிறது.

இவ் ஆய்வுத்திட்டத்தில் முதன்மைப் பதிப்பசிரியர் உட்பட 20பேர் சிறப்புறப் பணியாற்றி வருகின்றனர்.

திசம்பர் 2023

முனைவர் கு. அரசேந்திரன்
முதன்மைப் பதிப்பாசிரியர்
தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல்
ஒப்பீட்டு அகராதித் திட்டம்
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல்
பணிகள் கழகம்

சென்னை-6

முகவுரைப் பின்னிணைப்பு

1. ரிச்சர்ட் கிளீன் கூற்று

Richard Klein, of Stanford University, has long argued that language appeared as a result of a relatively recent mutation affecting brain wiring in relation to speech, perhaps 50,000 years ago.

"The Evolution of Language", *Human Evolution: An Illustrated Introduction*, p.226

2. டிக்சன் கூற்று

At a certain stage of evolution people were able to think fairly clearly, although they had not yet developed a language. They had a well-developed set of mental concepts and could categorise things into classes, etc. Then language developed. Some words would have been onomatopoeic - the name for a bird could be based on its call, the verb for 'split' could be based on the sound of wood being split. There would have been some sound-symbolic basis, oo tending to relate to things that are large and round and ee to those that are small and thin. Language would have burst forth. Once there were names for some objects, names evolved for every type of thing and action and state and quality to which people needed to refer; plus a full set of grammatical constructions to bind these words together.

When language first developed, it was like an explosion. One would not of course have got to 5,000 words in one generation but I am suggesting that each generation would have added appreciably to the vocabulary they learnt from their parents. The human mind would have been mentally ready for language, and then it would have invented it, almost as a complete system.

R.M.W.Dixon,The rise and fall of Languages, p.64-65

3. மாக்சு முல்லர் கூற்று

Whatever view we take of the origin and dispersion of language, nothing new has ever been added to the substance of language, that all its changes have been changes of form, that no new root or radical has ever been invented by later generations, as little as one single element has ever been added to the material world in which we live.

Max Muller, Lectures on The Science of Language, p. 25

4. கோட்டை–garhஊர்ப்பெயர்கள்

Agnigarh, Dibrugarh, Numaligarh(Assam); Muzaffargarh (Bihar); Raigarh, Kudargarh, Sarangarh, Dongragarh, Khairagarh, Chhattisgarh, Manendragarh, Dharamjaigarh (Chhattisgarh); Najafgarh (Delhi); Junagarh (Gujarat); Sallagarh, Ballabgarh, Naraingarh, Bahadurgarh, Ballabhgarh (Haryana); Nalagarh, Narayangarh, Santokhgarh (Himachal Pradesh); Ladigarh, Ramgarh (Jharkhand); Gajendragarh (Karnataka); Isagarh, Rajgarh, Deogarh, Ajaigarh, Shamgarh, Narsinghgarh, Shahgarh, Barigarh, Asirgarh, Rahatgarh, Indergarh, Sabalgarh, Tikamgarh, Govindgarh, Narsingarh, Baldeogarh, Malhargarh, Vijayraghavgarh (Madhya Pradesh); Devgarh (Maharashtra); Nayagarh, Bargarh, Patnagarh, Titlagarh, Baudhgarh, Sundergarh, Debagarh (Odisha); Ahmedgarh, Chandigarh, Sardulgarh, Bhawanigarh (Punjab); Kangarh, Bhangarh, Anupgarh, Suratgarh, Achalgarh, Surajgarh, Badangarh, Nawalgarh, Sujangarh, Ratangarh, Indragarh, Mukandgarh, Bishangarh, Kishangarh, Mandalgarh, Kushalgarh, Dungargarh, Laxmangarh, Takhatgarh, Bhagwatgarh, Chittorgrah, Kumbhalgarh, Hanumangarh (Rajasthan); Aligarh, Awagarh, Azamgarh, Babugarh, Shergarh, Fategarh, Azmatgarh, Afzalgarh, Madhogarh, Kheragarh, Vijaigarh, Shishgarh, Pratapgarh, Partapgarin, Haidergarh, Shohratgarh, Shankargarh, Parikshitgarh (Uttar Pradesh);

Shaktigarh, Pithoragarh (Uttarakhand); Lalgarh, Titagarh, Balagarh, Panagarh, Chandraketugarh (West Bengal)

5. விஜயன் வருகை – இலங்கை அரசு அஞ்சல் தலை

6. இலங்கை ஊர்ப்பெயர்களில் கமம்/காமம்

பனங்காமம், கதிர்காமம், கொடிகாமம், பழையகமம், குடாகமம், பள்ளக்கமம், வலிகாமம், பழுகாமம், தம்பலகாமம், வீமன்காமம், சாகாமம் (திருக்கோவில்), இறக்காமம், வெல்காமம், உரகிரிகாமம், கிரிகண்டகாமம், மேன்காமம், ஊர்காமம், இளகாமம், தேகாமம், வேகாமம், உறுகாமம், கட்டகாமம், மாகாமம், முதலியான்காமம், சந்தணகாமம் (கல்லோயா), வத்துகாமம், கணகாமம், பலாக்கொல்லைக்கமம், கும்பகாமம், நந்திகாமம், காணுகாமம், சேரன்காமம் (அம்பாறை எல்லையூர்), உருக்காமம், வெலிகாமம், மாகாமம் (இன்றைய திஸ்ஸமகாராமை – கிரிந்த பகுதி), மரங்கல்லானகமம், ஆண்டிக்கமம், அம்பகமம், சுண்ணகமம் (சுன்னாகம்), கலுவன்கமம், கதுபலகமம்.

7. இங்கிலாந்தில் 'ham' என ஈற்றில் முடியும் ஊர்ப்பெயர்கள்

Birmingham, Markham, Nottingham, Durham, Birmingham, Wrexham, Tottenham, Gresham, Rotherham, Gillingham, Chatham, Oldham, Bellingham, Framingham, Mitcham, Waltham, Beckenham, Horsham,

Altricham, Twickenham, Durham, Wokingham, Pakenham, Chippenham, Grantham, Lytham, Fareham, Farnham, Billingham, Needham, Feltham, Dedham, Withal, Rainham, Pelham, Evesham, Penworthham, Natham, Hingham, Wareham, Chesham, Stoneham, Birmingham, Waltham, Caterham, Shoreham-by-Sea, Hailsham, Seaham, Burnham-on-Sea, Faversham, Dereham, Windham, Cottingham, Brigham, Horsham, Victoria, Windlesham, Keynsham, Brenham, Graham, Horsham, Melksham, Durham, Rockingham, Wymondham, Amersham, West Wickham, North Hykehem, Pelham, Windham, Raynham, Corsham, Buckingham, Chatham, North Walsham, Effingham, Pelham, Hersham, Wrentham, Hexham, Gillingham, Hexham, Dagenham, Taverham, Bonham, Padiham.

8. த்ரோம்பெட்டி காட்டிய தமிழ் /திரவிட–ஆத்திரேலியப் பழங்குடி மக்கள் மொழிகள் உறவு

தமிழ் – ஆத்திரேலியப் பழங்குடி மொழிகள் உறவுச்சொற்கள்

pelican: T kūlei, kadā; (கூழைக்கடா)Aus 181 goola, guleala, 175 kuliallu, 190 koolay, 190 karlie, 214A kati; **crow**: T käkkei; (காக்கை) Aus 28 koko, 11 karko; **egg**: T muttei, K motte;(முட்டை) Aus 120 meto; **fish**: T min; (மீன்)Aus 194 mena, 214B mani, 214D munni, 17 miye; **fly**: T oara; (பற?)27 booara; BNG Kauralaig/Saibai buli; **snake**: T pa$mbu; (பாம்பு)Aus 156 bumba; **sister-1**: T akka$l@ (elder)(அக்காள்); Aus 48 karoo, 97 koolakalla (elder & younger); **sister-2**: T tha-makkei [tha-honorary prefix]; (தமக்கை)Aus 84 maiko, 85 meeka, 87 maik (elder); **brother-1**: T tha-meiyan; (தமையன்) Aus 201 mia, 182 moen; **brother-2**: T thambi(தம்பி); Aus 120 tambua (younger); **head**: T mandei(மண்டை); Aus 99 munda**hair-1**: T mudi; Aus 6 moder; And Öngemāūdé; **hair-2**: T kunthak(கூந்தல்); Aus 171 condur, 152 kuttar; **grass-1**: T pul, pullu(புல்); Aus 10 peela, peelan; 6 bolea, 63 burree; **grass-2**: T krāy(கற்றை); Aus 149 karra, 40 korra, 50 koola, 17 gila, 51 goola; And Cháriarchalu-taich; **tongue**: T nāru(நாக்கு?); Aus 116 nabbie; **breast**: T kongei(கொங்கை); Aus 208D chongo, 208G chaang, 204/207A chang; **bone**: T mul(முல்?) ;

Aus moolalȩ, modlallie, 75 mudda; **skin**: T thōl, tholi(தோல்); Aus 48 dulla, 46 dalla, 55 dula, 114 thilly; **guts**: T kudal(குடல்); Aus 171 giddirra; **light**: T velichham(வெளிச்சம்); Aus 210 werrook; **cold-2**: T arina(ஆறின-ஆறினது); Aus 90 woorine, 171 waring; **cold-3**: T kulir(குளிர்); Aus 181 karil, 149 kirroo; **forest/wood**: T kādu(காடு); Aus 179 gate, 178 gallee[1]7; **hill-1**: T malei(மலை); Aus 23 moolan, 106 meri; **hill-2**: T mēdu, modu; (மேடு) Aus 99 minde; **hill-3**: T kundu(குன்று); Aus 166 kunda, 16 kata, 18 katta; **stone**: T kal, kallu; (கல்) Aus 108 koola, 181 gulla, 176 gooroa; BNG Kauralaig, Saibai kula, Kauralaigkōla; GNG Kai gala, gola; **bark**: T pattei(பட்டை); Aus 42 peeta, 24 booto, 147 bittey, 63 patta; **food**: [see WATER, EAT]: T thīni(தீனி); Aus 213 tunnam 190 dinu-ng, dana; **sleep**: T urangu(உறங்கு); Aus 10 warungo, 190 werrigoo; **drink**: T kudi(குடி); Aus 107 kootha-ngo, 126 kudge-ogoo; **see-1**: T par;(பார்) Aus 170 parrari, 190 pirroo; **see-2**: T their(தேர்); Aus 138 telli-mulla, 140 tilly-knukela; And Púchikwarir-tilu, Júwoi re-t'liu, Kol er-tilu; **sit**: T kunthu(குந்து); Aus 106 kunda, 159 gundower; **where?**: Tenge(எங்கு); Aus 147 anga, 83 yangi, 174 ingia; **full-1**: T niranda(நிறைந்த); Aus 55 narpoo; **full-2**: T miuli(முழு); Aus 150 mulea, 177 mulla-mulla, 10 maroo; **large-1**: T perum(பெரும்); Aus 44 pirma; 46 pirna; GNG 5 boro; BNG 47,48 baru-ka; **large-2**: T periya(பெரிய); Aus 46 piarree, 140 piala; **small**: T podi(பொடி); Aus boti-ne, 150 pit, 16 poto-n; **dead**: T patta(பட்ட); Aus 58 baad-lookoo, 167 bootir, 185 boote, 145 boonda; **earth**: T mannu(மண்-மண்ணு); Aus 125mannie; Aus 71mundie; GNG 5moṇdam, 6manidam, 7mandam; **tree/wood**: T maram(மரம்); Aus 197murru, 102mooroo, 126moora; **smoke**: T pohei(புகை); Aus 23poohey, 32booey; **crayfish**: T kalliral(கல்லிறால்); Aus 205keler**turkey**: T vankoli (வான்கோழி); Aus 39wongarra; **dark**: T irul(இருள்); Aus 92arreal; **today-1**: it'téi(இற்றை); AUS 60yeth, 65yatto, 38 il-ytta; **today-2**: T in'dí(இன்று); AUS 47 untie; **day/sun**: Tellei(எல்-எல்லை); AUS 13ely, 190eery, 181eri; **tomorrow**: T nalei(நாளை);AUS ? noolar; **see**: T nokku(நோக்கு); AUS 207 C naako, 190nagoo, naagi, 47nakkoo; **canoe/ship-1**: T kappel(கப்பல்); AUS 24kibera; GNG 5, 6, 8kabun, 7xubun; **canoe/ship-2**: T kalam(கலம்); AUS

209A, 209B korom; **dark/grow dark**: T karu(கரு-கருமை); AUS 131, 10koora; **light**: T vilakku(விளக்கு); AUS 210werrook; And 4ár-lid-wálaich; **increase, big-1**: T migu;(மிகு) AUS 124mooga, 113muchan; **increase, big-2**: T mettu(மெத்து); AUS 190 mootoo, 179 mulla-mulla

கன்னட – ஆத்திரேலியப் பழங்குடி மொழிகள் உறவுச்சொற்கள்

mouth: K bayi(வாய்); AUS 177 be, 142beea; **elder brother**: K anna(அண்ணா); AUS 142att-ana (att is honorific prefix); **large**: K dadda(தட); AUS 29dudar; **see**: K nōdu(நோடுதல்); AUS 88nithe, 188natan, 178nad, 161natha; **hear**: K kēlu(கேள்); AUS 107kurra, 191gorai, 194 koori [ear]; **stand/sit**: K nillu(நில்); AUS 196 nulli, 181naree; **where?**: K yelli(யா-எல்லி); AUS 171yella, 184yilla, 172 illy, 173/178ille; **three**: K mūru(மூன்று); AUS 64murra, 14marronoo; **fire**: K ur-i(உரி); AUS 37, 38oora, 39ooraa OLD: K kiro; AUS 14kyerra, 155kiara, 140kaera; **ear**: K kêl(கேள்); AUS 35goolaya, 193/194 koori, 191gora; **many**: K pal(பல்-பல); AUS boola (v. widespread); And 4ár-púlia-da; **boy**: K mag-an(மகன்); AUS 170mugee; 190makkoo; **mother/elder sister**: K akka(அக்கை) (elder sister) = AUS 212yakkan, 210yackan (MOTHER); **wind**: K karr-u(காற்று); AUS 190 gera, girar, kerare, 215 karrie

திரவிட – ஆத்திரேலியப் பழங்குடி மொழிகள் உறவுச்சொற்கள்

one-1: Malto, Telugu oru(ஒன்று); Aus 105ooroo, 106orroo; **two**: Maltoiru, ir(ஈர்-இரண்டு); Aus 167yero; **three-1**: Maltomumdru(மூன்று); Aus 136mundula; GNG 11Augustaflußmongul; **three-2**: Kui mūdu, Kannada mūdu;(மூன்று) Aus 168muddan; **three-3**: Telugu mūnnu; (மூன்று)Aus 11 mun-gooraba; **three-3**: Brahui mūru; (மூன்று)Aus 11murra; **four**: Malto, Telugu nālu, Malto, Kui, Gondi nal; (நான்கு)Aus 63nulla; Tas Peron nina; GNG 11Augustafluß nun; **i-2**: Malayalam nanna (நான்); Aus 35ngana; **i-3**: Maltonän(நான்); Aus 18nange; **you-1**: Malto, Kui, Gondi, Telugu, Kuruthni; (நீ) Aus 13 nee-nee; **you-2**: Gondi, Tamil,

Korri nin;(நின்) Aus 166nin; **you-3**: Brahui ninu(நின்); Aus 120nino; **you-4**: Kaikadiinu(நும்); Aus 164 in, 161 innoo; **foot-1**: Kui, Gondi, Telugu, Malayalam kāl, Kannada kalu;(கால்) 208H kaar, 208C kar, 179 garra, 213gerra; GNG Kelana Kai kiese; **foot-2**: Brahui khed;(குதிகால்) Aus 179 gidda; **nose**: Malto, 4, 10 mūkkų, Kui, Gondi muka, Brahui migu, Kaikadimungeli;(மூக்கு) Aus 107 mingo, mingoo; **eye**: Malto kana, khanna, Gondi kaṇṇa, Kaikadikannu, 9 kan; (கண்)Aus 37 ul-gana, 38 al-kna; **mouth-1**: Tamil bai(வாய்); Aus 142 beea, 177 be; **teeth**: Telugu, Kannada pellu, Kui pell, Gondi pella, Malayalam pal; (பல்) Aus 152 pirra; And Puchikwárpéla-da; **hair-1**: Kui magara, Gondi magri; (மயிர்)Aus 170 magool; **hair-2:** Brahui kūdalu(கூந்தல்); Aus 152 kultar; **hair-3**: Tamil, Malayalam chutti; (சுட்டி)Aus 131 kuthy; Tas Jorgensen cetha-na, Lhotsky ziti-na; GNG Poom hodo; **belly/stomach-1**: Kui varag, Gondi vārga; (வயிறு)Aus 11 waelgo, 12 wilguo; NGG Wenke gulegim; **belly/stomach-2**: Kui vayara; (வயிறு)Aus 96 wyyeer; **belly/stomach-5**: Kaikadivayara;(வயிறு); Aus 190 daddo; **father**: Korri abba, ābā; (அப்பா)Aus 124/133 aboo [Correspondence with Munda]; BNG Kiwai, Miriam aba, Domaraabai, Mairuapai; GNG Manikam abú, Bogadjimabu, Kaddaabe; **mother-1**: Telugu amma(அம்மா); Aus 104 amme, 102 ama; BNG Kauralaig, Saibai ama; Miriam amau;GNG Bongu am; **mother-2**: Gondi gamma;(அம்மா) Aus 167 kame; **brother**: Kaikadi dada(தாதை); Aus 194 tutha, 167 dooda [Correspondence with Munda]; **child-1**: Maltopillei, 10 pilla; (பிள்ளை)Aus 97 bile, billa, 101 biller-biller; **child-2**: Kui gunt, Gondi gunti;(குழவி) Aus 131 gundoo, 152 candoo; **son/young man**: Malayalam marri, Kuruth mar(மறி); Aus 145 maura, 62 meroo; **water-1**: Kui, Gondi tenni; (தண்ணீர்)Aus 201 teeni; **water-2**: Telugu vellam; (வெள்ளம்)Aus 214 A, 214C wolla, 181 wollee, wollum, 94 wadda; **water-3**: Tamil amm; (அம்-அம்பு)Aus 131/142/154/174 ammoo, 156 amu; **go/walk-1**: [see foot] Telugu po(ga); (போ) Aus 165 bego**go/walk-2**: Tamil, Korri kalā; Aus 19 koola, 21 gooley; **eat-1**: Malto,

Kui, Brahui tinnu, Malayalam tin, Kannada tinu;(தின்) Aus 46 tina, 49 tyena, 120 diana, 211 thianang; **eat-2**: Tamil mōkhī; (முழுங்கு)Aus 40 mungee, 214B maichimiak; **come/walk**: Tamil, Korri bara, Malayalam vara, Malto, Kui, Gondi, Telugu va;(வா-வரு)Aus 137 a-ber, 73 para-poo, 189 warre, 8, 9 wa-thi; **yes-1**: Gondi hal;(ஆம்) Aus 69Aus ka, 159 ha-ha; **yes-2**: Kaikadi a;(ஆம்) Aus 41 a; **no-1**: Tamil alla;(அல்ல) Aus 155 alla; **no-2**: Tamil mal'ā,(மறு?) Korri mala; Aus 102 malloo, 104 mallo; Tas Miliganmallyaleah; **no-3**: Kannada ledu;(இலது-லேது) Aus 2 leita, leiter

9. கு. அரசேந்திரன் தொகுத்த தமிழ்–ஆத்திரேலியப் பழங்குடி மொழிகள் சொல்லுறவு

அப்பா(தந்தை)-pappa(father);அரத்தம்(குருதி)-arkuga(blood); உகிர்(கை, கால் நகம்) -yulu(nailof finger);எல்(சூரியன்)-walu(time, day, sun);கட்டை(மரக்கட்டை)-katta(heavy stick to fight); கலம்(சிறு படகு)-galwaya(canoe); கருப்பு(கரிய நிறம்) -knob(black); கணை(கூரிய ஆயுதம்)–ganay(digging stick);காற்று(காற்று)-yartu(Windgale); காளான்(காளான்)-ngalangala(mushroom); குருதி(அரத்தம்)-kurrk(red,literally having the colour of blood);ஞாயிறு(சூரியன்)-nyaui(sun); தொடை(கால் உறுப்பின் மேற்பகுதி)- tharra, tyat(thigh); பந்தல்(கட்டப்பட்டது)-pantali(to tie); படகு(நீரில் செல்லும் கலம்) -bagul(canoe); பிறை(இளநிலா)-pira (moon); புகை(புகை)-buyu, buya, buyi, buwl(smoke),buku-rangu(dark); மலை(மலை)-muli(hill,ridge); மாமன்(மாமன்)-mahman(father, uncle); முகம்(முகம்)-mulha(face,nose); முணிதல்(முடைதல்)-muni(to tie), muni(police man, literally to tie up);மூக்கு(மூக்கு)-muruh, muru(nose); மெழுகு(தேனடை)-muyi(bee wax); மையல்(மயக்கம், அறியாமை -mayaal(incompetent,ignorant); வாரணம்(கடல்) -wadam(sea); விழி (கண், முழி, முயி-உலகவழக்கு)-mai, milmmilki,miyi(eye); விரல்(கை உறுப்பு)-mara, (hand, finger, five)

-பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட
தமிழ்-இந்தோ ஐரோப்பிய உறவு, பக்.14-15

10. நல்லூர் ஞானப்பிரகாசர் கூற்று

In Indo- European they are meaningless abstractions, but in Dravidian they are embodiments of unmistakable, if unspecified, ideas, indicating the trend of the sense of fully developed words of which they are as it were the living germs. They threw a flood of light on and infuse life into the gloomy and meaningless jumble of sounds which Indo-European "roots" would con- tinue to be without them.

-Linguistic evidence for the common origin of the Dravidians and Indo-Europeans, Tamil Culture II, 1953, p.92

11. Corona – வடிவம்



12. கூர்மைப்பொருள் – அறிவுத்திறம் உறவு

‘kentron’சொல்லிலிருந்து பிறந்த ‘நடுவம்’ குறிக்கும் ‘centre’சொல்லிற்கும் அறிவுத்திறம் குறிக்கும் ‘skillful’சொல்லிற்கும்

நேரடிப் பொருளுறவு இல்லை. 'centre'சொல் பிறப்பதற்கு மூலமான 'kentron'சொல்லின் கூர்மைப் பொருளே அறிவுத்திறம் குறிப்பதற்கு வேர்ப்பொருளாகும்.

தமிழில், கூர்மை குறித்த சொற்களுள் 'அக்கு' என்பதும் ஒன்று. இவ் 'அக்கு' ஆகிய கூர்மைத் தமிழ்ச்சொல்லே, இந்தோ-ஐரோப்பியத்தில் *ak(be sharp, rise (out) to a point, pierce.")எனக் கூர்மை குறித்த முந்து இந்தோ-ஐரோப்பிய வேராகச் சென்று சேர்ந்தது. 'ak'ஆகிய இக் கூர்மைக்கருத்து வேரிலிருந்து பிறந்ததே நுண்ணறிவினோர் குறிக்கும் 'acumen'என்னும் மேலை இந்தோ-ஐரோப்பியச் சொல்.

acumen (n.)

"quickness of perception, keen insight," 1530s, from Latin acumen "a point, sting," hence, figuratively, "mental sharpness, shrewdness," from acuere "to sharpen," literal and figurative (of intellect, emotion, etc.), related to acus "a needle" (from PIE root *ak- "be sharp, rise (out) to a point, pierce").

-Online Etymological Dictionary

தமிழில், 'அரம் போலும் கூர்மையர்' என்று திருவள்ளுவர் அறிவுக்கூர்மைக்குக் கூரிய அரத்தினை உவமையாகக் கூறினார். திருவாசகத்தில் மாணிக்கவாசகர், இறைவனை அடையும் அடியாரின் அறிவுத்திறனைக் 'கூர்த்த மெய்ஞ்ஞானம்' என்று கூறினார்.

corner, edge, eager

'corner', 'edge'ஆகிய இரண்டு சொற்களும் கூரிய முனையினைக் குறிப்பன. இவ் இரண்டு சொற்களும் முறையே கூர்மையைக் குறித்த 'கடு', 'அக்கு' என்னும் இரண்டு தமிழ்ச்சொற்களிலிருந்து பிறந்தன. 'corner'என்னும் கூர்மைப்பொருள் சொல், அறிவுக்கூர்மையைக் குறிக்கவில்லை. ஆயின், 'corner'சொல்லுடன் பொருளுறவு கொண்ட 'அக்கு -ak' வேரிலிருந்து பிறந்த 'edge', ' eager'என்ற இரண்டு சொற்களில் 'eager'என்பது

அறிவுக்கூர்மையுடன் தொடர்புடையதாக மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் வளர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அதாவது, 'கண்டம்-kentron-centre'என்ற சொல்லில் கூர்மைப்பொருளுக்குமேல் அறிவுத்திறம் குறிக்கும் 'skillful'பொருளும் சேர்ந்திருப்பதுபோல், 'corner', 'edge'ஆகிய கூர்மைப்பொருள் சொற்களுடன் உறவுடைய 'eager'சொல்லிலும் அறிவுத்திறம் குறிக்கும் பொருள் இணைந்துள்ளது என்பதே இங்கு நாம் சுட்டும் செய்தியாகும்.

corner

late 13c., "place where streets or walls meet;" early 14c., "intersection of any two converging lines or surfaces; an angle," from Anglo-French*cornere* (Old French *corner*, *corniere*), from Old French *corne* "horn; corner," from Vulgar Latin **corna*, from Latin *cornua*, plural of*cornu*"horn, hard growth on the head of many mammals," from PIE root ***ker-** (1) "horn; head."

edge

Old English *ecg* "corner, edge, point," also "sword" (also found in*ecgplega*, literally "edge play," *ecghete*, literally "edge hate," both used poeticallyfor "battle"), from Proto-Germanic **agjo* (source also of Old Frisian *egg* "edge;" Old Saxon *eggia* "point, edge;" Middle Dutch *egghe*, Dutch *eg*; Old Norse *egg*, see **egg** (v.); Old High German *ecka*, German*Eck* "corner"), from PIE root ***ak-** "be sharp, rise (out) to a point, pierce."

- Online Etymological Dictionary

eager (adj.)

late 13c., "strenuous, ardent, fierce, angry," from Old French aigre"sour, acid; harsh, bitter, rough; eager greedy; lively, active, forceful," from Vulgar Latin *acrus (source also of Italian agro, Spanish agrio), from Latin acer "keen, sharp, pointed, piercing; acute, ardent, zealous" (from PIE root *ak- "be sharp, rise (out) to a point, pierce").

skillful

‘centre’சொல்லிற்குரிய பொருள்களுள் ‘ skillful’என்பதும் ஒன்று என்பதை சேம்பர்சு அகராதி சுட்டியது. ‘skill + ful’என்ற இரண்டு சொற்களின் வரலாற்றையும் தமிழ்வேருடன் இங்கு இணைத்துக்காணமுடியும்.

‘கல்லுதல்’ என்னும் தமிழ்வேருக்குத் தோண்டுதல்/துருவுதல் என்ற பொருள்களும் உண்டு.‘மட்கலம்’, ‘மரக்கலம்’ என்ற சொற்களின் ‘கலம்’ சொல், ‘கல்’லாகிய துளைப்பொருள் வேரிலிருந்து பிறந்த துளையினை உடைய பொருள்களாகும். ‘ hole, hall, hollow’ஆகிய மூன்று ஆங்கிலத் துளைப்பொருள் சொற்களுக்கும்உரிய வேராக ஆங்கில வேர்ச்சொல் அறிஞர் கீற்று ‘kal’என்பதையே குறிப்பிடுகிறார்.அத்துடன், ‘ககர-சகர’ மாற்றத்தில் ‘cell’என்ற சொல்லிற்கும் கீற்று காட்டுவது இந்த ‘kal’வேரே ஆகும்.

‘கல்’லாகிய தோண்டுதல்/துருவுதல் பொருள்தரும் இத் தமிழ்ச்சொல், ‘kel/skel’என்னும் முந்து இந்தோ-ஐரோப்பிய வேராக மேற்கே சென்று நிலைபெற்றது. ஒரு பொருளினை அறிதல் என்பது, அதன் முழுத் தன்மையையும் பகுத்துப் பகுத்து அறிந்துகொள்வதாகும். இவ் அறிவினைத் தமிழில் ‘பகுத்தறிவு’ என்றனர். ‘kel/skel’என்னும் முந்து இந்தோ-ஐரோப்பிய வேருக்குத் துளைப்பொருளுடன் உறவுடைய ‘to cut’என்ற பொருளை இணையவழி வேர்ச்சொல் அகராதி உரைத்துள்ளது பொருத்தமே.

ஒரு பொருளினைத் துளைத்து, அதாவது துருவி, உட்சென்று, கண்டறியும் நுண்மாண் நுழைபுலமே ‘skill’ஆகும். இதன் அடிப்படையில்தான், வெட்டுதல் பொருள்தரும் ‘kel/skel’என்னும் வேரிலிருந்து ‘skill’என்னும் சொல் பிறந்ததாக ஆங்கில வேர்ச்சொல் அகராதி மேதைகள் விளக்கியுள்ளனர்.

கல் –kel - half

‘kel/skel’ ஆகிய வேரிலிருந்தே அரைப் பங்கினைக் குறிக்கும் ‘half’என்னும் சொல் பிறந்ததாக ஆங்கில வேர்ச்சொல் அறிஞர்கள் எழுதியுள்ளனர். தோண்டுதல் பொருள்தரும் ‘கல்’ என்னும் சொல் பெற்ற அதே பொருளினைப் ‘பகு-பகுத்தல்’ என்னும் சொல்லின் ‘பகு’வும், ‘அறு-அறுத்தல்’ என்னும் சொல்லின் ‘அறு’வும் தமிழில் கொண்டுள்ளன. ‘பகு-பகுத்தல்’ என்னும் இவ் வினைவழி, ‘பகு-பகுதி-பாதி’ என அரையினைக் குறித்த சொல்லும், ‘அறு-அறுத்தல்’ ஆகிய வினைவழி ‘அரை’ எனப் பாதியைக் குறித்த சொல்லும் தோன்றின. அதே ‘அறு-அறுத்தல்’ ஆகிய தமிழ்ச்சொல், ‘ardha’எனத் திரிந்து சமற்கிருதத்தில் அரையினைக் குறிக்கும் ‘அர்த்தநாரி, அர்த்தசாமம்’ போன்ற சொற்களின் ‘அர்த்த’ சொல்லினையும் தோற்றுவித்தது. இதனை *kel-to cutஎன்னும் வேரிலிருந்து உருவானதாகக் கூறப்படும் half(கல்-kel-half)என்னும் சொல்லுடன் அறிஞர்கள் பொருத்தி எண்ணவேண்டும்.

skill (n.)

early 12c., “knowledge, divine wisdom;” late 12c., “power of discernment, sound judgment; that which is reasonable,” senses all now obsolete, from Old Norse skil“distinction, ability to make out, discernment, adjustment,” which is related to skilja (v.) “to separate; discern, understand,” from Proto-Germanic *skaljo- “divide, separate” (source also of Swedish skäl“reason,” Danish skjel“a separation, boundary, limit,” Middle Low German schillen“to differ,” Middle Low German, Middle Dutch schele“separation, discrimination;” from PIE root *skel- (1) "to cut").

-ful

‘skillful’சொல்லின் பின்பகுதியாகிய ‘-ful’என்பது, ‘பல’ என்னும் தமிழ்ச்சொல்லுடன் உறவுடையதாகும். தமிழில் ‘ப’ ஆகிய இதழொலி, ‘f’என்னும் உரசொலியாக மாறியதன் அடிப்படையில் தமிழின் ‘பல’, ‘full’எனவும் ‘fill’ எனவும் ‘fulfill’எனவும் பல்வேறு சொற்களாக மாறியது. அறிஞர் கால்டுவெல், தமிழின் ‘பல’ சொல்லினைக்

கிரேக்கத்தில் பன்மையைக் குறிக்கும் ‘polus, poly, hoi, polloi’ஆகிய சொற்களுடனும் இலத்தீனின் ‘plus’ சொல்லுடனும்உறவுபடுத்தி விளக்கினார். இப் ‘பல’ சொல்லுடன் உறவுடையனவே மேற்குறித்த ‘full, fill, fulfil’ஆகிய சொற்கள்.பெயரடையாகக் கையாளப்படும் ‘skillful’ ஆகிய இச் சொல், ‘அறிவு பல்கிய’ என்னும் நேரடித் தமிழ்ப்பொருளில் ‘கல் + பல் ’ ஆகிய இரண்டு மூலமொழிச் சொற்களின் சேர்க்கையினால் ‘skillful’என்றானது.

செகு –scientia- science

‘கல்லுதல்’ வேர்கொண்ட வெட்டுதல்/துளைத்தல் பொருள், ‘செகு’ என்னும் பிறிதொரு தமிழ்ச்சொல்லிலும் உள்ளது. ‘அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத்து உண்ணாமை நன்று’ என்னும் குறள், விலங்கு, பறவைகளின் உடம்பிலிருந்து உயிரினைப் பிரித்து அவற்றின் உடலினை உண்ணக்கூடாது என்னும் கருத்தினைக் கூறுகிறது. இங்கு, உயிரினை உடம்பிலிருந்து பிரித்தல் ‘உயிர் செகுத்தல்’ எனப்பட்டுள்ளது. தமிழில் ‘செகு’ச்சொல், பிரிதல் பொருளில் பல இடங்களில் ஆளப்பட்டுள்ளது. ‘செகு’வாகிய இப் பிரிதல் பொருள் சொல், இலத்தீனில் தொண்டி-Tyndisஎனவும் முசிறி – Muzirisஎனவும் ஈற்றில் ‘s’சேர்ந்ததுபோல், ‘sexus’எனஇலத்தீனில் திரிந்தது. ஆண்பால், பெண்பால் எனப் பிரிவுப்பொருள் குறிக்கும் ‘பால்’ சொல்லினால் தமிழில் சொற்களை ‘ஐம்பால்’ எனப் பிரிக்கின்றோம். ‘பால்’ என்னும் இச் சொல், ‘பகு-பகல்-பால்’ எனப் ‘பகு’ என்னும் வேர்வழிப் பிறந்தது. ‘பகு’ என்னும் வேருக்கு உரிய அதே பிரிவுப்பொருள்தான், ‘செகு’ என்னும் தமிழ்வேருக்கும் உரியதாகும். ‘செகு’வாகிய தமிழ்ச்சொல், மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் *sek/skeiஎனத் திரிந்து தமிழின் ‘வெட்டுதல்’ ஆகிய அதே வேர்ப்பொருளில் ‘to cut’என ஒரு முந்து இந்தோ-ஐரோப்பிய வேராக மாறியது.

‘பிரிதல்’ பொருள் தரும் தமிழின் இச் ‘செகு’ வழியாகப் பிறந்தஇலத்தீனின் ‘sexus’வழித் தோன்றியதே ‘sex’என்னும் ஆங்கிலச் சொல்லாகும். ஆண்பால், பெண்பால் என்ற பிரிவுப்பொருள் குறிக்கும் சொல்லினை மேலை உலகத்தில் ஆண்செகுப்பு, பெண் செகுப்பு என்றதன் அடிப்படையில் பால் குறிப்பதற்கு ‘sex’என்ற சொல்லால் அழைத்தனர். ‘செகு’ என்னும் இப் பிரிதல் பொருள் வேரிலிருந்தே உலகின் இயற்கை உண்மைகளைப் பகுத்துப் பகுத்து அறியும் அறிவியல் குறிக்கும் ‘science’என்னும் சொல்லும் உருவானது.

science

mid-14c., “state or fact of knowing; what is known, knowledge (of something) acquired by study; information;” also “assurance of knowledge, certitude, certainty,” from Old French *science* “knowledge, learning, application; corpus of human knowledge” (12c.), from Latin *Scientia* “knowledge, a knowing; expertness,” from *sciens* (genitive *scientis*) “intelligent, skilled,” present participle of *scire* “to know.”

The original notion in the Latin verb probably is “to separate one thing from another, to distinguish,” or else “to incise.” This is related to*scindere* “to cut, divide” (from PIE root ***skei-** “to cut, split;” source also of Greek*skhizein* “to split, rend, cleave,” Gothic *skaidan,* Old English*sceadan* “to divide, separate”).

வேர்ச்சொல் அறிஞர் வாட்கின்சு அகராதியும் இணையவழி வேர்ச்சொல் அகராதியும் ‘science’சொல்லிற்கு, ‘skei – to cut, split. Extension of sek’என விளக்கம் அளித்துள்ளன. இதனால், ‘sex’சொல்லிற்கும் ‘science’சொல்லிற்கும் உரிய வேர் ஒன்றே (sek-to cut)எனத் தெரிகிறது.

அறிவு, திறமை, அறிவியல் பாங்கு என்பன யாவும் உலகையும் உலகப் பொருள்களையும் பகுத்துப் பகுத்து ஆய்வதன்வழி உருவாவனவாகும். ‘ skillful, science’ஆகிய மேலை இந்தோ ஐரோப்பியச் சொற்கள் தமிழின் வெட்டுதல் பொருள்தரும் ‘கல்-கல்லுதல்(kel)’ வழியாகவும் ‘செகு-செகுத்தல் (sek/skei)’வழியாகவும் உருவானவை என்பதைத் தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல்

ஒப்பீட்டு முயற்சியுடையார் கண்டு மகிழ்வர். தமிழ்-இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கு இடையில் அமைந்த உறவு, ஓர் உயிர் உறவுபோல் ஒரு நுண்மை சார்ந்த செயற்பாட்டுத் தன்மையதாகும். பருப்பொருள்களைப் பார்த்து உறவுபடுத்தும் உலகவர் எவரும், இவ் ஆய்விற்குள் பொதிந்திருக்கும் பேருண்மைகளைக் கண்டு மகிழமுடியாது.

கும் + செகு –con + scire - conscious

தமிழில், 'கும்' என்னும் வேர், 'கூட்டப்பொருள்' தருவது. 'கும்முதல்', 'கும்பிடுதல்', 'கும்பல்', 'குமித்தல்', 'குமுறுதல்' என்ற இடங்களில் 'கும்' சொல் 'கூட்டப்பொருள்' பெற்றிருத்தல் காண்க. 'கும்' ஆகிய இவ் வேர், 'அம்மை-அவ்வை'; 'செம்மை-செவ்வை' போல், 'கும் -குவ்' எனத் திரிந்து, 'குவி', 'குவிதல்', 'குவியல்' எனவும் 'கும்பு-குப்பு' என வலித்தல் ஒலிமாற்றத்தில் மக்கள் செறிந்து வாழும் 'குப்பம்' போலப் பல சொற்களைத் தமிழில் தோற்றுவித்துள்ளது. கூட்டப்பொருள் தரும் தமிழின் இக் 'கும்' சொல், மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் 'com'எனத் திரிந்தது. இச் சொல்லின் வேராக *kom (beside, near, by, with)என்னும் வடிவினை வாட்கின்சு அகராதியும் இணையவழி வேர்ச்சொல் அகராதியும் காட்டுகின்றன. இந்த 'com'சொல், வருமொழிக்கு ஏற்ப co, cog, con, col, corஎனப் பல வடிவங்களைப் பெறுவது பற்றி இணையவழி வேர்ச்சொல் அகராதி,Before vowels and aspirates, it is reduced to co-; before -g-, it is assimilated to cog- or con-; before -l-, assimilated to col-; before -r-, assimilated to cor-; before -c-, -d-, -j-, -n-, -q-, -s-, -t-, and -v-, it is assimilated to con-, which was so frequent that it often was used as the normal form எனத் தொகுத்துரைத்துள்ளது.

மனவியல் சார்ந்த சொல் 'conscious'. ஒருவன் தன்னைச் சார்ந்த முழுநிலைமைகளையும் உள்மனத்தின் வழி முழுவதும் அறிதல், 'conscious' ஆகும். இந்த 'conscious'சொல், இலத்தீனின் conscire (con+scire) சொல்வழிப் பிறந்தது. தமிழின் கூட்டப்பொருள் தரும் 'கும்'

ஆகிய சொல், வருமொழிக்கு ஏற்ப 'con'எனத் திரிந்தது. 'செகு'வாகிய பிரிதல் பொருள்தரும் தமிழ்ச்சொல், 'scire'எனத் திரிந்து, பிரித்து அறிதலால் வரும் அறிவுப்பொருள் தரும் சொல்லாக இலத்தீனில் ஆனது. இந்த இலத்தீனின் 'scire'சொல்லே, செவ்வியல் இலத்தீனில் 'scientia' என்று திரிந்து பின்னர் ஆங்கிலத்தில் 'science' என்ற வடிவம் பெற்றது.ஆக மொத்தத்தில், தமிழின் 'கும்', 'செகு' ஆகிய இரண்டு மூலமொழி வேர்களிலிருந்து எல்லாவற்றையும் சேர்த்து முழுதுமாக அறிதல் என்னும் பொருளில் 'conscious'என்னும் சொல் மேலை உலகத்தில் பிறப்பெடுத்தது.

13. பாவாணர் – 'பொறு' சொல் விளக்கம்

'பொறுத்தல்' என்னுஞ் சொல்லிற்கு மேற்கூறிய பொருள்களெல்லாவற்றிற்கும் அடிப்படையானது சுமத்தல் என்பதே . அது உடம்பாற் சுமத்தலும் உளத்தாற் சுமத்தலும் என இரு திறப்படும். அவற்றுள் முந்தியதே முன்னது.

'பொறு' என்னும் தூய தென்சொல் , கன்னடம், மலையாளம், துளு, குடகம், கோத்தம், துடவம் முதலிய திரவிட மொழிகளில் மட்டுமன்றி, ஆரிய மொழிகள் அனையவற்றிலும் சென்று வழங்குவது, கீழ்வரும் எடுத்துக்காட்டு விளக்கத்தால் அறியப்படும்.

பொறு-E *bear*: to carry, OE, *bearan*, ON. *bera*, OFris.*bera*, Du. *beren*, OHG, *beran*. to bear, carry. Goth. *bairan*, to bear, carry, give birth to, OHG, *gi-beran*, MHG. *gebern*, G. *gebaren*, Arm. *beram*, I bear, carry, bring, bern, burden, GK, *pher*, *pherein*, to bear, carry, L. *fer*, *feere*, to bear, carry, Celt. *ber*, Alb. *mbar*, *bar*, I carry, drag, *bir*, son, OSlav, *bro, birati* (for earlier *birti*), to bring together, collect, take, *breme*, burden, Slavonic

ber, *brati*, Olr. *biru*, I carry, Wecymeraf, I take, Toch, *par*, to bear, bring, fetch, Zend. *bar*, ber, Skt, *bhar*, to bear, carry.

ஆங்கிலச் சொற்கள்

bear, to carry; ***bearer***, peron or thing that carries, personal servant, bringer of letters or message, possessor of shares, L ferter; ***bearing***, outward behaviour, relation, reference, part of machine that bears the friction; ***bairn***, Child, that which is born; ***barley***, what the carth bears or brings forth. AS. bere, barley: bier-lic- barley (Max Muller); ***barrow***, two-wheeled handcart for carrying things; ***berth***, adequate sea-room for ship, sleeping place in ship train, etc., naut, use of birth; ***bier***, movable frame on which coffin on cropse in carried to the grave; ***birth***, the act of being born; ***burden***, what is borne or carried.

சமற்கிருதச் சொற்கள்

bhri, to bear, carry, convey, to hold (on or in). RV; ***bhrit***, bearing carrying, brining, supporting maintaining etc.; ***bhrita***, borne, carried, gained, etc.; ***bhritaka***, broghts, fetched, hired, etc.; ***bhriti***, braring, carrying, support, maintenance, etc.; ***bhritya***, to be nourished, maintained, a dependent, servant of a king, minister; ***bhara***, bearing, conveying, supporting, maintaining, etc.; ***bharana***, bearing, maintaining bharat, bearing, carrying RV.; ***Bharata***, son of Dushayanta and Sakuntala; ***Bharatavarsha***, country of Bharata, name of India; ***Bharatakhanda***, name of a part of B.V.; ***bhari***, bearing, possessing, nourishing bhariman, supporting, nourishing; ***bhartri***, a bearer, one who bears or carries, or maintains, a preserver, protector, maintainer, chief, lord, master; ***bharatrika***, a husband, bhara, weight, load; ***Bharata***, descended from Bharata; ***Bharati***, a female descendent of Bharata, N. of a deity (in RV. often invoked among the April delties and esp. together with and Sarasvati); accord to Nir, viii 13, a daughter of Aditya; later identified with Saraswati, goddess of speech)

இலத்தீனில் மறுவடிவச் சொல்

L. *portare*, to carry, F. *porter*. E. *port*, to carry; **L. *protabilis***, F. *portable* - E. *portable*, that can be carried; **L. *portatus***, F. *portaticum*, E. *portage*. the act of carryingE. *portamento*, glide from one tone to another; **L. *portatorem***, F. *porteur*, ME. *portour*, E. *porter*, carrier; **L. *portare***, It. *portatoglis*, lit, carrier of leaves, *portofolio*, E. *portfolio*; **F. *porte-manteau***, lit 'cloak bearer.' E. *portmanteau*. a larger traveling the bag consisting of two compartments,

*portare*என்னும் இலத்தீனச் சொல்லிற்கு வேறுவழியில் நலிந்தும் வலிந்தும் மூலங்காட்டியிருப்பது பொருந்தாது.

'பொறு' என்பதன் திரிசொல்லை வருஞ்சொல்லாகக் கொண்ட மேலையாரியக் கூட்டுச் சொற்கள்

fer: confer, defer, differ, infer, lucifer, offer, prefer, profffer, refer, suffer, transfer; **ferate**: vociferate; **ference**: difference, circumference, conference; **phor**: metaphor, phosphor; **phora**: cataphora, anthyopophora; **phore**: semaphors, ctenophore; **phoreo**: Gk. diaphoreo, to carry through; **phoron**: Gk. adisphoron; **phorous**: phosphorous, adiophorous; **phery**: periphery; **port**: deport, disport, export, import, rapport, report, support, transport

புல் - பொல் – பொர் -பொரு -பொறு. (பொருதல்= பொருந்துதல், பொருந்தித் தாங்குதல் , ஒ.நோ: முட்டுதல் = பொருந்துதல், பொருந்தித் தாங்குதல் , முட்டுக் கொடுத்தல் என்னும் வழக்கை நோக்குக. பொரு - பொருப்பு = வான்முகட்டைத் தாங்குவதாகக் கருதப்பட்ட மலை. ‘Atlas’என்னும் இலிபிய (Libya)நாட்டுமலை வான்முகட்டைத் தாங்குவதாக ப் பழங்காலக் கிரேக்கரால் கருதப்பட்டமையை நோக்குக.

இதினின்று உலக முதன்மொழியும் திரவிடத்திற்குத் தாயும்ஆரியத்திற்கு மூலமுமான தமிழினின்றே , சுமத்தலைக் குறிக்கும் (மேற்காட்டிய) ஆரியச் சொற்களெல்லாம்திரிந்துள்ளனவென்றுதெற்றெனத் தெரிந்து கொள்க.

- பாவாணர், தலைமைத் தமிழ்,ப. 153-156

14. தமிழ்–இந்தோ–ஐரோப்பியச் சொல்லுறவு

காந்து –candle

‘காந்து’ என்னும் தமிழ்ச்சொல், வெப்பம், ஒளி என்னும் பொருளில் தமிழில் பல்லாயிரம் ஆண்டுகளின் முன் பிறந்தது. ‘காந்து’ ஆகிய இச் சொல், கீழை, மேலை இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலும் புழங்குகின்ற சொல்லாக உள்ளது. பாவாணர், ‘காந்து’ சொல் வரலாற்றையும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் அது சென்று சேர்ந்து வழங்கும் வரலாற்றையும் சுருக்கமாக எழுதியுள்ளார். இவ் ஆய்வுத்திட்டத்தின் முதன்மைப் பதிப்பாசிரியர் வரைந்த ‘உலகம்

பரவிய தமிழின் வேர்-கல்' நூலில் 'காந்து' தமிழ்ச்சொல்லின் வரலாறு விரிவாக ஆய்ந்து எழுதப்பட்டிருக்கின்றது.

'கல்' என்னும் ஒரு தமிழ்வேர், ஆறு அடிப்படைப் பொருள்களைக் கொண்டது. கருமை, கூட்டம், செலவு, கூர்மை, வெப்பம், துளை என்பன அவ் ஆறு பொருள்கள். இவ் ஆறு வேர்ப்பொருள்களும் சொல்லாலும் பொருளாலும் ஒன்றுள் ஒன்றாக உறவுடையன. கருமைக்கருத்தில் கூட்டக்கருத்தும், கூட்டக்கருத்தில் செலவுக்கருத்தும், கூர்மைக்கருத்தும், வெப்பக்கருத்தும், துளைக்கருத்தும் பிறக்கும் உண்மையின் அடிப்படையில் இவை உறவுடையன ஆயின. இவற்றின் விரிவை, ஆயிரம் பக்க அளவிலான அந் நூலில் காணலாம்.

'கல்-கற்றை' எனக் கூட்டக் 'கல்' சொல் தமிழில் உண்டு. இக் 'கல்' சொல்லிற்குச் 'செறிவு' என்பது பொருள். இச் செறிவுப் பொருளாகிய 'கல்' சொல், 'கல்+து – கது, கத, கதகதப்பு' என வெப்பப்பொருள் சொற்களைப் பிறப்பிக்கும். 'கது, கத' என்னும் சொல்லே, 'கதம்' என நெருப்பாக எரிக்கும் சினத்தைக் குறிக்கும் சொல்லையும் அளிக்கும். 'கல்' ஆகிய இக் கூட்டக் கருத்துவேர், 'கல்-கன்-கனல்' எனவும் 'கல்-கள்-காள்-காளம்-காளவாய்' எனவும் வெப்பச் சொற்களை உருவாக்கும். இக் கூட்டக் 'கல்', 'கல் – கால்' என நீண்டு, 'கால்+து-காந்து' என நெருப்பினைக் குறிக்கும் சொல்லையும் 'காந்து-காந்தள்' என நெருப்பின் நிறமொத்த செங்காந்தள் பூவினையும் தமிழில் குறிப்பதுண்டு. இவ்வாறு, கூட்டக்கருத்தில் வெப்பக்கருத்து பிறக்கும் உண்மையைப் பல்வேறு கூட்டக்கருத்துச் சொற்கள், வெப்பக்கருத்துச் சொற்களாக மாறுவதை 'கல்' நூலில், ஒப்புநோக்குச் சான்றுகளாக நிறைய எடுத்து விளக்கியுள்ளோம்.

'அல்' என்னும் ஒரு கூட்டக்கருத்து வேர், 'அல்-அன்-அனல்' எனவும் 'அல்-அள்-அழல்' எனவுமாகி வளர்ந்த வரலாறு எல்லாம் அந் நூலில் விளக்கப்பட்டுள்ளது. 'புல்லுதல்' என்னும் கூட்டக்கருத்துவேர்,

‘புல்-புள்-புளு-புழு-புழுங்கு’; ‘புல்-புள்-புளு-புழு-புழுங்கு-புழுக்கம்’ என வெப்பப்பொருள் சொற்களைத் தோற்றுவிக்கும். தமிழ் ஓர் இயன்மொழி ஆதலால், மக்கள் உழைப்பில் உருவான மூலமொழி ஆதலால், அதன் வரலாற்றை இவ்வாறு அறிவியல் போல், தெளிவாக விளங்கிக்கொள்ளவும் விளக்கிச்சொல்லவும் வாய்ப்புகள் நிரம்ப இருக்கின்றன.

‘காந்து’ என்னும் இத் தமிழ்வேர், ‘ candle, candid, candidate’என்ற மேலை இந்தோ-ஐரோப்பியச் சொற்களையும், ‘காந்து –cand’எனக் ‘ககர-சகர’ மாற்றத்தில் ‘cand’என்பதொரு கீழை இந்தோ-ஐரோப்பிய வடிவத்தையும் பெற்று அம் மொழிகளில் சொற்களாகி இருப்பதைக் காணலாம்.

இவ் வெப்பக்கருத்துச் சொற்கள் பலவற்றுக்கு உரிய மேலை இந்தோ-ஐரோப்பிய வேராக, *skand (to glow, to shine)என்பதைக் கீற்று காட்டுகிறார். இம் மேலை இந்தோ-ஐரோப்பிய வேருடன் உறவுடைய வேராக ‘cand’என்ற சமற்கிருத வேரினைக் கீற்று சேர்த்துரைத்துள்ளார். அவ்வாறே, கீழை இந்தோ-ஐரோப்பியச் சமற்கிருத வேர்ச்சொல் அறிஞர் மானியர் வில்லியம்சு, ‘chandra’, ‘chand’போன்ற சொற்களுக்கு ‘cand’என்ற வேரினைக் காட்டி, அதனோடு தன் இனமொழியாகிய மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் புழங்கும் இலத்தீனின் ‘candeo, candela’சொற்களை இணைத்து உரைத்துள்ளார். கீழை, மேலை இந்தோ-ஐரோப்பிய அறிஞர்கள் காட்டுகின்ற கற்பித வேர், *kand (to shine)என்பதாகும். இங்குச் சுருக்கமாக நாம் உரைத்த ‘கல்’சொல் வரலாற்றில், ‘காந்து’, ‘காந்தள்’ பிறந்த வரலாற்றை இந்தோ-ஐரோப்பிய உலகம் துளியளவும் பார்வை செலுத்தாமல் கற்பித வடிவங்களிலேயே தங்கள் வேரினைக் கண்டு எழுதிவிட்டது. தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் உறவிற்கு இவ்வாறு ஏராளமான சான்றுகளை மூலமொழி ஆய்வு வெளிச்சத்தில் தமிழிலிருந்து நம்மால் கண்டெடுத்து உரைக்கமுடிகிறது.

ஒருமை–பன்மை(singular – plural)

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியர் காலம் தொட்டு, நாம் அறிந்த சொல், ‘ஒருமை-பன்மை’ என்னும் இலக்கணக் கலைச்சொல். ‘ஒருமை-பன்மை’க்கு ஒத்த ஆங்கிலச் சொற்கள் ‘singular-plural’என்பனவாகும். வேறுபாடற்ற ஒத்த நிலையைக் குறிக்கும் தமிழின் ‘சமம்’ சொல், இந்தோ-ஐரோப்பியத்தில் ‘அகர-எகர’ மாற்றத்தில் *semஎனத் திரிந்து ‘one; as one, together with’எனத் தமிழின் வேர்ப்பொருளையே கொண்டுள்ளது. இந்த *semவேரிலிருந்து ஒருமையைக் குறிக்கும் ‘ single, singular’போன்ற சொற்கள் மேலை இந்தோ-ஐரோப்பியத்தில் பிறந்துள்ளன. ‘single’சொல் பிறப்பு வரலாற்றை *semவேரிலிருந்து இணையவழி வேர்ச்சொல் அகராதி வருவித்து உரைத்துள்ளது.

single

early 14c., "unmarried," from Old French *sengle*, *sangle* "alone, unaccompanied; simple, unadorned," from Latin *singulus* "one, one to each, individual, separate" (usually in plural *singuli* "one by one"), from PIE **semgolo-*, suffixed (diminutive?) form of root ***sem-** (1) "one; as one, together with."

இந்த ‘single’சொல்லுடன் உறவுடையதே ஒருமையைக் குறிக்கும் ‘singular’சொல். இதனையும் இணையவழி வேர்ச்சொல் அகராதியில் காணலாம்.

singular

mid-14c., *singuler*, "alone, apart; being a unit; special, unsurpassed," from Old French *singuler* "personal, particular; distinctive; singular in number" (12c., Modern French *singulier*) or directly from Latin *singularis* "single,

solitary, one by one, one at a time; peculiar, remarkable," from *singulus* "one, one to each, individual, separate" (see **single** (adj.)).

ஒல்–ஒன்று; ஒல்–ஒர்–ஒருமை

'ஒருமை' என்னும் எண்ணுப்பெயர், 'ஒல்-ஒல்லுதல்' என்னும் பொருந்துதல் பொருள்தரும் வேரிலிருந்து, ஒல்-ஒல்+து-ஒன்று; ஒல்-ஒர்-ஓர்; ஒல்-ஒல்+கு-ஒக்கு-ஒக்க-ஒக்கட்டி; ஒல்-ஒன்-ஒன்னு-ஒண்ணு என்றெல்லாம் தமிழிலும் திரவிட மொழிகளிலும் பலப்பல சொற்கள் தோன்றியுள்ளன. இவ்வாறு 'ஒல்' என்னும் வேர், ஒல்-ஒர்-ஒரு-ஒருமை என 'மை' ஈற்றுப் பண்புப்பெயராகத் தமிழில் 'ஒருமை'ச் சொல்லினைத் தோற்றுவித்தது. 'ஒல்' என்னும் வேரிலிருந்து பிறந்த, 'ஒல்-ஒன்-ஒன்னு' என்னும் தமிழ்வடிவம், ' unus'என இலத்தீனில் திரிந்து ஆங்கிலத்தில் 'one'எனவும் ' uni-, union, universal, unity'எனவும் பற்பல சொற்களை உருவாக்கியதைப் பாவாணர் விளக்கினார். அவரின் 'ஒன்று' சொல் விளக்கத்தை அமெரிக்கச் சமற்கிருதப் பேராசிரியர் லெவிற்று, தம் ஆய்வில் ஏற்று ஒப்புதல் அளித்துள்ளார்.

Ta. *onru* for instance while it does not appear in classical Tamil, is pronounced generally in modern colloquial Tamil as*on@n@u*. In the Brahman dialect of South Arcot district as spoken to non-Brahmans, while Ta. *onrarai* is pronounced*on@d@re*. Ta.*on@t@i*is clearly derived from a verbal form related to Ta. *onru (onri-)*, just as Ta.*ot@t@ai*clearly is the same form as Ta.*orrai*.(Collected papers in Dravidian, p.11)

மேற்சுட்டிய 'ஒல்' என்னும் வேரிலிருந்து பிறந்த 'ஒல்-ஒல்+கு-ஒக்கு-ஒக்க' என்னும் சொல், சமற்கிருதத்தில் 'ஒகர -எகர' மாற்றத்தில் 'ஒக்க-எக்க' என்றாகிச் சமற்கிருதத்தில் 'எ'கரம் இன்மையால் 'ஏ'காரமாகத் திரிந்து 'ஏக்க' என்ற ஒன்றைக் குறிக்கும் சொல்லினை ஈன்றது என்பார் பாவாணர். 'ஏக்க'வாகிய இச் சொல்லிலிருந்தே

ஒன்றுபடுதலைக் குறிக்கும் சமற்கிருத ‘ஐக்கிய’ சொல் தோன்றியது. இவ்வாறு, ‘ஒல்’ என்னும் வேரிலிருந்து பிறந்த ‘ஐக்கிய’ சொல்லும், ‘ஒன்று-ஒன்னு-one-unus-unity’ என்னும் மேலை இந்தோ-ஐரோப்பியச் சொற்களும் தமிழின் ‘ஒல்’ ஆகிய வேரிலிருந்து தோன்றிய வரலாறு தமிழ்-இந்தோ-ஐரோப்பிய உறவினை ஆழமாக விளக்கிக்காட்டுகின்றது.

‘united nations’, ‘ஐக்கிய இராச்சியம்/ஏக் ராஜ்’, என்றெல்லாம் கூறும் தொடர்களில் ‘united’சொல்லும் ‘ஐக்கிய’ சொல்லும், இவ்வாறு தமிழின் ‘ஒல்’ வேர்வழித் தோன்றியிருக்க, ‘nation’ஆகிய நாட்டினைக் குறித்த சொல், தமிழின் ‘ஈன்’ சொல்வழி ‘ஈன்-gene-gna-nation’எனப் பிறப்போடு ஒட்டி உருவான பெயராக அமைந்தது. ‘அரசன்’ என்னும் தமிழ்ச்சொல், ‘ராஜ்’, ‘ராச்சிய’ எனக் கீழை இந்தோ-ஐரோப்பியத்தியலும் ‘region, regiment, regina’என மேலை இந்தோ-ஐரோப்பியத்திலும் பல சொற்களைத் தோற்றுவித்தது. கீழை இந்தோ-ஐரோப்பிய உலகினர் ‘ஐக்கிய இராச்சியம்’ எனவும் ‘ஏக் ராஜ்’ எனவும் சொல்லும் வரலாற்றை இவ்வாறு தமிழிலிருந்து உருவாகியிருப்பதைக் கீழை இந்தோ-ஐரோப்பியர்கள் அறியவேண்டும். ‘united nations’என்பதன் வரலாற்றை மேலை இந்தோ-ஐரோப்பியர்கள் இவ்வாறுதமிழ் வேரிலிருந்து விளங்கிக்கொள்ளவேண்டும்.

புல் –plural

‘புல்லுதல்’ என்னும் பொருந்துதல் கருத்து வேர், ‘உகர-அகர’த் திரிபில், ‘பல்-பல்+து-பற்று’ எனத் திரிந்து, கூட்டப்பொருள் தரும் சொல்லாக மாற்றம் பெற்றது. ‘புல்’ வழிப் பிறந்த இப் ‘பல்’ என்னும் சொல்லே, ‘பல்-பல’ எனவும் ‘பல்-பன்-பன்மை’ எனவும் கூட்டக்கருத்தில் மிகுதிக்கருத்துத் தோன்றும் என்பதன் அடிப்படையில் ‘பல, பன்மை’ போன்ற சொற்களைத் தோற்றுவித்தது. இவ்வாறு, தமிழில் தோன்றிய ‘பல’ என்னும் சொல், மேலை இந்தோ-

ஐரோப்பிய மொழிகளில் *pele (to fill)என்னும் ஓர் முந்து இந்தோ-ஐரோப்பிய வேராக வடிவம் பெற்றது. 'pele'என்ற இவ் வேரிலிருந்து பிறந்ததே பன்மையைக் குறிக்கும் ' plural'என்னும் ஆங்கிலச் சொல்லும் ஆகும்.இவ் வேரில் பிறந்த சொற்களில் குறிப்பிடத்தக்கன'poly-, polyclinic, polygon, plus, plural, plenty, fill, full, folk' என்பன. அறிஞர் கால்டுவெல், தமிழின் 'பல' – இலத்தீனின் plusசொல்லுறவினைத் தம் ஆய்வில் எழுதியுள்ளார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது (A Comparative grammar of Dravidian or south Indian family of languages, p.654).

15. கண் –*gno - know; விழி – விடி – *weid - wisdom

தமிழில் ஆறு புலன்களின் வழியால் அறிவினைப் பெற்ற அடிப்படையில் அறிவு, 'ஆறறிவு' எனப்பட்டது. 'knowledge', 'wisdom'என்பன அறிவினைக் குறிக்கும் மேலை இந்தோ-ஐரோப்பிய ஆங்கிலச் சொற்கள். 'கண்' என்னும் உறுப்பு, காணுதல் தகுதி உடையது. இக் 'கண்' என்னும் தமிழ்ச் சொல்லே, அறிதல் பொருள்தரும் ' know' என்ற சொல்லிற்கு மூலம் என்று கால்டுவெல் எழுதினார். 'know'என்ற சொல், 'ledge'என்னும் பின்னொட்டினைப் பெற்றுப் பின்னர் 'knowledge'ஆனது. சமற்கிருதத்தில் 'ஞானம்' என்ற சொல்லின் அடிச்சொல் 'jna'. இந்த 'jna'சொல், 'know'சொல்லுடன் உறவுடையது என்பது இந்தோ-ஐரோப்பிய அறிஞர்களின் கருத்து.

கண் உறுப்பினைக் குறிக்கும் பிறிதொரு தமிழ்ச்சொல், 'விழி' என்பது. 'விழி'யாகிய இத் தமிழ்ச்சொல், 'புழல்-புடல்'; 'குழல்-குடல்' போல் 'ழகர-டகர' மாற்றத்தில் *weid(to see)எனத் திரிந்து தமிழின் அதே பார்த்தல் பொருள்தரும் ஓர் முந்து இந்தோ-ஐரோப்பிய வேர் ஆயிற்று. இவ் வரலாற்றினைப் பாவாணர் விரிவாக எழுதியுள்ளார்.

*weidஆகிய இவ் வேரிலிருந்தே கீழை, மேலை இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் அறிவினைக் குறிக்கும் பல சொற்கள் தோன்றியுள்ளன. இணையவழி வேர்ச்சொல் அகராதி தரும், *weidவேர்வழிப் பிறந்த இந்தோ-ஐரோப்பியச் சொற்கள் veda -I know(Sanskrit); vaeda -I know (Avestan); oida – I know (Greek); woida - I know (Doric); fis – vision fiuss - knowledge (Old Irish); witan - to know (Old English); Wissen - to know (German); vysti-to see(Lithuanian); vidya - I see (Bulgarian); widzieć-to see(Polish); videt' - to see, vest' –news (Russian);vedat' -to know (Old Russian)ஆகியன.

*weidஎன்னும் இவ் வேரிலிருந்து பிறந்தனவே சான்றுகளைக் குறிக்கும் 'evidence(ex+videre),witness' சொற்களாகும். 'ஒடிந்த இடை – ஒசிந்த இடை ; மருப்பு ஒடித்தவன் – மருப்பு ஒசித்தவன் ' போன்ற இடங்களில் 'டகர-சகர' மாற்றம் நிகழும். இதே, 'ட-ச' மாற்றத்தில், 'weid-wit-video'ஆகிய சொல் வடிவங்கள், 'wisdom, wise, vision, visit, visa, view'போன்ற அறிதல் பொருள் தரும் சொற்களை ஈன்றன. அறிவினைக் குறிக்கும் 'vid-vidya'என்ற சமற்கிருதச் சொல்லும் இந்த *weidவேரிலிருந்து பிறந்ததாகவே இந்தோ-ஐரோப்பிய அகராதிகள் எழுதியுள்ளன. சமற்கிருத 'vid'வேர்வழி அறிவுடைமையைக் குறிக்கும் 'வித்தகம்' சொல்லும் அறிவுடையோரைக் குறிக்கும் 'வித்தகர்' சொல்லும் பிறந்தன. 'வித்தகம்', 'வித்தகர்' ஆகிய சொற்களைத் தமிழ் அறிஞர்களும் மற்றோரும் வட சொற்கள் என்றே எழுதுவர்.

ஆயின், இச் சொற்கள் 'விழி'யாகிய தமிழ்வேர், *weidஎன ஓர் முந்து இந்தோ-ஐரோப்பிய வேராக மாறிற்று என்றும், அவ் வேர்வழி உருவானவனையே சமற்கிருதச் சொற்கள் போன்று காட்சியளிக்கும் 'வித்தகம்', 'வித்தகர்'ஆகிய சொற்கள் என்றும் அறிதல்வேண்டும்.திருவள்ளுவரும், 'வித்தகர்க்கு அல்லால் அரிது'

என்ற குறளில், அறிவுடையோரை ‘வித்தகர்’ என்ற சொல்லால் குறித்துள்ளார்.

இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் ‘knowledge’, ‘wisdom’, ‘vidya’, ‘veda’ஆகிய அறிவு குறித்த சொற்கள், தமிழின் ‘கண்’, ‘விழி’ஆகிய பார்வை உறுப்புக் குறித்த சொற்களிலிருந்து பிறந்தன என்பதைத் தமிழ்-இந்தோ-ஐரோப்பிய வேர்ச்சொல் ஒப்பீட்டு ஆய்வாளர்களால் மட்டுமே அறியமுடியும். தமிழ், கீழை, மேலை இந்தோ-ஐரோப்பியத்திற்கு மூலம் என்பதை இச் சான்றுகளாலும் உணரலாம்.